* THE HON. SRI C. SUBRAMANIAM :—" The hon. the Leader of the Opposition is confusing the two issues. He is going into the merits of the case. We are concerned with the question whether we have power to legislate."

MR. SPEAKER :—" I have listened to the speeches of the Leader of the Opposition and Mr. Kurup as also the reply of the Hon. Minister to the points of order raised by them. I am of the opinion that this subject is in the State List—vide item 33, theatres, dramatic performances, etc. Regarding the other point raised, I am of the opinion that this Bill does not offend Article 19 of the Constitution, because we have a saving under clause 2 thereof. We have perfect liberty to enact such a law. If still there is any doubt, the matter may be taken up before any Court. For my ruling, I have the authority of no less a person than Sir Abdur Rahim of the Central Legislature. Speakers in England have Legal Advisers but neither in the Centre nor in the States, there are Legal Advisers to Speakers. If it is a court, two parties stand up and argue their cases and the Judge gives his decision. A Speaker should not and cannot be expected to give his ruling off-hand. Of course, I give my ruling and if there is doubt, hon. Members may go to courts."

SRI P. RAMAMURTHI :—" May I make a suggestion, Sir? In order to remedy this state of affairs, I would request the Government to make provision in the next Budget for the appointment of a Legal Adviser to the Speaker. If that is not possible, the Advocate-General may be invited to be present in the House to reply to the arguments put forth by Members and then the Speaker may give his ruling."

MR. SPEAKER :—" The Legal Adviser gives advice in the Chamber and not in the House."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" All the Law Officers of the Government and the Law Department are at the disposal of the Speaker for this purpose."

[7th December 1954

* SRI S. SWAYAMPRAKASAM :—" On a point of order, Sir. You have given your ruling with reference to the admissibility of the motion under Article 19 of the Constitution. I am on some other point. The Bill in its Statement of Objects and Reasons says that there is already an Act—the Dramatic Performances Act, 1876—in force. I know what Article 372 says :

'(1) Notwithstanding the repeal by this Constitution of the enactments referred to in Article 395 but subject to the other provisions of this Constitution all the law in force in the territory of India immediately before the commencement of this Constitution shall continue in force therein until altered or repealed or amended by a competent Legislature or other competent authority.

(2) For the purpose of bringing the provisions of any law in force in the territory of India into accord with the provisions of this Constitution, the President may by order make such adaptations and modifications of such law, whether by way of repeal or amendment, as may be necessary or expedient, and provide that the law shall, as from such date as may be specified in the order, have effect subject to the adaptations and modifications so made, and any such adaptation or modification shall not be questioned in any Court of law.'

The Constitution came into force in 1950. My point is that all the provisions of the present Bill are already there in the Act of 1876. The Govrnment have merely repeated those provisions here with of course one addition, and that is, there is an appeal provided for. There is no necessity for this Bill."

12.40 p.m. * THE HON. SRI C. SUBRAMANIAM :—" I am not able to understand what the hon. Member said. Article 372 of the Constitution itself provides that unless altered by the competent authority, those enactments shall continue in force. Mr. Speaker, you have been good enough to rule that this Legislature is the competent authority. Therefore I do not think what the hon. Member has tried to make out is correct."

MR. SPEAKER :—" Let the Hon. Minister continue his speech."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" The law in force regarding dramatic performances is contained in the Act of 1876. That has been in force till now. This matter came up for scrutiny by our law officers when procedings were taken challenging Section 6 of the Act in the High Court. After a careful scrutiny we were advised by our law officers that in view of the provision in the Act that the order passed by a Magistrate or in certain cases by Government within the Presidency is final and not to be appealed, or revised or reviewed, that the same was infringing the fundamental rights guaranteed to a citizen under the Constitution. Under the existing Act, I mean the Act of 1876, if the Magistrate passes an order that something is objectionable, it becomes completely final and it cannot be contested on its merits in a Court. Therefore we were advised that inasmuch as such a provision offends the fundamental rights of a citizen guaranteed under the Constitution, that that Act should be amended properly. We had two alternatives, viz., either to amend the Act properly or have another legislation to cover all dramatic performances. This was what our law officers advised us when certain proceedings were

7th December 1954] [Sri C. Subramaniam]

pending before the Madras High Court regarding the objectionable performances. That is why we had to withdraw our prosecutions. I know that there is a certain amount of misunderstanding and in fact in certain quarters mischievous propaganda has been carried on, regarding our withdrawing the prosecutions, to the effect that Government had withdrawn the prosecutions for a political purpose and with political motives. I may assure hon. Members of this House that I take full responsibility for the withdrawal of those prosecutions which were pending before the High Court and the Courts in Salem district because we considered that we could not justify the action taken under Section 6 of the Act of 1876 as it offended the fundamental rights enshrined in the Constitution. We thought that we should immediately withdraw the prosecution and enact a law in conformity with the Constitution. That was the reason for the withdrawal of prosecution. I may assure hon. Members that we were not pro-this or anti-that and so withdrew the prosecution cases. It is because of the legal opinion given to us by our law officers including the Advocate-General that we immediately took steps to withdraw the prosecution and hurried to take steps to have the Act properly amended or to have another law to replace the existing Act."

SRI P. RAMAMURTHI :—" I would request the Hon. Leader of the House to make things clear when he talks in this House. There is no use saying that the Government withdrew the prosecution cases without being pro-this or anti-that. Let him make it clear what was the position of Government at that particular time when they decided to withdraw the prosecutions."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" I thought I had made my position clear and in fact I think many hon. Members would have understood what I had said. I did refer in detail to the cause for our withdrawing the prosecution cases because that withdrawal had been referred to in certain sections of the Press in a wrong manner. I wanted to clear the misconstruction put upon Government's withdrawing the cases. For the benefit of hon. Members I shall read section 3.

" Section 3 of the Act of 1876 says :

'Whenever the Provincial Government is of opinion that any play, pantomime or other drama performed or about to be performed in a public place is—

(a) of a scandalous or defamatory nature, or

(b) likely to excite feelings of disaffection to the Government established by law in British India, or

(c) likely to deprave and corrupt persons present at the performance the Provincial Government or outside the Presidency-towns, the Provincial Government or such Magistrate as it may empower in this behalf, may by order prohibit the performance.'

Once the order is passed by the Magistrate, there is no provision under the Act to appeal against that order. The order of the Magistrate is final. If a person contravenes the order of the Magistrate, under Section 6 he is punished. There is no other go for a man who contravenes the order of the Magistrate but to pay the

[Sri C. Subramaniam] [7th December 1954

fine. This is what our law officers thought as infringing the fundamental rights guaranteed under the Constitution to all citizens. I also was personally convinced after going through the various provisions of the Act, that the same offended the fundamental rights guaranteed under the Constitution. I was convinced that there was lacuna which could be successfully argued in the High Court as affecting the fundamental rights enshrined in the Constitution. That is why we withdrew the prosecution launched (under Section 6) in Salem against a person who in spite of the order of the Magistrate in Salem prohibiting his drama, proceeded with the performance of his drama.

" I think I have made the position of the Government quite clear as to why they withdrew the prosecution. We thought that the order of the Magistrate should be appealable. That is why in the present Bill we have made a provision that when an order is passed saying that something is objectionable and therefore it should not be performed, it is open to the party to take the matter to the High Court and contend that the order was wrong. The High Court could then consider the case on its merits. That is the new provision we have made.

" The term ' objectionable ' has been considered, and what are the things that are ' objectionable ' has been stated under clause 2 of the present Bill from (i) to (vii). If a person is punished for the performance of a drama and if he considers that his drama does not come under the term ' objectionable ' as defined under the present Bill, he can challenge the order in the High Court. We have provided for appeal against the order of the Magistrate direct to the High Court and not to other higher Courts. We have not for the first time defined what is ' objectionable '. We have not coined anything new. If hon. Members were to go through the Press (Objectionable Matters) Act they would find that word for word we have repeated here in this Bill the wordings relating to ' objectionable matter ' in that Act. After all when such a powerful estate as the Press has agreed to the restrictions prescribed by the statute, or never mind whether they are agreeable or not, when the Parliament has thought it fit that those restrictions regarding ' objectionable ' matter should be imposed on a powerful estate like the Press, is it very unreasonable if this Legislature were to enact a legislation empowering the Government to prohibit dramatic performances which are objectionable. If a newspaper were to publish an ' objectionable matter ' as defined in the Press Act or publish a document or leaflet containing any ' objectionable matter ', the concerned people could be punished. When such is the case, can't we have the power at least to prohibit dramatic performances which are objectionable. Is it not reasonable to adopt the same standards and the same provisions as are applicable to the Press to dramatic performances also? I think the latter will have a greater effect.

12-50 p.m. " Therefore, in considering whether we are taking any extra powers and in declaring anything as objectionable we are acting within the limit, we will have to consider the law relating to objectionable matter pertaining to newspapers and other printed books.

7th December 1954] [Sri C. Subramaniam]

If that is considered reasonable, this is also reasonable. If that is considered unreasonable, this is also unreasonable. But if we can have that law with reference to newspapers and publication of books, I do not see any reason why we should alter it with reference to the enactment of plays alone. These matters are not after all brought for the first time now. They have been taken from various legislations which are in force even now and they constitute offences if committed. But in respect of these offences, we can take action only after their commission. There are specific provisions even now in the Indian Penal Code, which is the existing law, with regard to offending the religious feelings of any section of the people or promoting class hatred. So also there is a provision in the Criminal Procedure Code (Section 99-A) with regard to publication of books outraging the religious feelings of any section of the people. We cannot take any objection to them. These matters have been taken out from the various legislations which exist even now and it is not as if they were incorporated in the Press Act for the first time. We have done the same thing here also. Outraging the religious feelings of a certain section of the community is a penal offence for which a prosecution can be launched. Is it not necessary that we should take steps to prevent the commission of such offences, as they lead to undesirable consequences? So also promoting class hatred is another offence. I would therefore like to point out to the hon. Members that these are not new offences. These have been the subject-matter of the decisions of various High Courts, the Privy Council and recently of the Supreme Court also and the scope of the language contained in the various legislations has been well laid down. Therefore, hon. Members need not be under the impression that the things referred to in the present Bill cover a wide range of field and they are likely to create difficulties in respect of honest expression of opinion with regard to these matters. If only hon. Members, especially the Members of this House who belong to the legal profession, go through the various decisions, they will find that the scope of the interpretation has been very restricted. It is not everything that is said to outrage the religious feeling of a certain section of the people that comes within the mischief of this clause. Decisions have laid down clearly what are objectionable matters and what amounts to constituting an offence of outraging the religious feelings of the people. The same is the case with regard to the promotion of class hatred. Considering the scope of the decisions which are binding on us and which are binding on everybody, we have used the same language here also. Therefore, hon. Members need not have unnecessary apprehension that we are unduly restricting the expression of opinions which may be considered as objectionable. But if it does not offend the provisions contained in the Bill and also the language we have put in the clause, there is absolutely no question of taking any further action. We have for our guidance the various decisions of the highest Courts in our land. Taking into consideration all these things, I would request hon. Members to consider this question from a purely lawyer's point of view and from a purely objective point of view without taking into account this particular matter or that particular matter which has been agitating

our minds in the past and which is likely to agitate our minds in the future also. If only we give our serious consideration to this subject, I have absolutely no doubt that every hon. Member will agree that the things we have provided for are absolutely necessary.

" Now let me speak in justification of the hurry with which we are trying to get this measure passed. Even if we refer the Bill to a Select Committee, it should be possible for the Committee to submit its report on or before next Monday, the 13th December 1954. This is because of the various incidents that have taken place recently, which are fresh in our minds. It has therefore become necessary to get this Bill passed as early as possible. In conducting the proceedings with reference to this Bill, I would like to make an appeal to the Hon. Speaker and also to hon. Members to avoid reference to the Madurai incidents. With reference to these incidents, there have been cases filed before Courts of law in respect of the various offences committed."

MR. SPEAKER :—" Are the cases pending before law Courts or before the Enquiry Officer? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" They are before law Courts. My information is that nine cases have been filed against various persons."

MR. SPEAKER :—" Then we will avoid reference to the Madurai incidents."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" I am, however, referring to this incident just to impress upon the hon. Members the necessity to get through this measure as early as possible. Everybody should know what is objectionable and if a matter is not objectionable, it should not be possible for anybody to object to it on the ground that it offends his belief or his faith. This Legislature should decide as early as possible what is an ' objectionable performance ' and we have to take action to prevent the enactment of those plays which are objectionable. If it is not objectionable, every protection should be given to guarantee the right and the freedom recognized by the Constitution. That is why the Government are anxious to get through this Bill as early as possible and that is the justification for imposing a time-limit for the submission of the report of the Select Committee. I do agree that people are agitated to a certain extent with reference to the incidents that have taken place but not with reference to this measure as such. It is therefore better that we get through this Bill as early as possible so that people may be sure of their grounds whether they are doing anything objectionable or whether they are acting within the bounds of law. In considering that question, I am sure the Select Committee will take into consideration the entire aspects of the matter. The relevant clause is clause 2 and the question for consideration will be whether we should go too far or whether we should further restrict the scope of that clause. We have also to take into account the existing provisions of law found in various other enactments. Such questions as how to take action, when to take action and who

7th December 1954] [Sri C. Subramaniam]

should move the High Court, etc., are procedural matters. There are many technicalities which will have to be considered. If there are any difficulties in the way, I am prepared to reconsider suggestions. I have an open mind so far as the deliberations of the Select Committee are concerned and as one responsible for bringing this legislation, I am more than convinced that this is a just and necessary measure which should be passed as early as possible."

Sri P. RAMAMURTHI :—" I would like to make clear one point. With regard to the Madurai incidents it was stated that we should not refer to them because some cases are pending in the Courts and therefore it would be *sub judice*. But I would like to submit that certain allegations have been made against certain persons with regard to what those persons did on such and such a date at Madurai. While it is true that with regard to the particular conduct of certain individuals which is now the subject-matter of enquiry before the Court, it is not competent for us to refer to it, I would like to point out that the entire conduct of the Police and the way in which they behaved are not before any Court of enquiry. The conduct of the accused persons is a matter for enquiry before the Court but not the particular way in which the Police behaved there. Therefore, it is certainly open to us . . ."

Mr. SPEAKER :—" The hon. Member is making a speech. I am here to see whether it is *sub judice* or not."

* The Hon. Sri C. SUBRAMANIAM :—" Mr. Speaker, Sir, since there seems to be some misapprehension, let me clear it even now. The hon. the Leader of the Opposition has defended himself in cases but unfortunately he has not been a criminal lawyer practising in a court of law. The point is this. There are certain persons accused before the Court of Law and there is going to be a defence. After all it is alleged that they were involved in certain offences. In their self-defence, those people will have to refer to the action of the Police. That will be adjudicated upon by the Court of Law. That is the reason why I am anxious that those things should not be brought in here. They may be relevant to the prosecution and for purpose of defence also because the defence is entitled to plead everything that happened there including the Police action. Therefore my suggestion is that no reference should be made here to the action of the Police. Though some reference might be made as to how the Police acted, it will be objectionable to go further and say that there has been excess. Any expression of opinion on the floor of this House is likely to prejudice the conduct of the case." 1 p.m.

Sri T. SHANMUGAM :—" கனம் தலைவர் அவர்களே. On a point of information. " இப்பொழுது இந்த டிராமாக் களைத்தடைசெய்யும் சட்டத்தைக் கொண்டுவர சர்க்கார் ஏன் உத்தேசித்திருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை."

Mr. SPEAKER :—" உங்களுக்குப் பின்னால் பேச இடம் கொடுக்கிறேன். நீங்கள் உட்கார்ந்துகொள்ளுங்கள்."

[7th December 1954

MR. SPEAKER :—" The motion is—

'That the Madras Dramatic Performances Bill, 1954, be referred to a Select Committee with instructions to the Committee that its report be submitted on or before the 13th December 1954.'

" The list of Members of the Select Committee will be given later. Now the hon. Member Sri Swayamprakasam may move his amendment. He cannot move his first amendment which is to the effect that the Bill be referred to a Select Committee since Government have already made such a motion. His second amendment is all right and he may move it if he wants."

SRI S. SWAYAMPRAKASAM :—" Yes, Sir. I will move my second amendment. I beg to move—

'*That the Madras Dramatic Performances Bill*, 1954, *be circulated to elicit public opinion thereon.*' "

SRI S. DEIVASIGAMANY :—" Mr. Speaker, Sir, I second the amendment. In seconding the amendment, I wish to say . . ."

MR. SPEAKER :—" Let him formally second the amendment. I will allow the hon. Member to speak afterwards.

" Then there is the amendment of the hon. Member Sri T. C. Narayanan Nambiar. It requires some verbal alterations. He may move that the Bill be adjourned by one year."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" Mr. Speaker, Sir, I move—

'*That the consideration of the Madras Dramatic Performances Bill*, 1954, *be adjourned by one year.*' "

SRI M. KALYANASUNDRAM :—" I second the amendment, Sir."

MR. SPEAKER :—" The main motion as well as the amendments are before the House for discussion. I think the Hon. Minister will reply to the debate at 4 o'clock."

1-04 p.m. * SRI P. JEEVANANDAM :—" கனம் அவைத் தலைவர் அவர்களே இந்தச் சபையின் முன்னால் இப்பொழுது வைக்கப்பட்டிருக்கிற மசோதாவை நான் ஒரு முறைக்குப் பல முறைகள் படித்துப் பார்த்தேன். கனம் நிதி மந்திரி அவர்கள் இந்த மசோதாவைச் கொண்டுவரவேண்டிய அவசியம் பற்றி விளக்கிக் கூறியதை என்னுடைய கருவியையும், கருத்தையும் ஊன்றி கவனித்துக் கேட்டேன். அதற்குமேல் இந்த மசோதாவைப் பற்றி பத்திரிகைகளில் என்னென்ன அபிப்பிராயங்கள் வருகின்றன, என்னென்ன கருத்துக்கள் அதைப்பற்றி வெளியிடப்படுகின்றன என்றெல்லாம் படித்துப் பார்த்தேன். இந்த மசோதாவால் பாதிக்கப்படுகின்ற, முதல் வரிசையில் நின்று பாதிக்கப்படுகின்ற, நமது ராஜ்யத்திலுள்ள தலைசிறந்த கலைஞர்களின் அபிப்பிராயங்கள் எல்லாம் என்னவென்று கேட்டேன். நாட்டின் நல்வாழ்வை, குறிப்பாக மக்களின் நல்வாழ்வை உருவாக்குவதற்கு பிரசாரம் தேவை என்பதை நாம் அறிவோம். அதுவும் பிரசாரத்திலேயே தலை சிறந்தது நாடகப் பிரசாரம். இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் அப்படிப்பட்ட நாடகப் பிரசாரங்கள் மிக அதிகம் தேவைப்படுகின்றதொரு சூழ்நிலையில் இந்த மசோதாவைக் கொண்டுவருவதால் எதாவது

7th December 1954] [Sri P. Jeevanandam]

நன்மை உண்டா என்பதை நான் முன்னரே கூறிய பல துறைகளின் மூலம் அறிந்திருந்த பலாபலன்களையும் பொறுத்திவைத்துப் பார்க்கின்ற பொழுது இந்த மசோதா நாட்டின் நல்வாழ்வுக்கே குந்தகம் விளைவிக்கக் கூடியது. இதைக் கொண்டுவர முயற்சிப்பதே நமது துரதிருஷ்ட வச மானதாகும் என்று எடுத்துக் கூற விரும்புகிறேன், காரணங்கள் ஒவ் வொன்றாகச் சொல்லி.

"கனம் நிதி மந்திரி அவர்கள் இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று பிரேரிக்கின்ற காலத்தில் 'இது மிக சாதாரண மசோதா, இதைக்கண்டு யாரும் அஞ்சவேண்டியதில்லை' என்று சொன்னார். இந்த மசோதாவிலுள்ள 15 ஷரத்துக்களுக்குள்ளேயே குரவளையைப் பிடித்துவிடுவதால் அஞ்சவேண்டியதில்லை என்கிறார் போலி ருக்கிறது. அந்த ஷரத்துக்களைப் படித்தாலே போதும். மருந்தில்லாமல் பேதியாகும் போல் இருக்கிறது. (சிரிப்பு.) இந்த மசோதா என்ன நோக்கத் திற்காகக் கொண்டுவரப்படுகிறது என்று சொல்லும்போது, '1876-ம் ஆண்டிலேயே The Dramatic Performances Act கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு இப்போது 80 ஆண்டு களுக்கு மேலாகிவிட்டதாகையால் அது மிகப் பழைய சட்டமாகப் போய் விட்டது. அதற்குப் பிறகு அரசியல் அமைப்பு ஏற்பட்டதன் காரணமாக பல மாற்றங்கள் நாட்டிலே ஏற்பட்டுவிட்டன. **Conditions have materially changed since then, especially after the commencement of the Constitution. Many of the provisions of the Act are unsatisfactory.** ஆகவே அந்தப் பழைய சட்டத்தைக் கொண்டு நடவடிக்கைகள் எதுவும் எடுக்க முடியாது என சட்ட நிபுணர்கள் சொல்லிவிட்டதால் தற்போது வேறு ஒரு புதிய சட்டம் கொண்டுவருகிறோம். புதிய மாறுதல்களுக்குத் தகுந்தபடி புதிய சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதைக்கொண்டு வரக்கூடிய உரிமையும் எங்களுக்கு இருக்கிறது. இதில் எதுவும் குற்ற மில்லை. இதை எல்லோரும் ஆதரிக்கவேண்டும்' என்ற தோரணையில் நிதி மந்திரி அவர்கள் பேசினார். மேலும் அவர் 'இது ஏதோ புதிய சட்டம் என்று யாரும் எண்ணிவிடவேண்டாம். பார்லிமெண்டில் பிரஸ் அப்ஜெக்ஷனபல் ஆக்ட் பாஸ் ஆகவில்லையா அதைப்போன்றதே தான் இது. பத்திரிகையில் எழுதக்கூடாது என்று தடை செய்வதைப் போலவே நாடகங்கள் நடிக்கக் கூடாது என்று சட்டம் செய்கிறோம்' என்று சொன்னார். அவர் சொல்லுகிற, வாதப்படி இது மத்திய சர்க்கார் போட்ட சட்டத்தை ஒட்டியதாகவே இருப்பதால் இந்தச்சட்டத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமே தவிர இதை எதிர்ப்பதில் பயனில்லை என்பது போலப் பேசுகிறார். அதை ஏற்றுக்கொள்ள முடியுமா என்றும் பார்ப்போம்.

"அடுத்து மதுரையைப் பற்றி குறிப்பிட்டு, 'இந்த மாதிரியானதொரு சட்டம் எங்கள் கையிலிருந்திருந்தால் மதுரையில் அப்படிப்பட்ட விபரீதம் எதுவும் நடந்திருக்காது. இந்தச் சட்டம் இல்லாததால்தான் அந்தமாதிரி யான நாடகங்களைத் தடை செய்ய முடியாமல் சில இடங்களில் கோர்ட்டி லிருந்து சர்க்கார் போட்ட கேஸையே வாபஸ் பெற வேண்டி வந்தது' என்று சொல்லுகிறார். அதற்காக கொண்டுவரப்படுகின்ற சட்டத்திலே ஒன் றின்பின் ஒன்றாக எவைகளெல்லாம் தடை செய்யத்தக்கன என்று ஒரு 7 ஷரத்துகளைச் சொல்லுகிறார் அந்த மசோதாவில். இந்த மாதிரியாக ஒரு சட்டம் இருந்தால்தான் நாடகங்களிலே விபரீதக் கொள்கையைப் பிர சாரம் செய்வதைத் தடுக்க முடியும் என்றும் பேசுகிறார். அது நியாயமா என்றும் பார்ப்போம்.

"மூன்றாவதாக, இந்தச் சட்டம் இல்லாமலேயே இருந்தாலும் ஆட்சே பணைக்குரிய விஷயங்களை ஏற்கனவேயுள்ள வேறு பற்பல சட்டங்கள் மூல மாக தடுக்கமுடியும்; இருந்தாலும் அந்தந்த சட்டங்களிலே சில குறை பாடுகள் இருக்கின்றன; ஆகவேதான் அந்தந்த சட்டங்களின் நோக்கங்க ளெல்லாவற்றையும் சேர்த்து ஒரு சட்டமாகக் கொண்டு வந்திருக்கிறோம் என்ற காரணத்தை அமைச்சர் அவர்கள் கூறுகிறார்." 1-10 p.m.

THE HON. SRI C. SUBRAMANIAM :—"நான் அதுமாதிரி கூறவில்லை."

* SRI P. JEEVANANDAM :—" இந்த விஷயத்தில் சட்ட நுணுக்கங்களை பார்க்கவேண்டுமென்றும் சொல்லப்பட்டது. சட்டம் ஒரு கழுதையைப் போன்றது. முன்னே போனால் கடிக்கும், பின்னே போனால் உதைக்கும், மற்ற இரண்டு பக்கங்களும் போனால் இடிக்கும் என்று சொல்லலாம். Objective point of view-ஐப் பார்க்கவேண்டுமென்று அவர் சொன்னார். இந்தச் சட்டம் கொண்டு வரவேண்டிய அவசியம் இல்லை. துரதிருஷ்டவசமாக அமைச்சர்கள் அவர்கள் இதைக் கொண்டு வந்திருக்கிறார். Objective point of view-ஐ அமைச்சர் அவர்களும் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" நாட்டுக்கு சுயராஜ்யம் வந்து ஏழாண்டுகளாகிவிட்டன. பழைய நாடகச் சட்டம் இயற்றப்பட்டு இப்பொழுது 80 வருஷங்களாகிவிட்டன. இப்பொழுது கலைத் துறையில் நம்முடைய ராஜ்யம் எந்த நிலையில் இருக்கிறதென்பதைக் கவனித்துப் பார்க்கவேண்டும்மென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில் சென்ற எண்பது வருஷங்களில் நாடகமானது எப்படி வளர்ந்து வந்திருக்கிறதென்பதைப் பார்க்கவேண்டும். அதை நாம் பார்ப்போமானால் நாடகத்துறையில் மக்களுடைய முற்போக்குக் கருத்துக்கள்—முற்போக்கு கருத்துக்கள் என்று நான் குறிப்பிடும்போது வளர விரும்புகிற மக்கள், வாழ விரும்புகிற மக்கள் அவர்களுடைய கருத்துக்களைப்பற்றி குறிப்பிடுகிறேன்—மேலும் மேலும் நாடகத்தில் பிரதிபலிப்பதை நாம் பார்க்க முடிகிறது. மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை அவர்களுடைய 'மனோன்மணீயம்' என்ற நாடகத்தில் 'நாட்டன் பில்லா நடைப்பிணம்' என்று சொல்லியிருக்கிறார்கள். 'பாணபுரத்து வீரன்' அல்லது 'தேசபக்தி' என்ற சாமிநாத சர்மாவின் நாடகமும், கிருஷ்ணசாமி பாவலருடைய 'கதிரின் வெற்றி' 'பதி பக்தி' ஆகிய நாடகங்களும் நாட்டிலே மக்கள் முன்னேறுவதற்கும், நல் வாழ்வு பெறுவதற்கும், விடுதலை பெறுவதற்கும் தங்கள் போராட்டங்களிலே வெற்றி பெறுவதற்கும் உரிய அடிப்படை எண்ணங்களையும் கருத்துக்களையும் பிரதிபலிப்பனவாக இருந்ததால் அன்று இவை தடை செய்யப்பட்டன. விஸ்வநாத தாஸ், எம். ஜி. நடராஜ பிள்ளை ஆகிய சிறந்த காங்கிரஸ்காரர்களாயிருந்த நடிகர்கள் பலர், நாட்டின் வாழ்வுக்காக, மக்களின் முன்னேற்றத்திற்காக, நாடகக் கலையில் முற்போக்கான சீர்திருத்தங்களைக் கொண்டுவந்து புகுத்தியபோது, தேசீய பாடல்கள் பாடிய போது அன்றைக்கிருந்த அரசாங்கம் இவைகளுக்குத் தடை விதித்தது. அந்தத் தடைகள் நிலைக்கவில்லை. தடைகள் உடைக்கப்பட்டன. ஆகவே மக்களின் முற்போக்குக் கருத்துக்களுக்கு, மக்களது முற்போக்குக் கொள்கைகளுக்கு யார் எப்படித் தடை விதித்தாலும், அந்தத் தடைகள் தகர்த்தெரியப்படும் என்பதை நாம் அறியலாம். அதைக் கொஞ்சங்கூடப் பார்க்காமல் அந்த சர்க்காரைப் போலவே முற்போக்குக் கருத்துக்களுக்குத் தடை விதிக்கிறது இப்பொழுது இருக்கிற சர்க்காரும்.

" இந்த மசோதாவைக் கொண்டுவரும்போது, 'இதைக்கண்டு பயப்பட வேண்டியதில்லை' என்று மந்திரி அவர்கள் சமாதானம் சொன்னார். ஆனால், இந்தச் சட்டம் எந்த நாடகங்களையெல்லாம் தடை செய்யும் என்று சொல்லும்போது ஏழு பிரிவுகள் கொடுத்திருக்கிறார்கள்:—

(1) சர்க்காரை பலாத்காரமாகக் கவிழ்த்தல், சர்க்காரின் அடிப்படையை அசைத்தல் ;

(2) கொலை, நாச வேலை, பலாத்கார நடவடிக்கைகளைச் செய்யும்படி தூண்டுதல் ;

(3) உணவுப் பண்டங்கள் அல்லது அத்தியாவசியப் பண்டங்களின் விநியோகத்தில் தலையிடுதல் ;

(4) ராணுவப் போலீசின் கட்டுப்பாட்டைக் குலைத்தல் ;

(5) பல்வேறு பகுதி மக்களிடையே பகைமையையும், துவேஷத்தையும் தூண்டுதல் ;

(6) மதத்தையோ, மத நம்பிக்கைகளையோ புண்படுத்தி, மத உணர்ச்சிகளைப் புண்படுத்தல் ;

(7) பயமுறுத்தல் போன்றவை.

7th December 1954] [Sri P. Jeevanandam]

"மத உணர்ச்சியைப் புண்படுத்தல் என்று வரும்போது 'தார்மிக ஹிந்து' வின்படி மகாத்மா காந்தியும் இந்தச் சட்டத்திற்கு இரையாக வேண்டும். மகாகவி சுப்ரமண்ய பாரதியும் இந்தச் சட்டத்திற்கு இரையாகவேண்டும். ஜவஹர்லால் நேருவும், காங்கிரஸ் மந்திரி சபையும்கூட இந்தச் சட்டத்திற்கு இரையாகவேண்டும். 'புண்படுத்தல்' என்றால் ஜாதியால், மதத்தால், கடவுள் விவகாரத்தால் இந்த நாட்டிலே பல பிரிவுகள் இருக்கிறபோது தொழிலாளி, முதலாளி, விவசாயி, நிலச் சுவாந்தார், முஸ்லிம், இந்து, வட நாட்டான், தென் நாட்டான், மேல் ஜாதிக்காரன், தாழ்த்தப்பட்ட ஜாதிக்காரன், உடையவன், இல்லாதவன் என்றெல்லாம் கிளர்ச்சிகளும் போராட்டங்களும் நடக்கும்போது எந்தப் பகுதி மக்களுடைய மனத்தைப் புண்படுத்தல் என்பதைக் கவனிக்கவேண்டும். யாருடைய மதத்தை, மத உணர்ச்சியை இழிவு செய்து மனதைப் புண்படுத்தக்கூடாதென்பது விளங்கவில்லை.

"மகாத்மா காந்தி 1942-ம் வருஷத்தில் லூயி பிஷருக்கு ஒரு பேட்டி அளித்தார். அப்பொழுது—

'நீங்கள் கோருகிற சுயராஜ்யம் வந்ததும் விவசாயிகளுடைய நிலைமை என்ன ஆகும்' என்று லூயி பிஷர் கேட்டார்.

'நிலத்தை எடுத்துக்கொள்வார்கள்,' என்று காந்திஜி சொன்னார்.

'நஷ்ட ஈடு கொடுக்காமலா ?' என்று லூயி பிஷர் இடைமறித்தார்.

'ஆம்; இந்தியர்களால் நஷ்ட ஈடு கொடுக்க முடியாது; ஆகவே எடுத்துக்கொள்வார்கள்' என்றார் காந்திஜி.

'எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் அவர்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை; அவர்களாகவே எடுத்துக் கொள்வார்கள்.'

'குழப்பம் வந்தால் ?'

'பத்து பதினைந்து நாட்களில் அதை கண்ட்ரோல் பண்ணிவிட முடியும்' என்றார் காந்திஜி.

"இந்த காந்திஜியின் கொள்கைகளை உள்ளத்திலே புதைத்துக் கொண்டு ஒருவன் வெளிவருகிறான். பெரு நிலச்சுவாந்தார்களால் சுரண்டப் படுகிற ஏழை விவசாயிகளைப் பார்க்கிறான். உழைத்துப் பாடுபடும் விவசாயி உண்ண உணவின்றி தவிப்பதைக் காண்கிறான். அவன் உள்ளத்திலே கொண்ட கொள்கையும் நாட்டிலே நடக்கக் கூடிய நிலவரத்தையும் கண்ணால் பார்க்கும்போது, அந்த விவசாயியை ஒரு பாத்திரமாக வைத்து ஒரு கதையை சிருஷ்டிக்கிறான், நாட்டின் நல்வாழ்வுக்காக. இந்த நாடகம் தடை செய்யப்படுமா ? அப்படியென்றால் காந்திஜி குற்றவாளியா, இல்லையா ? நாட்டு மக்களின் நலனுக்கு, நலிந்து வருகின்ற மனித சமுதாயத்தை உயர்த்தவேண்டுமென்றால் கலைப் பெருக்கமும், கவிப் பெருக்கமும் நாட்டிலே வெள்ளம் போல் பெருகினால் தான் முடியும் என்று மகா கவி பாரதியார் சொல்ல வில்லையா ?

"உள்ளத்தில் உண்மை யொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப் போல் கலைப் பெருக்கும்
கவிப் பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வர்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்."

பள்ளத்திலே வீழ்ந்திருக்கும் குருடர்களெல்லாம் விழி பெற்றுப் பதவி கொள்ளவேண்டுமென்றால் வெள்ளத்தின் பெருக்கினைப் போல் கலைப் பெருக்கும் கவிப்பெருக்கும் நாட்டிலே உண்டாகவேண்டும். உள்ளத்திலே உண்மையொலி பெற்றுள்ள நாடக ஆசிரியன்தான் அந்தப் பெரும் எண்ணத்தை சிருஷ்டிக்கவேண்டும். அதை நாடகக் கலைஞர்கள் நடித்துக் காட்டி, மக்கள் உள்ளத்திலே பதியும்படி செய்யவேண்டும்.

[Sri P. Jeevanandam] [7th December 1954

"விவசாயிகள் நஷ்ட ஈடு கொடுக்காமலேயே நிலத்தை எடுத்துக் கொள்வார்கள் என்று காந்திஜி அன்று சொன்ன கருத்தைக்கொண்டு சிருஷ்டி செய்த ஒரு கதையை நாடகமாக நடத்தினுர்களென்றுல், அப்பொழுது இந்தச் சட்டம் அவர்களது குரல்வளையைப் பிடிக்கும். அதை மறுக்க முடியாது. கே. ஆர். ரங்கராஜுவின் நாடகங்கள் ஜாதி வித்தியாசத்தைப் போக்கவேண்டுமென்று எழுதப்பட்டிருக்கின்றன. சந்திரகாந்தா, ராஜேந்திரன் போன்ற நாடகங்கள் மடாதிபதிகளின் கொடுமைகளைச் சித்தரிக்கின்றன. வடுவூர் துரைசாமி அய்யங்கார் எழுதிய 'மேனகா' நாடகத்தை எடுத்துக்கொண்டால் பிராம்மணருடைய கொடுமைகளையும் அந்தச் சமூகத்திலுள்ள குறைகளையும் சித்தரித்திருக்கின்றது. அவைகளையெல்லாம் நாடகமாக நடிக்கவேண்டுமென்றுல், இந்தச் சட்டம் குரல்வளையைப் பிடிக்கும். அதை மறுக்கமுடியாது. அவர்கள் துவேஷத்தைக் கிளப்புவதற்காகவோ ஜாதி வித்தியாசத்தை உண்டுபண்ணுவதற்காகவோ அல்லது சர்க்காரைக் கவிழ்த்துவிட வேண்டுமென்ற கொள்கையோடோ அந்தக் கதைகளை சிருஷ்டிக்கவில்லை. மதிப்பிற்குரிய சிறந்த தமிழ் எழுத்தாளர் காலஞ்சென்ற 'கல்கி' அவர்கள் எழுதிய 'கள்வனின் காதலி' என்னும் நாடகத்தை கும்பகோணத்தில் நடிக்கக்கூடாது என்று எதிர்த்தார்கள். அது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அந்தக் கதையிலே ஒரு பாத்திரமான கார்வார் பிள்ளையை, தம்பிரானைக் கிண்டல் செய்யும் விதத்திலே, சித்தரித்திருக்கிறுர். சமூக சீர்திருத்தத்திற்காக சித்தரிக்கப்பட்ட அந்த நாடகம் மடாதிபதிகளுக்கு சங்கடமாக இருக்கிறது. வைதீகர்களுக்குச் சங்கடமாக இருக்கிறது. இவர்களுடைய உணர்ச்சி புண்படுகிறதென்று சொன்னுல், அந்த சமூக சீர்திருத்த நாடகம் வெளிவருவது எப்படி ? சமூகக் கொடுமைகளிலிருந்து விடுபட்டு மக்கள் சீர்திருந்துவது எந்தக்காலம் ? மக்கள் முன்னேறிக்கொண்டிருக்கிற காலத்தில், மக்களது கருத்துக்களெல்லாம் முன்னேறிக்கொண்டிருக்கிற காலத்தில், விஞ்ஞானமும், அறிவு வளர்ச்சியும், பகுத்தறிவும் முன்னேறிக்கொண்டிருக்கிற காலத்தில், அந்த முன்னேற்றத்திற்கெல்லாம் பெரும் தடையாக இருக்கக்கூடிய இந்த சட்டத்தைப் போடுவதைக்கண்டு தலைசிறந்த கலைஞர்களெல்லாம் மனம் புண்படுகிறுர்கள். நாட்டு முன்னேற்றத்தில் அக்கரையுள்ள சீர்திருத்தவாதிகளெல்லாம் புண்படுகிறுர்கள்.

. "மசோதாவின் நான்காவது கிளாசின் (**Power to prohibit objectionable performances**) 4-வது உப-பிரிவில் சொல்லியிருப்பதாவது :

'*Explanation II.*—**In judging whether any performance is an objectionable performance under this Act, the effect of the words, signs or visible representations, and not the intention of the person taking part in the performance shall be taken into account.**'

நாடகத்தில் பங்கெடுத்துக்கொள்ளக்கூடிய நபர் ஒருவர் நல்ல எண்ணம் கொண்டவராக இருந்தாலுங்கூட அவரது நடிப்பிலே ஜாடை மாடையாக ஒரு சிறு வார்த்தை சர்க்காரைக் கிண்டல் செய்யக்கூடிய முறையில் அறிகுறி ஏற்பட்டாலும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். அந்த நாடகத்தையே தடைசெய்துவிடலாம் என்று சொல்லப்பட்டிருப்பது மிக மிகத் தவறுகும். ஒரு சப்-இன்ஸ்பெக்டர்கூட அந்தமாதிரியான நாடகத்தைத் தடைசெய்துவிட இடமிருக்கிறது. அந்தமாதிரி நடக்காது என்று இந்தச் சட்டத்தைக் கொண்டு வரும்போது மந்திரி அவர்கள் உறுதிமொழி அளித்தாலும்கூட, தன் மனப்போக்குக்கு ஒரு நாடகம் குற்றமென்று படுமானுல் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் சட்டத்தில் தனக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தினுல் தடை செய்யும்போது, அங்கு நிதி அமைச்சரா இருக்கப்போகிறுர் ? லோகல் சப்-இன்ஸ்பெக்டர் அப்படிச் செய்துவிட்டால் என்ன செய்வது ? அதைக் கண்டுதான் பொதுமக்களும் தலைசிறந்த நாடகக் கலைஞர்களும் பயப்படுகிறுர்கள், மனம் புண்படுகிறுர்கள்.

(The Deputy Speaker in the Chair.)

"இப்படித் தடை விதித்துவிட்டால் கலை எப்படி வளரமுடியும் ? கலைஞர்கள் எல்லோரும் சமூகத் துவேஷிகள் அல்ல. சமூகத்தைச் சீர்திருத்த, நல்லதொரு சமுதாயத்தை சிருஷ்டிக்கக்கூடிய சக்தி கலைஞர்களிடம் இருக்கிறது. சத்தியம், அன்பு, அறம் இவைகளைக் கையாண்டு நல்ல

7th December 1954] [Sri P. Jeevanandam]

முறையில் சீர்திருத்த கலைஞர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்காவிட்டால், கலை எப்படி வளரமுடியும் ? சமுதாயம் எப்படிச் சீர்திருத்தம் அடையும் ? கலைஞர்கள் நல்ல எண்ணம் உடையவர்களாக இருந்தாலும் எண்ணத்தைப் பற்றி கவலை இல்லையாம். சொல்லிலோ, ஜாடை மாடையிலோ, நடிப்பிலோ குறை காணப்பட்டால்கூட, அந்தக் குற்றத்திற்கு அவர்கள் மாத்திரம் ஆளாகவில்லை. திரை இழுப்பவன், கொட்டகை கொடுத்தவன், மற்றும் அந்த நாடகத்திற்கு உதவியாயிருந்த எல்லோரும்கூட குற்றவாளியாக தண்டிக்கப்படுவார்கள் என்று சொன்னால் அதைக் கனம் மந்திரி அவர்கள் நன்றாகக் கவனிக்க வேண்டும். இது நியாயமா என்று கேட்கிறேன்.

" நாடகத்தில் ஏதாவது ஆட்சேபணைகளைச் சொல்லி முற்போக்குக் கருத்துக்களுக்கு இடமளிக்காமலேயே தடுத்து விடவேண்டுமென்பது சர்க்காரின் கொள்கையா என்று நான் கேட்கிறேன் ? நாட்டு முன்னேற்றத்திற்கு ஒரு சிலர்தான் பாடுபடமுடியுமா ? ஐந்து வருஷத் திட்டம் வெற்றிபெறவேண்டுமானால், அதற்கு யார் முன்வரவேண்டும் என்று சொல்லும்போது கோடி கோடி கைகள், கோடி கோடி தோள்கள் சேர்ந்து நின்று இந்த நாட்டை வளப்பமுடையதாகவும் செழிப்பாகவும் செய்யவேண்டும். அதைப்போலவே இந்த நாட்டைச் சீர்திருத்தவேண்டுமென்றால், இந்த நாட்டிலுள்ள பல மக்களும் பாடுபடவேண்டும். பிரசங்கிகள், நாடகக்காரர்கள், சீர்திருத்தக் கருத்துக்களை எடுத்துக்காட்டவேண்டும். பிரசாரத்தில் தலைசிறந்தது நாடகக் கலைதான். இப்படிப்பட்ட நாடகத்திற்குத் தடைவிதிப்பதன் காரணமாக நாட்டின் முற்போக்குச் சக்திக்குத் தடை விதிக்கிறோம் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. ஜாதித் துறையில், மதத் துறையில், கடவுள் துறையில், வாழ்வுத் துறையில், பொருளாதாரத் துறையில், சமுதாயத் துறையில், குடும்பத் துறையில், தத்துவ ஞானத்துறையில், மக்களிடையே குறைபாடுகளை நீக்கி அதைச் செம்மைப்படுத்த, முழுமைப்படுத்த நாடகாசிரியர்களும், நாடகக் கலைஞர்களும் முழுப்பங்கு எடுத்துக்கொள்ளவேண்டும். அப்படி அவர்கள் செய்யமுடியாமல் இம்மசோதாவின் ஒவ்வொரு ஷரத்தும் இடையூறாக இருக்கிறது. சர்க்காருடைய எண்ணம் நல்லதாக இருக்கலாம். ஆனால், பிள்ளையார் பிடிக்கிறோம் என்று சொல்லி, அது குரங்காகி, பிசாசாக முடிந்ததைப்போல இந்தச்சட்டம் பிராணனை வாங்கக்கூடியதாக இருக்கிறது என்று வருத்தத்துடன் கூறுகின்றேன். இதைச் சர்க்கார் கவனிக்கவேண்டும்.

" இந்தச் சட்டத்தைப் பற்றி சொல்லுகின்றபோது ஒரு ஷரத்தை கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன். உங்களில் பலருக்கு சைவப் பெரியார் ஆறுமுக நாவலரைத் தெரிந்திருக்கும். அவர் எழுதியுள்ள ஒரு சைவ நாடகத்தில் மலஜலம் எங்கெல்லாம் கழிக்கக்கூடாது என்று குறிப்பிட்டிருக்கிறார். கோயில் பக்கத்தில் கூடாது, குளத்தின் பக்கத்தில் கூடாது, ரோட்டின் அருகே கூடாது, நிழலின் அருகேகூடாது, சூரியனைப் பார்த்துக் கொண்டு கூடாது என்றெல்லாம் அதிலே எழுதியிருக்கிறார். அதுமாதிரியெல்லாம் பார்க்கும்போது, வேறு எங்குதான் மலஜலம் கழிப்பது என்ற பிரச்னை ஏற்படுகிறது. அதுபோல் இங்கு வந்துள்ள சட்டங்களையெல்லாம் கவனிக்கும்போது உண்மையான உரமூட்டக்கூடிய நாடகத்தை நடத்த முடியாமல் போய்விடும். வளரும் ஜனநாயகத்திற்கு, வளரும் கலைக்கு இது உரமூட்டுவது ஆகாது." 1-20 p.m.

DEPUTY SPEAKER :—" The hon. Member has taken more time. I will allow him only one more minute. He has taken more than 20 minutes."

* SRI P. JEEVANANDAM :—" தேசீய நாடக விழாவில், நல்ல நாடகத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான பொறுப்பை நமது சர்க்காரே ஏற்றுக்கொண்டார்கள். நல்ல சிறந்த நாடகங்கள் எல்லாம் இருக்கும்போது அவைகளைத் தேர்ந்தெடுக்காமல் கிருபா அமெச்சூர்ஸ் நாடக சபையாரை தேர்ந்தெடுத்து அனுப்பி நம்முடைய நாடகசபையார் தெருக்கூத்தாடுவது போல் ஆடினர் என்று அங்குள்ள நிரூபர்களால் பத்திரிகைகளில் வெளிவரும் அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருப்பது நம்முடைய பெருந்துரதிருஷ்டமாகும். தமிழ்நாட்டிற்கும் பெருத்த ஏமாற்றமாகும். அதேமாதிரியான

நிலைமையை உண்டுபண்ணுவதற்குத்தான் இந்த சர்க்கார் இந்த மசோதாவைக் கொண்டுவருகிறார்களே தவிர, மக்களுடைய கருத்துக்குத் தகுந்தபடி, கலைக்குத் தகுந்தபடி, நாட்டின் வளர்ச்சிக்குத் தகுந்தபடி, நல்ல கருத்துள்ள நாடகங்களை கலைஞர்கள் உருவாக்குவதற்கு உதவும்படியாக அமையவில்லை என்பதை கவனத்திற்கு கொண்டுவருகிறேன். ஆகவே இந்தச் சட்டத்தை இங்கு கொண்டுவராமல் தடுக்கவேண்டும். எனக்கு நேரமில்லாததால், இது செலக்ட் கமிட்டிக்கு வருகிறபோது, அங்கு விரிவாகப் பேசிக்கொள்ளலாம் என்று இத்துடன் முடித்துக்கொள்கிறேன்."

* **Sri T. SHANMUGAM** :—" கனம் உபதலைவர் அவர்களே ! இம்மாதிரியான ஒரு சட்டத்தை சர்க்கார் கொண்டு வருவதை நான் பலமாக எதிர்க்கிறேன். இந்தச்சட்டத்திற்கு இப்பொழுது என்ன அவசியம் ஏற்பட்டது என்று பார்த்தால் ஒரே ஒரு எம். ஆர். ராதா நாடகம்.

(The Hon. Speaker resumed the Chair.)

" ராதா நாடகத்தைக் கண்டே இந்த சர்க்கார் இவ்வளவு பயந்துவிட்டால், மற்ற நாடகங்கள், மற்ற சினிமாக்கள் இன்னும் இவ்விதமானவை எவ்வளவோ நடை முறையில் நடந்து கொண்டிருப்பதைப் பார்த்தால் அவர்கள் என்ன நினைப்பார்களோ, தெரியவில்லை. எல்லோரும் முற்போக்கு அடைந்துவரும் இந்நாளில் இப்படிப்பட்ட ஒரு சர்க்கார் துரதிருஷ்டவசமாக அமைந்ததுபற்றி நான் மிகவும் வருந்துகிறேன். அஞ்ஞானம் ஒழியவேண்டும், விஞ்ஞானம் பரவவேண்டும், பகுத்தறிவு வளரவேண்டும் என்று கோடிக் கணக்கான மக்களுக்கு எடுத்துச் சொல்லும்படியான ஒரு நாடகத்தைத் தடுப்பதற்கென்று ஒரு சட்டம் கொண்டுவரப்படுவதைப் பார்த்து நான் மிகமிக வருந்துகிறேன். இப்படிப்பட்ட இந்த நாடகத்தை எதிர்ப்பவர்கள் யார் என்று முதலிலே கவனிக்க வேண்டும் ? ஒரு மகாலிங்கம் ஐயர், ஒரு வைத்தியநாத ஐயர். அவர்களைச் சேர்ந்த சில ராஷ்ட்ரீய ஸ்வயம் ஸேவக் சங்க **(R.S.S.)** கட்சிக்காரர்கள்."

The Hon. Sri C. SUBRAMANIAM :—" That is why, Sir, I made a request that these incidents and matters relating to that particular incident should not be referred to . . ."

Sri E. L. RAGHAVA MUDALIAR :—" These were published in the Press . . ."

The Hon. Sri C. SUBRAMANIAM :—" That is the very thing that led to the incident. It relates to it. It need not be referred to now. We will get sufficient opportunity to refer to it later. Because it is *sub judice* now we should not go into that matter."

Sri E. L. RAGHAVA MUDALIAR :—" There are these and various other statements also in the Press . . ."

Mr. SPEAKER :—" Let the hon. Member Sri Shanmugam continue his speech."

* **Sri T. SHANMUGAM** :—" சில **R.S.S.** கட்சியைச்சேர்ந்த குண்டர்கள்—**R.S.S.** கட்சிக்காரர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது எங்களுக்குத் தெரியும், 'ராமா, ராமா' என்று சொல்லிக்கொண்டிருந்த மகாத்மா காந்தியைச் சுட்டுக்கொன்றவர்கள்—அத்தகைய பக்திமான்கள்—இந்த நாடகத்தை எதிர்க்கிறார்கள். அதற்காக இந்த சட்ட சபையில் இத்தகைய ஒரு சட்டத்தை கொண்டு வருகின்றார்கள். ஏன் இந்த சர்க்கார் கொஞ்சம் அமைதியாக, கலவரம் இல்லாமல் நடக்கின்றது என்று பொறுக்காமல், பெரும் புயலைக் கிளப்பிவிடுவதற்காக இப்பேர்ப்பட்ட சட்டம் கொண்டுவருகின்றார்கள். இப்போது ராதா நாடகத்தைத் தடை செய்யவோ அல்லது

7th December 1954] [Sri T. Shanmugam]

குழப்பம் சொய்யவோ ஒரு நூறு, இருநூறு பேர்கள் வருவார்கள். ஆனால் நவாப் ராஜமாணிக்கம் நாடகத்தை எதிர்க்கவேண்டுமானுல் பெருவாரியாக அதாவது ஆயிரக்கணக்கான மக்கள் சேர்வார்கள் என் பதை இந்த சர்க்கார் உணரவேண்டும். அத்தகைய வேலைகளில் நாங்கள் ஈடுபட வேண்டாமென்று இருக்கின்றோமே ஒழிய, இந்தப் புராண கதை நடத்தும் இடங்களில் அதைத் தடுக்கவேண்டுமென்று நினைத்தால் அப் போது இந்தச் சட்டம் அதிகமாக பாதிக்கப்படும் அல்லவா ?

" உண்மையில் ராதா 'கீமாயணம்' நடத்தவில்லை. 'ராமாயணம்' நடத்துகிறார். அவர் வால்மீகி ராமாயணத்தைப் பின்பற்றி நடத்துகிறார். வால்மீகி ராமாயணத்தை இந்த சர்க்கார் நன்றாகப் படித்துப் பார்க்கவேண் டும். ராதா ராமாயணத்தை எப்படி நடிக்கிறாரே, அதே வித மாக வால்மீகி ராமாயணத்தை எழுதியிருக்கிறார். கம்பராமா யணம் வால்மீகிக்குப் பின்னால் சில பொய்களைச் சேர்த்து எழுதப்பட்டதாகும். வால்மீகி தான் எழுதிய கதை அப்படியே உண்மையாக நடந்ததென்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் கம்பராமாயணமோ எத்தனையோ இடங்களில் நமக்குப் பொருந்தாத முறையில் எழுதப்பட்டிருக்கிறது. ஆகவேதான் கம்பராமாயணத்தை முன்னாலேயே நமது பெரியார் அவர்களும், மற்ற வர்களும் கொளுத்த வேண்டுமென்று சொன்னார்கள் அல்லவா ? அதைப் போல் கம்ப ராமாயணம் நம்பத் தகுந்ததல்ல என்பதற்கு ஒரு உதாரணம் சொல்லுகிறேன். சீதையை இராவணன் தூக்கும்போது பூமியோடு சேர்த்துத் தூக்கினான் என்று கம்பர் குறிப்பிட்டிருக்கிறார். பூமி என்ன ஒரு துண்டா அப்படியே வந்துவிடுவதற்கு ? ஆனால் வால்மீகி, இராவணன் சீதையைத் தூக்கும்போது தொடையிலே ஒரு கையும் தோளிலே ஒரு கையுமாக கொடுத்துத் தூக்கினான் என்று எழுதியிருக்கிறார். நமது ராதா இதை அப்படியே காண்பிக்கின்றார். ராதாவின் நாடகத்தை சர்க்கார் நன்கு அறியும். அதில் என்ன தவறு இருக்கிறது ? இப்போதே சொல் லுகிறேன். ராதா நாடகத்திற்குத் தடை விதித்தால், இந்த சர்க்காருக்கு வெகுவெகு கஷ்டங்கள் வரும். ஊரிலே குழப்பம் அதிகமாகும்.

" ராதா மதுரையிலே ராமாயணம் நாடகம் நடத்தி அன்றையதினம் 1,500 பேர்கள் நாடகத்திற்கு சென்று பார்த்து வந்திருக்கிறார்கள். 100 பேர்கள் மட்டும் வெளியில் நின்றுகொண்டு குழப்பம் செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட இந்த ராமாயணத்தையும் மக்கள் பார்க்கட்டும். புராண ராமா யணத்தையும் பார்க்கட்டும். இரண்டு ராமாயணத்தையும் பார்த்துவிட்டு பொதுவாக பொதுமக்கள் முடிவு செய்யட்டும். ஆகவே இந்த சமயத்தில் அதாவது நமது நாடு முன்னேறிக்கொண்டு வரும் சமயத்தில், அறிவு வளர்ச்சி அடைந்து வரும் சமயத்தில் இந்த மாதிரி சட்டங்களைக் கொண்டு வரக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்."

Mr. SPEAKER :—" நீங்கள் இன்னும் இரண்டு நிமிஷத்திலே உங்கள் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்."

* Sri T. SHANMUGAM :—" மேலும் இந்த மாதிரி சட்டங்களைக் கொண்டு வருவது சரியில்லை என்று நான் நினைக்கிறேன். கனம் அங்கத் தினர் சகஜானந்தா அன்று கொன்று போட்டுவிடுவேன் என்று பேசினார். யார் அந்தக் கட்சியிலே இருக்கிறார்கள். இரண்டு சாமிகள் (1) சாமி சகஜானந்தா, (2) விபூதி வீரமுத்துசாமி. அவர்கள் இருக்கும்போது இந்தச் சபையில் இந்த சட்டம் கொண்டுவருவதற்கு அவசியமே இல்லை. ராமனை தூஷிப்பவர்களை கொன்றுவிடுவேன் என்று கூறினார். ராதாதான் இருக் கிறார். அப்படி இவ்வளவு சுருக்கமாக முடிகிற காரியத்தை, இவ்வளவு நேரம் இந்த சட்ட சபையில் பேசுவதற்கே அவசியமில்லை. அன்றைய தினம் அவர் பேசுகின்றபோது, அடிக்கடி 'கொன்று விடுவேன், கொன்று விடுவேன்' என்று சொல்லி இந்த சட்டசபையை கொலைகார சட்ட சபையாக்கிவிட்டார்." (பலத்த சிரிப்பு.)

Mr. SPEAKER :—" நீங்கள் சட்ட சபையை கொலைக்கார சட்டசபை என்று சொல்லக்கூடாது."

* Sri T. SHANMUGAM:—" அன்று அவர் அப்படிப் பேசும்போது எல்லோருமே சும்மாதானே பார்த்துக்கொண்டிருந்தார்கள். (பலத்த சிரிப்பு) ஆகவே இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு விடுகிற மாதிரி விட்டு, அப்படியே அதை drop செய்துவிடும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

Mr. SPEAKER :—" To-day the House will sit till 6-30 p.m., that is, the debate will be continued till 6-30 p.m. The Hon. Minister will reply to the debate to-morrow after question time and then vote will be taken on the motion as well as the amendments. I hope I have made the position clear to hon. Members.

" The House will now adjourn for lunch and meet again at 2-30 p.m."

(After lunch—2-30 p.m.)

Mr. SPEAKER :—" Before we resume discussion on the Bill, I wish to make certain observations regarding the way in which the debate on the Bill should be conducted. I was under the impression that the Bill was brought forward here on account of the recent incident at Madurai. It is not the case. The Bill was published long ago, that is, on the 27th November. That incident has nothing to do with this Bill and it has no bearing on the Bill. So I want hon. Members to remember that the rioting which took place there recently need not be mentioned here and also whether the police are to be blamed or the people assembled there are to be blamed. Here we are discussing the principles of the Bill. I think I have made the position clear to hon. Members."

* Sri S. SWAYAMPRAKASAM :—" Hon. Members are not trying to mention about the Madurai incident but are trying to point out that this Bill is the consequence of the drama that is being staged by Sri M. R. Radha."

Mr. SPEAKER :—" That is not a fact. The Bill is not the result of that Drama."

* Sri S. SWAYAMPRAKASAM :—" It is only after Sri M. R. Radha began staging that drama, ' Ramayana ' or ' Kimayana ' that this Bill has been prepared."

Mr. SPEAKER :—" How can the hon. Member assume it. I will allow hon. Members to have a say on the principles of the Bill but they need not mention about the riot and whether the people are to be blamed or the police are to be blamed."

* Sri S. SWAYAMPRAKASAM :—" I entirely agree with the Chair but I want to point out that hon. Members are not for referring to the Madurai incident but for the fact that this Bill was brought here after the staging of that drama."

Mr. SPEAKER :—" I have no objection to hon. Members speaking on the principles of the Bill, for instance, how dramas should be played, what things should be played and what things should be avoided.

7th December 1954] [Mr. Speaker]

"I have fixed a time-limit of ten minutes for each hon. Member."

SRI V. R. KRISHNA AYYAR :—" Mr. Speaker, Sir, we are now at this stage concerned with the principles underlying this Bill and with the desirability of bringing forward a Bill of this sort. I am of the view that this Bill is really uncalled for and is an attempt to control progressive thought and culture in this country at the appropriate time—in certain areas where an occasion has now arisen and also in other areas as and when the occasion may arise. It is really an attempt on the part of the Government to equip themselves with a kind of stranglehold upon art and culture because art and culture are likely to influence the human mind. It is not really a case of my being opposed to some kind of control of expression because ' expression ' if it is wild or violent or anti-social may have to be restricted or controlled in some measure. Then the real point is not that there should be no kind of control at all but the control should not be such as to strangle culture or to fashion culture according to the likes and dislikes of the authorities. For instance, I am quite in agreement with the Government when they say that indecent or vulgar expression of art or exhibition should not be put on show. For instance, a matter may be so vulgarly depicted that no human being with a sense of civilization or decency about him could tolerate it. Anything which amounts to public outrage or indecency should not be allowed to be put on show. In all such cases, there should be control. We are all agreed that we must have a secular State and whatever endangers or threatens the secularism of our State must certainly be put an end to. For instance, I am quite clear in my mind that communal discord is a great enemy of all progress in this country. Any kind of communal discord or communal hatred, if progress is to be achieved, should be put down with a heavy hand. But then under the guise of putting down communal discord, we should not empower the Government with all kinds of powers to be used by them in an arbitrary manner. We must first of all, have to agree on this principle. According to me, there may be control only on two bases or two premises. Firstly, if the thing is so vulgar or so indecent that no human being can tolerate it in a civilized society, it should certainly be stamped down. Equally, if a communal discord or hatred or disaffection of a communal nature is exhibited in such a manner that it will threaten the secularism of our State—and without secularism our State cannot be stable and be a progressive State—in order to preserve communal harmony and the progress of the State, it should be put down. Otherwise it will only be a block to the progressive forces in this country. So, all progressive forces would be agreed that communalism should certainly not be tolerated and it should be put an end to. But the present Bill goes far and far beyond that. I have a shrewd suspicion that it is not so much the communal discord that is at the back of the mind of the Government as the idea of progressive thought and culture endangering their position at a certain stage and they being choked or throttled at the appropriate moment. That seems to be the slight intention

[Sri V. R. Krishna Ayyar] [7th December 1954

lurking behind the various clauses of the Bill. For instance, the definition 'objectionable performance' has been so widely drawn up and the Government have been given almost unbridled and unchecked discretion to decide, what is an 'objectionable performance.' The expression 'objectionable performance' has been defined in various clauses of the Bill and it would include anything that the Government want to include. For instance, sub-clause (1) of Clause 2 says—

'(1) "objectionable performance" means any play, pantomime or other drama which is likely to—

" (i) incite or encourage any person to resort to violence or sabotage for the purpose of overthrowing or undermining the Government established by law . . .' "

So, to incite or encourage not directly but even indirectly is objectionable according to this Bill. I wonder whether anything cannot be brought under this very wide expression as in sub-clause (1) (ii) which says—

' (ii) incite or encourage any person to commit murder, sabotage or any offence involving violence ;'

2-40 p.m. Any kind of art or any kind of exhibition or display can be brought under this clause and could be put an end to. We are in a changing time. Reactionaries are trying to suppress progressive thought and progressive influences which are on the upgrade. Dramatic performances portraying social maladies can very well be suppressed under the provisions of this Bill saying that they are 'inciting or encouraging . . . violence.

" Then, Sir, in item (iii) under the definition of 'objectionable performance' it has been stated that 'inciting or encouraging any person to interfere with the supply and distribution of food or other essential commodities or with essential services' is prohibited. One does not understand from the reading of this clause whether the incitement referred to should be direct or indirect and this point has been left vague. It is very difficult for the Executive Authority of the Government to decide what constitutes 'encouraging any person to interfere with the supply and distribution of food.' The phrase of 'encouraging any person' is very vague. The other day, questions were raised on the floor of the House about the arrest of people in Koothali Estate, North Malabar. The Government want the eviction of certain tenants from the Koothali estate and the tenants are resisting eviction. The Government may very well say that this is 'interference with the supply and distribution of food or other essential articles.' It is very provocative, Sir, that any power should be given to check or stop that.

" Again, Sir, in item (v) under the definition of 'objectionable performances,' 'promotion of feelings of enmity of hatred between different sections of the people of India' is prohibited. The expression 'promote feelings of enmity or hatred between different sections of the people' is very delightfully and dangerously vague. Within the scope of this expression, 'different

7th December 1954] [Sri V. R. Krishna Ayyar]

sections of the people,' any play portraying landlord-tenant relationship may be considered objectionable. Dramatic performances are often staged depicting ' tenants demanding fixation of fair rent and landlords resisting the demand of the tenants' and such performances may straightway be brought under the purview of this clause. This clause is an outrage on progressive thought.

" Then, Sir, in item (vi) under the definition of ' objectionable performance ' it has been stated as follows :—

' Outrage the religious feelings of any class of the citizens of India by insulting the religion or the religious beliefs of that class.'

The phrase ' outrage the religious feelings of any class ' is very wide. Sometimes even nice feelings of religion held by a person may be offended. True, the Government may have to act with a heavy hand against the promoters of communal hatred. But they should not be concerned with the offending of sensitive feelings of any one about his religion.

" Mr. Speaker, Sir, this Bill is quite unnecessary. Already in the Penal Code there are various provisions which cover the various things mentioned in this Bill and I need not bring them to the notice of the Hon. Law Minister because he must be conversant with them. Section 124-A of the Indian Penal Code provides for the punishment of those who attempt to promote disaffection towards the Government established by law. Then, there is Section 153-A of the Indian Penal Code which prohibits the promotion of feelings of enmity between different classes of people. Section 295-A of the Indian Penal Code prohibits the deliberate and malicious intention of outraging the religious feelings of the people. Thus, if we peruse the various Sections in the Indian Penal Code, we will find that the framers of the Indian Penal Code have included most of the provisions provided in the Bill in the Penal Code itself.

" I consider that the Government are taking under this Bill powers to put down progressive thought. In the district of Malabar, where practically large crowds gather at every meeting, people come for some cultural programmes. Art and Culture must reflect the condition of society as it is. Some of the maladjustments in society will naturally figure in all dramatic performances portraying progressive thought. Art, if it is an art in the true sense of the word, must naturally portray the social maladies that exist today or the social injustices that exist today. This House and the people cannot be a party to give the Government such an autocratic power to strangulate art in the name of putting down the promotion of hatred between different sections of the people and I oppose this Bill in its very principle.

" It may be said that it has been provided in this Bill that those who are aggrieved by an order of this Government may go in appeal to the High Court. People are living, far, far away from the place where the High Court is located and they may not be able to come to the High Court for every little thing.

[Sri V. R. Krishna Ayyar] [7th December 1954

"It is very necessary that the Members of this House should be posted with the implications of clause 3 dealing with 'Objectionable performances prohibited—Whoever—' No person will, hereafter, give a hall for staging dramas because at a later date the Government, may by a notification, say that the drama that was staged at the hall is an objectionable performance and that the owner of the hall may be prosecuted for permitting the drama to be staged. Anything which has been performed might later be discovered as objectionable and prosecution might be launched.

"Although promotion of communal discord must be put down and somehow be stamped out, I cannot be a party to this Bill because the provisions of the Indian Penal Code, if rightly used, can prohibit promotion of communal discord."

* SRI S. SWAYAMPRAKASAM :—" Mr. Speaker Sir, I do not know why at this stage the Government have thought it fit to bring in such a Bill. Just now, the previous speaker was saying that this Bill is intended to suppress progressive thoughts in the country. Dramatic performances are nowadays enacted for the purpose of instilling new ideas into the minds of the public. This Bill is likely to curtail the freedom of the people visiting theatres and witnessing dramatic performances. My first objection to this Bill is that it is not at all necessary. If the intention of the Government is to prohibit certain acts, which they have mentioned in clause (2) of the Bill, they will find the necessary provisions in the Indian Penal Code itself. Item (i) in clause (2) of the Bill states:

2-50 a.m. 'incite or encourage any person to resort to violence or sabotage for the purpose of overthrowing or undermining the Government established by law in India . . . area; or'

The subject-matter of this clause has been amply covered by Section 124-A of the Indian Penal Code which reads as follows:

'Whoever by words, either spoken or written, or by signs, or by visible representation, or otherwise, brings or attempts to bring into hatred or contempt, or excites or attempts to excite disaffection towards the Government established by law . . . fine.'

"Item (ii) in Clause 2 of the Bill states—

"incite or encourage any person to comit murder, sabotage or any offence involving violence; or'

This item has been covered by Section 107 of the Indian Penal Code.

"Item (iv) in Clause 2 of the Bill which states:

'seduce any member of any of the armed forces of the Union or of the Police forces from his allegiance or his duty . . . such force; or'

This item has been covered by Chapter VII dealing with the offences relating to the Army, Navy and Air Force in the Indian Penal Code. Section 132 in this Chapter states:

'whoever abets the committing of mutiny by an officer, soldier in the Army shall, if mutiny be committed in consequence of that abetment shall be punished with death . . . fine.'

7th December 1954] [Sri S. Swayamprakasam]

Section 133 deals with assaults and other offences. The whole Chapter VII of the Indian Penal Code deals with offences relating to the Army.

" Item (v) of claus 2 of the Bill states :

'promote feelings of enmity or hatred between different sections of the people of India ; or'

Section 153 (A) of the Indian Penal Code reads as follows :

'Whoever by words, either spoken or written, or by signs, of by visible representations, or otherwise promotes or attempts to promote feelings of enmity or hatred between different classes of people shall be punished . . . both.'

" Item (vi) in the same clause 2 which deals with the outraging of the religious feelings of any of the citizens of India is also found in Section 295-A of the Indian Penal Code which reads as follows :—

'Whoever, with deliberate and malicious intention of outraging the religious feelings of any class of citizens of India, by words, either spoken or written, or by visible representations insults, or attempts to insult the religion or the religious beliefs of that class, shall be punished . . . both.'

The only item in clause (2) which has been left out in the Indian Penal Code is item (iii) and there is no need to bring forward a Bill merely to provide for this item.

" According to Criminal Jurisprudence which has been recognized, followed and practised in this country by every one, ' the intention of any person to commit an offence should be taken into account'. But according to Explanation II in clause 4 of the Bill which states :

'In judging whether any performance is an objectionable performance under this Act, the effect of the words, signs or visible representations, and not the intention of the person taking part in the performance shall be taken into account.'

the intention is not taken into account. This is against the fundamental rights of the people and is against all cannons of criminal jurisprudence. As this clause offends the principle laid down in the Criminal Procedure Code and the Indian Penal Code, it is *ultra vires* of the Central Acts.

" Clause 12 of the Bill provides that no prosecution under this Bill shall bar a prosecution under the Indian Penal Code, or any other law. The Articles of the Constitution provide that no man shall be punished twice for the same offence. But here in this Bill the Government have made a provision for double punishment, and to that extent this Bill is *ultra vires* of the Constitution.

" My suggestion to the Government is that the provisions in the Indian Penal Code and Criminal Procedure Codes are sufficient and that the Bill is not necessary. This Bill has been brought with a view to prohibit certain persons enacting a particular drama. The provisions of the Bill are so wide that the staging of any drama can be prohibited. Any person can set the law in motion and prevent the enacting of any performance which has hitherto been enacted and seen by the people without any hindrance. I am of the view that there is no need to bring in a Bill of this kind at this juncture."

3 p.m. SRI P. RAMAMURTHI :—" கனம் சபாநாயகர் அவர்களே, இன்று காலையில் கனம் நிதிமந்திரி அவர்கள் இந்த மசோதாவைக் கொண்டு வரும்போது பேசிய பேச்சைக் கேட்டீர்கள். இதை இந்நாட்டில் இருக்கக் கூடிய மக்களும், அவருடைய சர்க்காரும் மதிப்பதாகத் தெரியவில்லை. மிகவும் முக்கியமான மசோதா, இந்த நாட்டில் இருக்கக்கூடிய ஜனங்கள் அவர்களுடைய ஜீவாதார உரிமைகளை அனுபவிப்பதற்கு பங்கம் விளை விக்கக்கூடிய முறையில் இந்த மசோதா இருக்கிறது. நாடகம் நடிப்ப வர்கள் அதற்கு உதவியாக இருக்கக்கூடிய பல சிப்பந்திகள், கொட்டகைக் காரர்கள், மற்றும் அந்த நாடகத்தைப் பார்க்கும்படியான லட்சக்கணக்கான மக்கள் ஆகிய எல்லோரையும் பாதிக்கும்படியான ஒரு முறையில் இந்த மசோதாவானது கொண்டுவரப்படுகிறது.

" இந்த மசோதாவைக் கொண்டுவருவதற்கான காரணங்கள் என்ன என்பதைப்பற்றி மந்திரி அவர்கள் பூரணமான ஒரு விளக்கம் சொல்லாமல் போனாலும்கூட, ' ஏதோ ஒரு டிராமா நடந்தது அதை தடை செய்வதற்கு முயற்சி செய்தோம் அதற்கு ஏற்கனவே இருக்கக்கூடிய சட்டங்கள் குறுக்கே இருக்கின்றன. ஆகவே பல விஷயங்களை எல்லாம் சேர்த்துக்கொண்டு இப் பொழுது ஒரு மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறோம்' என்று சொன்னார்.

" மத்திய சர்க்காரின் 'இந்தியன் பிரஸ் அப்ஜக்ஷனபிள் மாட்டர் ஆக்ட் 1951 ' என்ற சட்டத்தை அத்தாட்சியாகக் காட்டுகிறார். ' தாய் எட்டிப் பாய்ந்தால் குட்டி 16 அடி பாய்ந்ததாம் ' என்று தமிழ் நாட்டில் ஒரு பழமொழி வழங்கிவருகிறது. இந்த மசோதாவைப் பார்த்தால் சென்னை அரசாங்கத்திற்கு அது முழுக்க முழுக்கப் பொருந்தும்.

" மசோதாவின் நோக்கம் என்ன என்பதையும் நாம் கொஞ்சம் அலசிப் பார்ப்போமானால் இது வேறு நோக்கத்திற்காக, அரசியல் நோக்கத் திற்காகத்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று நிச்சயமாக சொல்ல முடியும். தாங்கள் எந்த குறிப்பிட்ட கும்பல்களையும் மக்களையும் பாது காக்கவேண்டும் என்பதற்காக இங்கு இருக்கிறார்களோ, அந்த கும்பல் களுக்கு நன்மை செய்யவேண்டும் என்பதற்காகத்தான் இது கொண்டுவரப் பட்டிருக்கிறது. ஆகவே காலாசாரத்துறையிலும் ஜனங்களுடைய உரிமை களைப்பறிக்கச் செய்வதுதான் இந்த சர்க்காருடைய நோக்கமாக இருக்கிறது. என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

" இந்த மசோதாவில் இருக்கக்கூடிய ஷரத்துக்களையெல்லாம் வக்கீ லுடைய கண்ணோட்டத்தோடு பார்க்கவேண்டுமென்று இன்று காலையில் மந்திரி அவர்கள் சொன்னார்கள். இந்த சபையில் நாங்கள் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருப்பது வக்கீல்களுடைய கண்ணோட் டத்தோடு பிரச்னைகளை நோக்குவதற்காக அல்ல, இந்த நாட்டில் இருக்கக் கூடிய ஜனங்களுக்கு இதனால் என்ன ஏற்படும் என்பதைப் பார்ப்பதற் காகத்தான் நாங்கள் இருக்கிறோம் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். நாம் இங்கிருப்பது வக்கீல்களுக்காக அல்ல, மக்களின் நலத் திற்காகத்தான். மக்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கவேண்டுமென்பதற் காக நாம் இங்கு சட்டம் செய்கிறோமா அல்லது சில வக்கீல்களுக்காக சட்டம் செய்யவேண்டுமா என்பதில் நாம் கொஞ்சம் தீவிரமாக கவனம் செலுத்திப்பார்க்கவேண்டும்.

" சேலத்தில் ஒரு நாடகத்தைத் தடுப்பதற்கு முயற்சி செய்தோம், அந்த சட்டம் செல்லுபடியாகாமல் போய்விடும் என்று சட்ட ஆலோசகர்கள் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லப்படுகிறது.

" இந்த மசோதாவைப்பற்றி ஸ்ரீ சுயம்பிரகாசம் பேசுகிற காலத்தில், ஏற்கெனவேயிருக்கும்படியான கிருமினல் சட்டத்தில் பல விஷயங்கள் குற்றமாக கருதப்படுகின்றன என்று எடுத்துக் காட்டினார். நிதி அமைச் சரும் இது தங்கள் வாதத்திற்கு சாதகமாக இருப்பதாகக் கருதலாம். அதனால் என் மீண்டும் ஒரு சட்டத்தைக் கொண்டுவரவேண்டிய அவசியம் இருக்கிறது ? ஏற்கெனவே இருக்கக்கூடிய இந்தியன் பினல் கோட், க்ருமினல் ப்ரொஸீஜர் கோட் ஆகியவைகளில் சில விஷயங்கள் குற்றமாக

7th December 1954] [Sri P. Ramamurthi]

கருதப்பட்டிருக்கின்றனவே அவைகள் மீண்டும் எதற்காக இதில் சேர்க்கப்படவேண்டும் ? டிராமடிக் பர்பாமன்ஸ் ஆக்ட் என்பதில் ஏற்கெனவேயிருப்பது போதாதென்று இன்னொரு குற்றத்தை சிருஷ்டித்து இதை தடைசெய்யவேண்டுமென்று சொல்வது பொருத்தமல்ல. இது எப்படி தடைசெய்யப்படுகிறதென்பதைப் பார்க்கவேண்டும். முதலாவது ஆட்சேபகரமான நாடகங்கள் என்னவென்பதைப்பற்றி வியாக்கியானத்தில் ஏழு விஷயங்களைக் குறிப்பிட்டு விட்டு, அவைகளெல்லாம் ஆட்சேபகரமான நாடகம் என்று கருதப்படும் என்று சொல்லப்படுகிறது. அதற்குப் பிறகு இந்த ஆட்சேபகரமான நாடகத்தை யாராவது ஒருவர் நடித்தால், அல்லது அந்த நாடகத்தை நடிப்பதற்கு எவ்வகையிலாவது உதவி செய்தால் அவர்கள் எல்லோரும் குற்றம் செய்தவர்களாகக் கருதப்படுவார்கள். நோட்டீஸ் அச்சடித்துக் கொடுப்பவன், கொட்டகைச் சொந்தக்காரன், திரை இழுப்பவன், இவர்கள் எல்லாரும் குற்றவாளியாக்கப்பட்டு தண்டனைக்குள்ளாவார்கள். ஆகவே நாடகத்திற்கு தடை விதிக்கலாமா என்பதல்ல இவர்களுடைய பிரச்னை. ஆட்சேபகரமான நாடகத்தில் ஈடுபடும் எல்லோரும் தண்டனைக்குள்ளாக வேண்டியிருக்கிறது. ஒரு சாதாரண அதிகாரிக்குக்கூட அந்த நாடகத்தை தடை செய்வதற்கான அதிகாரம் இதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. தடை செய்வதற்கு முன்னால் அவர்களுக்கு ஒரு நோட்டீஸ் அனுப்பி, தடை செய்வதற்கான காரணங்களைச் சொல்லி அதற்கு நாடகம் நடத்துபவர்கள் சமாதானம் கூறுவதற்கு அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டும். அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லுகிற மாதிரி இருக்கிறதேயொழிய 5-வது ஷரத்து நாடகத்தை தடை செய்வதற்கான அதிகாரத்தைக் கொடுக்கிறது.

'5. *Power to prohibit objectionable performances temporarily.*—(1) **The State Government or such Officer as they may empower in this behalf may, if they are or he is of opinion that any play, pantomime or other drama performed or about to be performed is likely to lead to a breach of the peace, by order stating the grounds for such opinion, prohibit its performance.'**

"பொதுஜன அமைதிக்கு பங்கம் விளைவிக்கக்கூடும் என்று மீண்டும் இரண்டு மாதங்களுக்கு தடை செய்துவிடலாம். இரண்டு இரண்டு மாதங்களாக நீடித்துக்கொண்டே போகலாம். இந்தக் காரணத்தைக்காட்டி நாடகத்தை நிரந்தரமாக தடை செய்வதற்கு ஒரு வழி ஏற்படுகிறது.

"நாடகத்தை முன்னாடியே பார்த்து நாடகத்தில் ஆட்சேபகரமான கருத்துக்கள் இருக்கிறதா இல்லையா என்றுகூடகவலைப்படவேண்டியதில்லை; 3–10 p.m.
அதற்கு சமாதானம் கூறுவதற்குகூட சந்தர்ப்பம் கொடுக்கவேண்டியதில்லை. பொதுஜன அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் என்று கருதினால் போதும். உடனே இரண்டு மாதங்களுக்கு தடை செய்துவிடலாம். நாடகத்தைத் தடைசெய்வதுமட்டுமல்ல நாடகத்தில் சம்பந்தப்பட்ட எல்லோரையும் தண்டிக்கக்கூடிய அளவுக்கு இந்தச் சட்டம் இடம் கொடுக்கிறது. ஒரு டிராமாவைத் தடை செய்துவிட்டால் அந்தத் தடையை மீறி யாராவது டிராமாவை நடத்தினாலும், நடிக்க இடம் கொடுத்தாலும், நடிப்பதற்கு வசதியாக இருந்தாலும் அவர்கள் எல்லோரும் தண்டிக்கப்படுவார்கள் என்று இந்த மசோதாவின் 3-வது ஷரத்து (ஜ) பிரிவில் கொடுக்கப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே ஆட்சேபணைக்குறிய விஷயங்கள் அடங்கிய ஒரு நாடகத்தைத் தடை செய்யவேண்டுமென்றால் நண்பர் ஸ்ரீ சுயம்பிரகாசம் சொன்னபடி இ.பி.கோ.-வில் அடங்கிய பல செக்‌ஷன்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கலாம். அதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரவேண்டுமென்பது அவசியமில்லை. ஆகையாலே இந்தச் சட்டத்தைக் கொண்டுவருகின்ற காலத்திலே சர்க்காரின் நோக்கம் உண்மையிலேயே அது அல்ல என்பதை நாம் தெளிவாக உணர்ந்துகொள்ளவேண்டும்.

"இந்தச் சட்டத்திலே என்ன சொல்லுகின்றது, நாடகத்திலே பங்கு எடுத்துக்கொள்ளக்கூடிய நபரின் உண்மையான எண்ணம் எதுவாக இருந்தாலும் அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால் ஜாடைமாடையாகக்கூட அவரை அறியாமலேயே சமுதாயத்தையோ, சமுதாயத்தின் கோட்பாடுகளையோ கிண்டல் பண்ணுவதுபோல இருந்துவிட்டால் போதும். அப்படி

[Sri P. Ramamurthi] [7th December 1954

இருந்தது இல்லை" என்று நிர்ணயிக்கும் அதிகாரம் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரின் கையில் இருப்பதால் அவருடைய விருப்பு வெறுப்புக்கு ஏற்ற வகையில் ஒரு நாடகத்தைத் தடை செய்யவும் முடியும். இதை இல்லையென்று மறுக்க முடியும். ஆகவே பொதுவாக ஆளும் கட்சியின் கொள்கை எதுவோ அதற்கு நேர்மாறான எந்தக் கொள்கையைப்பற்றி நாடகம் நடித்தாலும்கூட உடனே அரசாங்க அதிகாரிகள் அதைத் தடுத்துவிட முடியும் இந்தச் சட்ட பிரகாரம். நாடகத்தில் பங்கு கொள்பவர்களின் மீது மாத்திரம் தான் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இல்லை. திரை தூக்குபவன் பேரிலும் நடவடிக்கை எடுக்கப்படும். நாடகம் நடிக்க இடம் கொடுத்தவன் பேரிலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஒரு போலீஸ் ஜவான் போய் சொல்லிவிட்டு வந்துவிட்டாலே போதும், புரட்சிகரமான சீர்திருத்தக் கொள்கைகள் அடங்கிய எந்த நாடகத்திற்குமே நடிக்க யாரும் இடம் கொடுக்கமாட்டார்கள். அவர்களுக்கு உதவி செய்வதற்கு யாரும் முன்வரமாட்டார்கள். இந்த நாட்டிலே பேச்சு சுதந்திரம் இருக்கிறது. அபிப்பிராயம் வெளியிடும் சுதந்திரம் இருக்கிறது என்றெல்லாம் சொல்லிவருகின்ற காலையில் எல்லாவிதமான முற்போக்குச் சக்திகளுக்கும் பெரிய முட்டுக்கட்டையைப் போடும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவது நாட்டின் நலனையே உருக்குலைப்பதாகும் என்பதைத்தான் நாம் எல்லோருமே உணரவேண்டி வருகிறது.

" இந்தச் சட்டத்தைக் கொண்டுவருகின்றகாலத்தில் கனம் நிதி மந்திரி அவர்கள் பார்லிமெண்டில் பாஸ் செய்யப்பட்டிருக்கிற **Press Objectionable Act**-ஐ எடுத்துச் சொன்னார். இந்த நாட்டில் இருக்கக் கூடிய தேசிய பரம்பரையில் வளர்ந்து வந்திருக்கக்கூடிய பத்திரிகைகள் எதுவும், காங்கிரஸ் கட்சியை எல்லா வகையிலும் ஆதரித்து வருகின்ற பத்திரிகைகள் எதுவும், தினமணியும் சரி, ஹிந்து பத்திரிகையும் சரி, வட நாட்டிலுள்ள ஹிந்துஸ்தான் டைம்ஸும் சரி, டைம்ஸ் ஆப் இந்தியாவும் சரி, எல்லாப் பத்திரிகைகளும் ஒரு முகமாக அந்தப் **Press Objectionable Act**-ஐ எதிர்த்து வந்திருக்கின்றனவேயன்றி ஒருபொழுதும் ஏற்றுக்கொண்டதே கிடையாது. மிக மிக மும்முரமாக அதை எதிர்த்து வந்திருக்கிறார்கள். நாட்டின் பற்பல மூலைகளிலிருந்து அதற்குப் பலமான எதிர்ப்பு இருந்தே வந்தது. இருந்தாலும் கூட தங்களுக்கு இருக்கக் கூடிய மெஜாரிடி பலத்தைக் கொண்டு மத்திய சர்க்கார் பார்லிமெண்டில் அந்த மசோதாவைப் பாஸ் செய்தார்கள் என்பதை கனம் நிதி மந்திரி அவர்கள் உணராமலிருக்கமாட்டார் என்றே நினைக்கிறேன். அதைப் போலவே இந்த நாட்டு மக்கள் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல், நாட்டிலுள்ள பத்திரிகைகளின் அபிப்பிராயத்தைப் பொருட்படுத்தாமல், நாட்டிலுள்ள எதிர் கட்சிகளின் அபிப்பிராயங்களைப் பொருட்படுத்தாமல், இந்தச் சட்டத்தினால் நேரிடையாகப் பாதிக்கப்படுகின்ற மக்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல், அதற்கும் மேலாக இந்தச் சபையிலே இருக்கக் கூடிய அங்கத்தினர்களின் பலமான எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் "எங்கள் கட்சியின் மெஜாரிடி பலத்தைக் கொண்டு இந்த மசோதாவை நிறைவேற்றியே தீருவோம்" என்று கனம் நிதி மந்திரி அவர்கள் சொன்னால் தாராளமாக நிறைவேற்றிக்கொண்டு போகட்டும், எங்களுக்கு அதிலே ஆட்சேபணை கிடையாது. அதற்கு இந்த நாட்டிலேயுள்ள மக்களே அவர்களுக்கு பதில் கொடுப்பார்கள் என்று மாத்திரம் நான் சொல்லிக் கொள்ளுகிறேன். **Press Objectionable Act**-ஐ பார்லிமெண்டில் எதிர்க்கட்சிக்காரர்கள் பலமாக எதிர்த்தபோது அந்த மசோதாவை ஏன் கொண்டுவரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்பதற்கு ஸ்ரீ கைலாசநாத் கட்ஜூ பல காரணங்களையாவது எடுத்துக் காட்டினார். பல பத்திரிகைகளின் **cutting**-களை எடுத்து வைத்துக் கொண்டு இந்தப் பத்திரிகையில் இப்படி வந்திருக்கிறது, அந்தப் பத்திரிகையில் இப்படி அவதூறாக வந்திருக்கிறது. ஆகவே இது மாதிரியான செய்திகள் வராமல் தடுக்க வேண்டியது ரொம்பவும் அவசியமாகும் என்றெல்லாம் சொன்னார். அவ்வளவு எடுத்துச் சொல்லியும் கூட அவர்கள் அந்த மசோதாவைக் கொண்டுவருவது சரியானது ஆகாது என்று தான் சொல்லி வந்திருக்கிறார்கள். ஆனால் நமது நிதி மந்திரி அவர்கள் திட்டவட்டமாக இந்தஇந்தக் காரணங்களுக்காகத்தான் நாங்கள் இந்த மசோதாவைக் கொண்டுவருகிறோம் என்று சொல்லவேயில்லை. கடந்த

7th December 1954] [Sri P. Ramamurthi]

வருஷங்களிலே அரசாங்கத்தைக் கவிழ்க்க கூடிய வகையில் எவ்வளவு நாடகங்கள் நடித்துக் காட்டப்பட்டு வந்திருக்கின்றன என்றாவது கனம் நிதி மந்திரி அவர்கள் சொன்னார்களா? அதுவும் கிடையாது. இன்றைக்கும் நான் கேட்கிறேன் ; எத்தனை நாடகங்களின் வாயிலாக இந்த நாட்டிலே பலாத்காரத்தைத் தூண்டும் வகையிலே பிரசாரம் செய்யப்பட்டு வந்திருக்கிறது ? எத்தனை நாடகங்களின் வாயிலாக பலாத்காரத்தைத் தூண்டி நாசவேலையைச் செய்யும்படியாக மக்களிடம் பிரசாரம் செய்யப்பட்டு வந்திருக்கிறது ? ஒரு நாடகமாவது அந்த முறையிலே நடந்திருக்கிறது என்று கனம் நிதி மந்திரி அவர்கள் எடுத்துச் சொல்வார்களா? நான் அவரை அறைகூவி அழைக்கிறேன். எடுத்துச் சொல்லட்டும். பலாத்காரத்தைத் தூண்டவேண்டுமென்ற நோக்கத்தோடு எந்த நாடகமும் தமிழ் நாட்டில் இன்றுவரை நடிக்கப்பட்டு வந்தது கிடையாது.

" வளர்ந்துகொண்டே வரும் நாட்டின் முன்னேற்றத்திற்காக, நாட்டு மக்களின் பகுத்தறிவு வளர்ச்சிக்காக, நலம் குன்றி நிற்கும் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக சீர்திருத்தக் கொள்கைகள் எல்லாம் நாடகங்களிலே வரலாம். நாட்டு மக்களின் இருதய உணர்ச்சியை, நாட்டு மக்களின் உள்ளக் கருத்தை எடுத்துப் படம் பிடித்துக் காட்டுவது தான் இலக்கியத்தின் முக்கிய அம்சமாகும். இலக்கியமும் வளர வளர மக்களின் அறிவு வளர்கிறது. அவர்களது பகுத்தறிவு வளர்கிறது. உலக வளர்ச்சிக்கு ஏற்ப நாட்டு மக்களின் முன்னேற்றமும் பெருகுகிறது. உலகம் பூராவிலும்தான் இந்த வளர்ச்சி இருந்துகொண்டே இருக்கிறது.

" உலகம் பூராவிலுமே இன்றைக்கு சுரண்டும் வர்க்கத்தை எதிர்த்துச் சுரண்டப்படுகின்ற வர்க்கம் போராடிக்கொண்டே வருகிறது. இதை யாரும் மறுக்க முடியாது. ஐரோப்பாக் கண்டத்திலே ப்ரெஞ்சுப் புரட்சியை உண்டு பண்ணுவதற்குக் விக்டர் ஹ்யூகோ காரணமாக இருந்திருக்கிறார். பிரபுக்களின் கொடுமையிலிருந்து பாட்டாளி மக்களை விடுவிக்க அவரது எழுத்துக்கள் ஒரு வழிகாட்டியாகவே விளங்கியிருக்கின்றன.

" நாட்டிலே முற்போக்குக் கருத்துக்களை வளரச்செய்வதற்கு நாடகங்கள் இன்றியமையாதனவாகும். அவைகளைத் தடை செய்வதானது நாட்டின் வளர்ச்சியிலேயே, முட்டுக்கட்டை போடுவதைப் போலத்தான் ஆகும். துவேஷத்தை உண்டு பண்ணிவிடவேண்டும். பலாத்காரத்தைத் தூண்டிவிடவேண்டும். நாட்டில் கட்டுக் கோப்பைக் குலைத்துவிடவேண்டுமென்ற நோக்கத்தோடு சமீபகாலத்திலேயாவது ஏதாவது நாடகங்கள் நடிக்கப்பட்டு வந்திருக்கின்றனவா என்று கேட்க விரும்புகிறேன். வந்திருக்கின்றன என்றால் குறிப்பாக இத்தனை நாடகங்கள் வந்திருக்கின்றன என்று நிதி மந்திரி அவர்களால் கணக்குக் கொடுக்க முடியுமா என்று கேட்கிறேன்.

" இந்தச் சட்டப்படி எந்த நாடகத்தையும் வகுப்பு துவேஷத்தை 3-20 p.m.
உண்டுபண்ணி விடும் என்று சொல்லி ஒரு போலீஸ் அதிகாரி தடை செய்துவிடலாம். முற்போக்குக் கருத்துக்கள் உள்ள நாடகங்களைத் தடை செய்துவிட்டால் நாட்டிலே இருக்கக்கூடிய நாடகங்கள் தான் என்ன ? எந்த நாடகங்களை நடத்த வேண்டும் என்று கேட்கிறேன். கிருஷ்ண லீலை, பாதுகா பட்டாபிஷேகம், வள்ளித் திருமணம், துரௌபதி வஸ்திராபரணம் இவைகளைத்தான் நடத்தவேண்டுமா ? அவைகள்தான் உயர்ந்த நாடகங்கள் என்றால், இப்பொழுது ஏன் அவைகள் செல்லுபடியாகவில்லை. 20, 30 வருஷங்களுக்கு முன் பிரகலாத சரிதம், துருவ சரிதம் போன்றவைகள் மக்களிடையே எடுபட்டன அவைகள் இப்பொழுது ஏன் மக்களிடையே எடுபடவில்லை ? ஆனால், அந்த நாடகங்களை இன்றைக்கு நடித்தால் அவைகள்தான் உயர்ந்த நாடகங்கள் என்று ஸ்ரீ ஸி. சுப்ரமணியமும், ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரும் மக்களிடம் போய்ச் சொன்னால், மக்கள் அதை ஒப்புக்கொள்ளமாட்டார்கள். அதற்கு நாட்டிலே எடுப்பு இருக்காது. எடுப்பு இல்லாதிருந்தும்கூட அந்தநாடகங்கள்தான் வேண்டுமென்று சொன்னால் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் வெகுவாக பாதிக்கப்படுவார்கள்.

[Sri P. Ramamurthi] [7th December 1954

" மதத்தைப்பற்றி உங்களுக்கு ஒரு அபிப்பிராயம் இருக்கலாம். எனக்கு வேறு ஒரு அபிப்பிராயம் இருக்கலாம். அவரவர்கள் அவரவர்களின் அபிப்பிராயப்படி நடக்கவும் பிறருக்கு எடுத்துச் சொல்லவும் உரிமை உண்டு. கடவுளை நம்புகிறவர்கள் கடவுளை நம்பும்படிப் பிறருக்கு எடுத்துச் சொல்ல எப்படி உரிமை உண்டோ அப்படியே கடவுளை நம்பாதவன் கடவுளை நம்பவேண்டிய அவசியம் இல்லை என்று எடுத்துச் சொல்லவும் உரிமை உண்டு. கடவுளை நம்புகிறவர்கள் அதிகாரத்திலிருந்தாலும் சரி, நம்பாதவர்கள் அதிகாரத்தில் இருந்தாலும் சரி, தங்கள் தங்கள் கொள்கைகளை அரசாங்கத்தின் பலத்தைக் கொண்டு காப்பாற்றிக்கொள்ள முற்படுவது மிகவும் மோசமானதாகும். ஆனால், நாட்டின் சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால் எந்தக் காலத்தில் எந்தந்த சக்திகள் வலுப்பெற்று இருக்கிறதோ, அந்தந்த சக்தி அதற்கு எதிர்முறையான சக்திகளை அழிக்கவே முற்பட்டிருக்கிறது. நாஸ்திகத்திற்கும் ஆஸ்திகத்திற்கும் இந்த நாட்டில் 2,500 வருஷங்களுக்கு முன்பிருந்தே போராட்டம் நடந்து வந்திருக்கிறது. வேத முறைக்கு எதிராக பௌத்த மதம் கிளம்பிற்று. பௌத்த சித்தாந்தங்களுக்கு எதிராக ஜைன சித்தாந்தங்கள் கிளம்பின. ஜைன மதத்தில் 24 தீர்த்தசங்கர்கள் இருந்தார்கள்.

" மக்களுடைய நல்வாழ்வுக்காக அமைக்கப்படுகிற மதக் கொள்கைகள் அந்த சமுதாயத்திலுள்ள மக்களில் ஒரு சிலரை அடிமைப் படுத்துவதற்காக உபயோகப்படுத்துவதைக்கண்டு அடிமையாக இருக்கின்ற மக்களை விடுவிக்க மதத்தின் அடிப்படைக் கொள்கையை உடைத் தெறியக் கூடிய சக்திகள் வளர்ந்து வந்திருக்கிறதைப் பார்க்கிறோம். கடவுளையும் கொள்கையும் அவரது செயல்களையும் விவரித்துச் சொல்லி மக்களுக்கு மதத்திலே நம்பிக்கையூட்ட வழி இருக்கின்றது.

" கீதையின் 13-வது அத்தியாயத்தைப் பார்ப்போம். அதில் கடவுள் இல்லையென்று மிகக் கடுமையாக சொல்கிற நாஸ்திகர்களை ஒரே மூச்சாக திட்டுவதற்குக் காரணம் என்ன ? கிருஷ்ணனை மாத்திரம் அவர்கள் புகழ்ந்திருக்கலாம். அதைவிட்டு கடவுள் இல்லை என்பவர்களைக் கிருஷ்ணன் உண்டு என்று சொல்லுகிற கதையிலே எதிர்ப்பதானது வலுவுள்ள கடவுள் மதவாதிகள் அன்றைக்கு சக்தியற்று இருந்து, மதத்தில் நம்பிக்கை இல்லாத மக்களை ஆழ்த்திவிட முயன்றிருக்கிறார்கள் என்பது விளங்குகிறது. இப்படி ஆஸ்திகத்திற்கும் நாஸ்திகத்திற்கும் இடையே நடந்து வந்திருக்கின்ற போராட்டத்திலே, அதுவும் உலகத்திலே விஞ்ஞான வளர்ச்சி அதிகப்பட்டுவருகிற காலத்தில், உலகிலே பகுத்தறிவு வளர்ந்துவருகின்ற காலத்தில் எது வெற்றியடையும் என்பது எங்களுக்குத் தெரியும். எது வெற்றியடையாது என்பதும் தெரியும். ஆனால் எதைக் கொண்டும் நாங்கள் பீதி அடைவது கிடையாது.

" ஐரோப்பாவில் நிலப்பிரபுத்துவத்தை ஒழிக்க வேண்டுமென்று அடித்தளத்தில் இருக்கும் மக்கள் பூர்ஷ்வா புரட்சியை உண்டாக்கினார்கள். முற்போக்குச் சக்திகள் ஐரோப்பா பூராவும் கிளம்பியது. அப்படிப்பட்ட சக்திகள், ஏழைகளை முதலாளிகள் சுரண்டவேண்டுமென்ற வெறி அதிகப்படும் போது, விவசாயிகளை நிலச்சுவாந்தார்கள் சுரண்டவேண்டும் என்ற வெறி அதிகப்படும்போது, வளர்வதற்கும் சாதகமாக இருக்கிறது. இப்படி பௌதிக சித்தாந்தங்களை அடிப்படையாகக் கொண்ட நிலைமையில் முற்போக்கு கொள்கைகள் நாட்டில் தானே வளர்ச்சியடையும். மக்களின் எண்ணம், கருத்துக்கள் ஒரே மூச்சாக எந்தப் பக்கத்தில் இருக்கிறதோ, அந்தப் பக்கத்தில் அவர்களுக்கு எதிராக எந்தத் தடைச் சட்டங்கள் வந்தாலுங்கூட மக்களுக்கு வெற்றி கிடைக்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது.

" ஒருவனுக்குப் பூரணமாக மதத்தில் நம்பிக்கை இருக்கலாம். ஆனால் அந்த மதத்தின் பேராலேயே பலரை அடிமைப்படுத்தி வைத்திருக்கக் கூடிய நிலைமை இருந்தால் அதைத் தகத்தெரிய மக்களின் எழுச்சி கிளம்பியே தீரும். அந்த முற்போக்குச் சக்திக்கு சட்டத்தின் மூலமோ அடக்குமுறை மூலமோ எந்தவிதமான தடையும் விதிக்கமுடியாது. எனக்கு மதத்தில்நம்பிக்கை உண்டு என்றால், நம்பிக்கை இல்லாத பிறரையும் நம்பிக்கை உடையவனாக ஆக்கிவிடவேண்டுமென்று நான் முற்படுவது

7th December 1954] [Sri P. Ramamurthi]

மிக மோசமான கொள்கையாகும். அது வெற்றியும் பெறாது. ஆகவே தான் எங்களுக்கு மதத்திலே நம்பிக்கை இல்லையென்றாலும் கூட, நாங்கள் மதத்தில் நம்பிக்கையுள்ளவர்களை அதிகாரத்தின் மூலமாக, பலாத்காரத்தின் மூலமாக, சட்டங்கள் மூலமாக தடுக்க முற்படுவதே இல்லை. மக்களுடைய எண்ணம், மக்களுடைய கருத்து, எழுச்சி இவைகளிலேயே அதிக நம்பிக்கை வைத்துள்ள உலகத்திலேயுள்ள மற்ற நாடுகளும்கூட அந்த மக்கள் அந்தெந்த மதத்தைப் பின்பற்றலாம், பிரசாரம் செய்துகொள்ளலாமென்று இருக்கிறதேதவிர அவர்கள் பின்பற்றும் கடவுளையெல்லாம் அழித்துவிடவேண்டுமென்று எந்தக்காலத்திலும் முயற்சித்தது எங்கேயும் கிடையாது. ஆகவே, எங்கள் கட்சி கடவுளை ஆதரித்தோ எதிர்த்தோ பிரசாரம் செய்வதை அடிப்படையான கொள்கையாக கொள்ளவே இல்லை.

" சில நாட்களுக்கு முன்பு சுவாமி சகஜாநந்தா அவர்கள் பேசினார்கள். மதத்தில் மகத்தான நம்பிக்கை கொண்டிருக்கக்கூடியவர், காங்கிரஸ் கட்சியில் அங்கத்தினராக இருப்பவர், மகாத்மா காந்தியின் பரம சீடர் என்று சொல்லிக்கொள்ளக்கூடியவர், அஹிம்சா பரமோ தர்மஹா என்றகொள்கையுடைய திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர். மகாத்மா காந்தி எந்த ராமரைக் கடவுளாகப்போற்றி வந்தாரோ அந்த ராமரை யாராவது குறை கூறினால் என்னால் சகிக்கமுடியுமா ? அப்படிச் சொல்பவரைக் கொலை செய்துவிடுவேன் என்று அவர் பேச ஆரம்பித்தார். நான் கேட்கிறேன். ராமரைக் குறைகூறுவது தவறானது என்று ஸ்ரீ சகஜானந்தா சொல்வதற்கு எப்படி உரிமை இருக்கிறதோ, அதேபோல அதைப் பயித்தியக்காரத்தனம் என்று சொல்வதற்கும் வேறொருவருக்கு உரிமை இருக்கிறதல்லாவா ? இவர் ராமனைத் தெய்வமாகக் கொள்ள நம்பிக்கை உடையவர் என்றால், அதைத் தைரியமாகப் பிரசாரம் செய்யட்டும். அதைவிட்டு ராமனைத் தெய்வமாகக்கொள்ளாதவர்களையும் நம்பிக்கை கொள்ளவேண்டுமென்று சொல்வதில் முற்பட வேண்டியதில்லை. எந்தக் கொள்கைக்கும் இடம் கொடுக்கக்கூடாது. அந்தக் கொள்கைக்கு இடம் கொடுக்கக்கூடியவகையில் சர்க்காரும் சக்திகளும் ஒன்று திரட்டப்படக்கூடாது. இந்த ஒரு சட்டம் வந்தால் இந்த சட்டத்தினால் பாதுகாப்பு யாருக்கு அளிக்கப்படுகிறது ? மதத்திலே நம்பிக்கை இல்லாதவர்களுக்கு, மதத்திலே மிகநம்பிக்கை வைத்துக்கொள்ள வேண்டுமென்ற கொள்கையைப் பரப்பும் வகையில் ஒருவர் நாடகம் நடித்தால், மனம் மிகப் புண்பட மாட்டாதா ? இப்படிப்பட்ட நாடகத்தை தடை செய்ய இந்தச் சட்டம் உதவுமா அல்லது இப்படிப்பட்ட நாடகங்களுக்கு பாதுகாப்பாக இந்தச் சட்டம் விளங்குமா ? ஒரு விவசாயியை ஒரு முதலாளி மிகக் கொடுமைப் படுத்துவதாக ஒரு நாடகத்தைக் காட்டினால் அந்த முதலாளி வர்க்கம் மனம் மிகப்புண்படும் என்ற காரணத்தால் அந்த நாடகம் தடை செய் யப்படுமா ? அல்லது இந்தச் சட்டத்தினால் அந்த முதலாளிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுமா ? அப்படியே பார்த்தால் இந்தச் சட்டத்தால் பணக்காரர்களுக்கும் ஆஸ்திகர்களுக்கும் முதலாளி வர்க்கத்தார்களுக்கும் பாதுகாப்பு அளிக்கக்கூடியதாகவே இது அமைந்திருக்கிறது. அவர்களுக்குத்தான் நாட்டிலே வெகுவேகமாக மதப் பிரசாரங்கள் செய்யப்பட்டுவருகின்றன. பெரிய பெரிய பணக்காரர்கள், மில் சொந்தக்காரர்கள் எல்லாம் குன்றக்குடி அடியாரை ஊர் ஊராக அழைத்துச்சென்று பிரசாரம் செய்ய ஏற்பாடு செய்கிறார்கள்.

" இந்தச் சபையில் நான் அவர்களுடைய பெயர்களைக் கூற விரும்பவில்லை. மூன்று வருஷங்களுக்கு முன்பு அவர்கள் கோடிக்கணக்கான (3-30 p.m.) ரூபாய்கள் செலவு செய்து ஒரு மில் கட்டினார்கள். இப்போது ஐந்தாறு மில்கள் அவர்களால் இன்னும் பல கோடிக்கணக்கான ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கின்றன. அவர்கள் எல்லோரும் இன்றைக்கு குன்றக்குடி அடியார்கள் இருக்கக்கூடிய குன்றக்குடிக்கு ஓடி, இந்தியாவின் பலபாகங்களுக்கும் அழைத்துச்சென்று பிரசாரம் செய்யச்சொல்லுகிறார்கள். என்ன பிரசாரம் செய்வார்கள் ? ' இந்த உலகம் மாயை. நீங்கள் நம்பவேண்டாம். உலகத்திலே நீங்கள் கஷ்டப்படுகிறீர்களா ? அது பொய் ; உண்மையல்ல. இன்றைக்கு நாங்கள் ஐந்து கட்டியிருக்கின்றோமா ; அதுவும் பொய் ; உண்மை யல்ல. அது வேறு விஷயம் ' என்றெல்லாம் அப்படிப்பட்ட

[Sri P. Ramamurthi] [7th December 1954

விஷயங்களை மட்டும் மக்கள் மனதிலே புகுத்துவார்கள். அதற்கு அப்பால் இருக்கக்கூடிய உலகத்திலுள்ள பொருள்கள் எல்லாம் பரம்பொருள்; இன்றைக்கு அதை நம்புங்கள் என்று இப்படிப் பிரசாரம் செய்வதன் மூல மாக இந்த நாட்டிலே வளரும்படியான இயக்கத்தை, இன்று நாட்டிலே மக்களிடத்திலே எதைச்சொன்னாலும் சிந்தித்து மடமையை எதிர்த்து, உண்மைக்காக போராடக்கூடிய இயக்கத்தை அழிக்கப்படுவதற்காகவே இந்தப் பிரசாரம் செய்யப்படுகின்றது என்று கூறினால் மிகையாகாது. அதில் இன்றைக்கு இன்னும் என்னென்ன எண்ணங்கள் கொண்டு இந்தப் பிரசாரங்கள் நடக்கின்றதோ தெரியவில்லை ? அந்தப் பிரசாரம் தாராளமாக ஒரு புரம் நடக்கட்டும். அதற்கு ஒரு வித ஆட்சேபணையும் இல்லை. ஆனால் எதற்காக உங்களுக்கு நாடகப் பிரசாரம் என்று கேட் கின்றீர்கள் ? நாடகத்தில் நடிக்கப்படுவதால், இன்றைக்கு அப்படிப்பட்ட நாடகங்களை தொழிலாளர்கள் பார்ப்பதால், நாட்டிலுள்ள பணக்காரர் களுடைய, பெரு நிலச்சுவான்தார்களுடைய ஒரு சில சித்திரங்கள் அதில் சித்தரிக்கப்படுவதால், அம்மாதிரியான ஒரு சூழ்நிலை இந்த நாட்டில் வளரக்கூடாது என்பதை அங்கீகரிக்கும் அளவில் இந்த மசோதா கொண்டு வரப்படுகிறது. அம்மாதிரியான மசோதாவை இங்கு கொண்டுவரக்கூடாது என்று சொன்னால், மத்திய அரசாங்கத்தின் சட்டத்தில் 8-வது கிளாசில் இதற்கு இடமிருக்கிறது என்று நிதி மந்திரியார் அவர்கள் சட்டத்தை எடுத்து காண்பித்தார்கள். மத்திய அரசாங்க மந்திரி ஸ்ரீமான் கைலாச நாத் கட்ஜூ அவர்களைக்காட்டிலும் இந்த முறையில் ஒரு படி வேகமாக நமது நிதி மந்திரியார் சொல்லுகின்றார் என்பதை ஞாபகப்படுத்த விரும்பு கின்றேன். அந்தச் சட்டத்தில் இம்மாதிரியாகப் போடப்படவில்லை. முத லில் போட்டிருப்பது என்ன வென்றால், ஆட்சேபகரமான பத்திரிகைகள் நடத்துவதுபற்றியது. அதாவது பல ஆட்சேபகரமான விஞ்ஞாபனங்கள் எழுதி, கட்டுரைகள் எழுதி, அவைகள் ஆட்சேபகரமானவை என்று அப் பத்திரிகைகளின்மேல் ஒரு வித நிலைமை ஏற்படுமானால், அப்படிப்பட்ட நிலைமையைச் சமாளிக்க அரசாங்கத்தார் செஷன்ஸ் கோர்ட்டு முன்பாக, அவர்களுடைய பத்திரிகைமீது ஜாமீன் கேட்பதற்கு உரிமையுண்டு. அந்த மாதிரி ஜாமீன் கொடுக்கவேண்டுமென்று சொன்னாலும்கூட, 21 நாள் டைம் கொடுத்து, செஷன்ஸ் கோர்ட் நீதிபதி முன்பாக வழக்கைத் தொடர்ந்து, அந்த செஷன்ஸ் நீதிபதி அப்பத்திரிகையில் எழுதியுள்ளவை பூராவையும் பரிசீலனை செய்து, பிறகு சரி என்று சொன்னால் ஜாமீன் கேட்கலாம். அப்பொழுதும் பத்திரிகையை தடைச் செய்து விடக்கூடும் படியான சட்டம் கிடையாது. ஜாமீன் கொடுக்கவேண்டும் என்று ஏன் கேட்கப்படுகிறதென்றால், ஜாமீன் கொடுத்தபிறகும்கூட மீண்டும் மீண்டும் அதேமாதிரியான பத்திரிகையை நடத்தினால், அதற்குப் பிறகு அந்த ஜாமீன் தொகையை பறிமுதல் செய்துக்கொள்ளலாம் என்பதற் காக. இந்த இரண்டு விஷயங்கள்தான் அதில் அடங்கியிருக்கிறது. ஆனால் நமது நிதி மந்திரியார் அவர்கள் நாடகத்தையே தடை செய்யவேண்டு மென்றுகூறுகிறார்கள். ஒருவன் குற்றம் செய்தால், அவன் எப்பொழுதும் குற்றம் செய்வான் என்று கூறுவதுபோல் இருக்கிறது இது."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" May I remind the Hon. Leader of the Opposition that the Press is not publishing the same matter again and again every day. They have to take in whatever news that is available and write articles thereon. They do not repeat the same old thing. So, there is no question of repetition in the Press. But in the case of dramatic performances, the same theme is repeated every day. It is not as if it is shown today and not repeated tomorrow. So there is no point in comparing the two. A difference has to be made between the drama and the press where there is a hunt for hot news every time."

SRI P. RAMAMURTHI :—" மந்திரியார் அவர்கள் கூறிய சமாதானத் தைக்கேட்டேன். இந்த சமாதானம் எற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

7th December 1954] [Sri P. Ramamurthi]

என் என்று யோசித்துப்பார்க்கவேண்டும். பத்திரிகையில் ஒரு விஷயம் பிரசுரிக்கப்படுகிறது. ஆனுல் அதற்கு முன்பாக ஜாமீன் கேட்கப் படுகிறது என்ருல், அதனுடைய அவசியமென்ன ? அவர்கள் பிர சுரிக்கும் பத்திரிகையில் சில குற்றங்கள் கூறப்பட்டிருக்கிறது. இனியும் அம்மாதிரியான குற்றங்கள் செய்யக்கூடும், அப்படிப்பட்ட குற்றத்திற்காக தண்டிக்கப்படுவார்கள் என்ற நோக்கத்தோடு, அதில் எழுதுவோர், அதை அச்சடித்துக்கொடுப்போர் இவர்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பது தானே அர்த்தம். எங்களுக்கு பத்திரிகையின் நோக்கத்தைப் பற்றி கவலே கிடையாது. ஆனுல் நாங்கள் எங்கள் மனதிற்கு ஆட்சேப கரமாகத் தோன்றினுல் அதற்கு நீங்கள் தனிப்பட்ட முறையில் சமாதா னம் கூறமுடியாது. நாங்கள் உடனே தடுத்து விடுவோம். தடுத்த பிறகு நீங்களே வேண்டுமானுல் தடுத்த 60 நாட்களுக்குள் ஹைகோர்ட்டில் அப் பீல் செய்துக்கொள்ளுங்கள் என்ற நிலேமை ஏற்படும்படியாகத்தான் இன்று இச்சட்டம் கொண்டுவரப்படுகிறது.

" இந்த நாட்டில் நடக்கும்படியான எந்த நாடகத்தை எடுத்துக்கொண் டாலும் அதற்கு சர்க்கார் அதிகாரிகளின் தயவு மட்டும் இருந்தால்தான் இந்த நாடகங்களே நடத்த சாத்தியமாகும் என்ற அளவிற்கு இம்மசோதாவில் இடமிருக்கிறது. சர்க்கார் தயவு இல்லாமல் நாடகங்கள் நடக்கிறது என்ருல் இனி அது இந்த நாட்டில் உண்மையான நாடகமாக இருக்க முடியாது. இப்பிரச்னே ஒரு குறிப்பிட்ட கட்சிக்காரர்களே மட்டும் பாதிக்கக்கூடிய விஷயமென்று நினேக்கவேண்டாம். இத்தேசத்திலுள்ள சர்க்கார் அதிகாரி களுக்கு விரோதமான அல்லது மாறுபட்ட கருத்துடையவர்கள் நாடகம் நடித்தால், அதைக் கூட அதிகாரிகள் தடை செய்துவிடலாம். எதுவும் பின்னுல்தான் பார்த்துக்கொள்ளவேண்டும். அதுவும் 60 நாட்களுக்குப் பிறகுதான். ஆகவே இது அமைதிக்கு பங்கம் விளேவிக்கக்கூடியதாகும். இந்நாட்டிலுள்ள மக்களின் பிரஜா உரிமையைப் பறிப்பதாகும்.

" அடுத்தபடியாக, கலே சம்பந்தமாக நமது சர்க்காரின் நோக்கமென்ன என்பதைப் பார்ப்போம். எவ்வளவோ உதாரணங்கள் நமக்குத் தெரியும். கலே சம்பந்தமாக சர்க்காருக்கு இருக்கும் மனப்பான்மையைப்பற்றி விரி வாகச் சொல்லவேண்டிய அவசியமில்லே. சமீபத்திலே அகில இந்திய நாடக அகாடமியின் சார்பாக இந்திய சர்க்காரால் நடத்தப்பட்ட போட்டி சம்பந்தமாக, சென்னே ராஜ்யத்திலே தியேட்டர் செண்டருக்கு நமது நிதி மந்திரி அவர்கள் தலேவராக இருந்தார்கள்."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" நான் அதற்குத் தலேவரல்ல."

SRI P. RAMAMURTHI :—" தலேமை வகித்தீர்கள். நாடகக்கழகத் தின் தலேவரான ஸ்ரீ ஷண்முகத்தினுல் கொடுக்கப்பட்ட அறிக்கையில் தியேட்டர் சென்டர் விழாவிற்கு தாங்கள் தலேமை வகித்தீர்கள் என்று பத்திரிகையில் அறிவிக்கப்பட்டிருந்தது. எதற்காகக் கூறவந்தேன் என் ருல் இதில் நம் சர்க்காரின் எண்ணம் நன்ருக வெளியாகியிருக்கிறது என் பதை தெரிவிப்பதற்காக. இந்த நாட்டிலே இந்த சர்க்கார் யார் யாரை நாடகக் கலேக்கு உயர்ந்தவர்கள் என்று தேர்ந்தெடுப்பதைப் பார்க்கவேண் டும். அதைப் பார்க்கும்போது கலேயை நமது சர்க்கார் தள்ளியாய்விட்டது என்பது நன்கு விளங்கும். இந்த நாட்டிலே வேறு எந்த நல்ல நாடக மும் இல்லாததுபோல் இவர்கள் சிவகாமியின் சபதத்தை தேர்ந்தெடுத் திருக்கிருர்கள். அதிலே தமிழ் நாட்டின் கலே நிறைந்துள்ளதாகக் கூறப் படுகின்றது. சகலரும் ஒப்புக்கொள்ளுவார்கள். ஆகவே அதன் உட் கருத்தைப்பற்றி நான் கூற விரும்பவில்லே. சிவகாமியின் சபதத்தை எழுதிய கல்கி அவர்கள்கூட நேற்றைய முன்தினம் இறந்துவிட்டார். அவர் ஒரு சிறந்த எழுத்தாளர். அவருடைய மறைவுக்காக நான் வருந்துகிறேன். ஆனுல் நெடுங்காலமாக நாடக உலகில் இருந்துகொண்டு 3-40 p.m. வருகின்ற தமிழ் நாட்டு மக்களால் போற்றப்பட்டு வந்திருக்கும்படியான நாடக நடிகர்கள் ஒருவருமே அதில் காணப்படவில்லே என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். திரு. என். எஸ். கிருஷ்ணனே எல்லோ ருக்கும் தெரியும். அதேபோல் காலேயில் இங்கு வந்த திரு. டி. கே. சண்முகம் எல்லோருக்கும் தெரிந்த ஒரு சிறந்த நடிகர். இப்படிப்பட்ட

பெரிய நடிகர்களை ஏன் விட்டுவிட்டார்கள் என்பதுதான் தெரியவில்லை. இன்றைக்கு அவர்கள் நடத்தக்கூடிய நாடகங்களில் சொல்லும்படியான கருத்துக்கள் நம்முடைய அரசாங்கத்தின் கொள்கைக்கு எந்த வகையிலும் முரணாக இருக்க முடியும் என்று கூட சொல்லுவதற்கு முடியாது.

" தவிர, சோவியத் யூனியன் கலாசார கோஷ்டி நம் நாட்டிற்கு வருகிறது. அல்லது சீனாவின் கலாசார கோஷ்டி நம் நாட்டிற்கு வருகிறது, என்றால் அவர்களை வரவேற்கும் கமிட்டியில் யார் யாரை அங்கத்தினர்களாக நியமிக்கிறார்கள் என்பதை சற்று கவனிக்கவேண்டும். திரு. துரைசாமி, இவர் யார் ? இவருக்கும் கலைக்கும் என்ன சம்பந்தமுண்டு என்றுதான் தெரியவில்லை. நம் நாட்டில் அவர்களை வரவேற்க சிறந்த கலைஞர்கள் இல்லையா ? அதேபோல் ஸ்ரீ ஆர். பார்த்தசாரதியை எடுத்துக்கொள்ளுங்கள். என்னுடைய நெருங்கிய நண்பர். 1930-ம் வருஷத்திலிருந்து நான் அவரை நன்கு அறிவேன். இருந்தாலும் இன்பர்மேஷன் ஆபீசரின் மனைவியாரின் சகோதரர் என்பதற்காக அவர்களையெல்லாம் இந்தக் கமிட்டிக்கு ஒரு அங்கத்தினராக இந்த சர்க்கார் நியமித்து இருக்கின்றார்கள். அவர்களுக்கு எல்லாம் கலை என்றால் என்னவென்று தெரியுமா ? இப்பேர்ப்பட்டவர்களையெல்லாம் இந்தக் கமிட்டியில் அங்கத்தினர்களாக ஏன் நியமிக்கவேண்டுமென்று தெரியவில்லை ? கலைஞர்களை வரவேற்க நம் நாட்டில் கலைஞர்களுக்கென்ன பஞ்சமா ? ஆகவே இவைகளிலிருந்து நமது சர்க்காரின் கலைக் கொள்கை நன்கு தெரியும். அடுத்தபடியாக அங்கத்தினரைப்பற்றி சொல்வோமானால், அதில் ஸ்ரீமதி செரியனுக்கு என்னதெரியும். இவர் இந்தக் கமிட்டியின் காரியதரிசியாக வேலைசெய்துவருகிறார். தமிழ் நாட்டுக் கலைக்கும் இவருக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" It was just for making arrangements connected with the reception of the Cultural Delegation. There was no competition as such between the members of the Committee and the visiting artists. We have to entrust such work to persons who are competent to look after the comforts of those persons. What the Hon. Leader of the Opposition is referring to is not relevant for the purpose of this Bill. He has been specialising in such things not only now, but always. I only wish that he should be relevant. After all the matter he has referred to has absolutely nothing to do with this Bill before the House.''

SRI P. RAMAMURTHI :—" இன்றைக்கு இவர்தான் இந்த கமிட்டியின் நிர்வாகத்தையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்று சொல்லுகிறார். இவைகளெல்லாம் கலாசார கோஷ்டிகள் தங்குவதற்கு ஓட்டல் வசதி செய்துக் கொடுத்தல், சாப்பாடு வசதி செய்து கொடுத்தல் ஆகியவைகள் ஆகும். இவ்விதமான வேலைகளுக்கெல்லாம் யாரையாவது உத்தியோகஸ்தரைப் போட்டிருந்தால் அவர் இதையெல்லாம் பார்த்துக்கொள்வார். இரு நாட்டுக் கலைஞர்களிடையே ஒரு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தவேண்டும், கலாசாரப் பண்பாடு வளரவேண்டும், இவைகள் மேலும் வளரவேண்டுமென்ற எண்ணம் வளரவேண்டுமானால் இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கும் கமிட்டியால் இது முடியாது. ஏன் கொஞ்ச நாட்களுக்கு முன்பே ஒரு கமிட்டியை ஏற்படுத்தி இந்த வேலைகளையெல்லாம் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கக்கூடாது ? ஸ்ரீமதி செரியன் அவர்களால் இவைகளையெல்லாம் சுயேச்சையாக பார்க்க முடியுமா ? இது மாதிரியான காரியங்களெல்லாம் இந்த மேல் தட்டுக்காரர்களிடம் ஏன் விடுகிறார்கள் ? ஆகவே கலைத்தொண்டில் ஒருவிதமான பாகுபாடும் இருக்கக்கூடாது.

" நிற்க இப்போது இந்தச் சட்டம் கொண்டுவருவதன் காரணம் என்ன ? முற்போக்கான நாடகங்களை தடை செய்வதற்காகத்தான். நாடகங்களை பிரசாரம் செய்வதற்கு உபயோகப்படுத்துகிறார்கள் என்று சொல்லுகிறார்கள்.

7th December 1954] **[Sri P. Ramamurthi]**

தேர்தல் நடக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அந்தச் சமயத்தில் ஒரு நாடகம் நடத்துவோமானால் அந்த நாடகத்தில் வருபவன் ஜில்லா போர்டு தேர்தலைப்பற்றி பேசுவான். தேர்தல் நெருங்க நெருங்க அதற்கு ஏற்றக் கருத்துக்களைச் சொல்லாமல் இருக்கமாட்டான். எதிர்க்கட்சியில் இருப்பவன் உடனே போலீஸ் உதவியைக் கொண்டு கம்யூனிஸ்டுகள் ஆபத்தை விளைவிக்கிறார்கள் என்று நிச்சயமாக கூறுவார்கள்.

"பணக்காரர்களுக்கு சில நாடகங்கள் பிடிக்காமல் இருக்கலாம். ஏனென்றால் அன்றாடம் அவர்களுடைய வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களை அப்படியே சித்தரிப்பதுபோல் இருக்கும் அந்த நாடகங்கள். பண்ணையாளை ஜமீந்தார் கசையால் அடிப்பதுபோல் காண்பித்தால் அவருக்கு அது பிடிக்காமல், அது தவறாக, இருக்கலாம். பிச்சைக்காரர்களின் பரிதாபகரமான நிலைமையும், கள்ளமார்க்கெட்காரர்கள் செய்யும் அக்கிரமங்களையும் கண்டிக்காத நாடகங்கள் இருக்க முடியாது? பிச்சைக்காரர்கள் கிருஷ்ணனைப் பற்றியும், ராமனைப் பற்றியும் பாடிய காலம் மலையேறிவிட்டது. பிச்சைக்காரர்கள் இன்றைய தினம் கள்ளமார்க்கெட்காரர்களைப் பற்றியோ அல்லது முற்போக்குக் கருத்துக்களையோ பாடினால்தான் அவர்களுக்கு காசு கிடைக்கிறது ஒருவேளை திரௌபதி வஸ்திராபகரணம் போன்ற நாடகங்களை நடத்தலாம் போலும். புராண நாடகங்கள் இந்தக் காலத்தில் எடுபடவில்லை. இந்த நாடகக்கலை இந்தத் தமிழ் நாட்டில் இருக்கவேண்டுமானால் இம்மாதிரியான மசோதா சர்க்கார் கொண்டுவரக்கூடாது. இந்த நாட்டில் நாடகங்கள் நல்ல முறையில் நடத்தப்படவேண்டுமானால், இது போன்ற சட்டங்களைக் கொண்டு வந்து, தடைகளைப் போட்டு முற்போக்கு எண்ணங்களை அழிக்கலாகாது. இந்த நாட்டில் பிச்சைக்காரர்கள் எண்ணிக்கை பெருத்துக்கொண்டே போகிறதேயொழிய, இன்னும் இந்தப் பிரச்னைத் தீர்ந்தபாடில்லை. இந்த அரசாங்கத்தாரால் இதைத் தீர்க்க முடியவில்லை. கையால் ஆகாத காரியமாக இருக்கிறது. ஏழு வருஷங்களாக பிச்சைக்காரத்தனம் இந்த நாட்டிலிருந்து ஒழியவேண்டுமென்று சொல்லிக்கொண்டேயிருக்கிறோம். இன்னும் இதை ஒழிக்க முடியவில்லை. ஏன்? இந்த அதிகாரத்தை எங்களிடம் கொடுங்களேன் நாங்கள் ஒழிக்கிறோமா இல்லையா என்று பாருங்களேன். 'அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா' என்பதுபோல்தான் இருக்கிறது. உங்களால் நிச்சயமாக இந்தப் பிச்சைக்காரர்களை ஒழிக்க முடியாது என்று கூறுவேன். இந்தப் பிச்சைக்காரர்களைப்போல் நடித்தால், அங்கே அவர்களுடைய பரிதாப நிலைமை பிரதிபலிக்கிறது. அந் நாடகத்தைப் பார்ப்பவர்களுக்கும் மனதில் இரக்கம் ஏற்படுகிறது. இந்த நாட்டில் மக்களிடையே நல்ல கருத்துக்களை நாடகங்கள் மூலமாக பரப்பி வரும் காலத்தில் இந்த ஆட்சியாளர் அந்தக் கலையே வளர விடாமல் தடுப்பதற்கு ஒரு புதிய வழியைக் கண்டுபிடித்துள்ளார்கள். நாடகங்கள் மீது எந்தப் பழியையாகிலும் சொல்லிவிட்டு Press Act-க்கும் இதற்கும் சம்பந்தத்தை கற்பிப்பதற்காக முயற்சி செய்கிறார்கள். இந்த நாட்டில் குற்றம் செய்தான் என்று சொன்னால், தண்டிப்பதற்கு கி.பி.கோ. 124பி, 124 போன்ற செக்ஷன்கள் இருக்கின்றன. அவற்றின்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளட்டுமே. உதாரணமாக ஏதோ ஒரு நாடகத்தைத் தடுக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய சட்டத்தின்கீழ் அந்தமாதிரி தடுப்பதற்கு உரிமை உண்டு. அப்படிச் செய்யாமல் புதிதாக சட்டத்தை சிருஷ்டி செய்து நடவடிக்கை எடுக்க ஏன் விரும்பவேண்டும்? ஏற்கெனவே இருக்கும் சட்டத்தின் கீழ் தனிப்பட்ட நபர் குற்றம் செய்தால் அவர்மீதுதான் நடவடிக்கை எடுக்க முடியும். ஆகவே அது போதாது நான் இன்றைக்கு நாடகத்தில் நடித்து சர்க்காரை வீழ்த்தி விடுவதாக நடத்தினால் என்மீது நடவடிக்கை எடுப்பது சாத்தியம். அது போதாமல் என்னுடன் நடிததவர்களையும், எனக்கு உதவி செய்தவர்களையும் அதில் சம்பந்தப்பட்ட எல்லோரையும் சேர்த்து குற்றம் சாட்டவேண்டுமென இச்சட்டம் கொண்டு வருகிறார்கள்.

"முற்போக்கு நாடகங்கள் நடைபெறாமல் தடுத்துவிடுவது சாத்யம் என்பது அவர்களுடைய நோக்கம். அவர்களுக்கு அப்படிப்பட்ட நோக்கம் இல்லை என்று சொன்னாலும் அதை ஏற்றுக்கொள்ள முடியாத காரியமாக இருக்கிறது. சட்டத்தைக் கொண்டு வரும்போது சொல்லும் காரணங்கள்

ஜோராகத்தான் இருக்கிறது. ஆனால் சம்பந்தப்பட்ட மக்கள் யார் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதுதான் எங்கள் நோக்கம். அதற்குப் பதிலாக ஆயிரக்கணக்கான மக்களுக்கு சங்கடங்கள் விளைவிப்பதல்ல எங்கள் நோக்கம்.

3-50 p.m. " இந்த நாட்டிலேயுள்ள முற்போக்குச் சக்திகளுக்கு தடைவிதிக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு, இந்த நாட்டிலேயுள்ள முற்போக்குக் கருத்துக்களுக்கு தடைவிதிக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு தான் இந்தச் சட்டம் வருகிறதே தவிர இந்த நாட்டிலுள்ள மக்களின் நலனில் அக்கறை கொண்டு இதைக் கொண்டு வருவதாகச் சொல்லமுடியாது. மக்களின் எதிர்ப்பை எல்லாம் எதிர்க்கக்ஷிகளின் எதிர்ப்பை எல்லாம் புறக்கணித்து நிதி மந்திரி அவர்கள் பேசுவதன் மூலமாக அவர் இந்தச் சபையை அவமதிக்கிறார். இந்த நாட்டிலுள்ள மக்களை அவமதிக்கிறார். இது விளையாட்டுக்காகச் சொல்வதில்லை. ஒரு வரிபோடும் மசோதாவைக்கொண்டு வந்தாலும்கூட அது இந்த நாட்டு மக்களுக்கு அதிகத் தீமையை விளைவிக்காது. ஆனால் நாட்டு மக்களின் அறிவு வளர்ச்சியை, முற்போக்குக் கருத்துக்களை, வளரவொட்டாமல் முளையிலேயே கிள்ளி எறியக்கூடிய வகையிலே ஒரு சட்டத்தைக்கொண்டு வருவதானது இந்தச் சமுதாயத்தையே குலைத்துவிடுவதாகும். ஆகவே இது மிகப் பயங்கரமான விஷயமாகும். மக்களுக்குள்ள அடிப்படை உரிமையிலேயே கையை வைக்கக்கூடிய விஷயமாகும். கலை வளர்ச்சிக்கு உலை வைப்பது மூலம் நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கே உலை வைக்கக்கூடிய மிகப் பயங்கரமான விஷயமாகும். ஆகவே தான் இந்தச் சபையிலுள்ள எல்லோரும் ஒரு முகமாக எதிர்க்கவேண்டியதொரு விஷயமாகும். நாடகக் கழகத்தின் தலைவராக இருந்த கனம் நிதி மந்திரி அவர்கள் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களைக் கலக்காமல், அந்தத் தொழிலிலே பல காலமாக உழைத்து அந்தக் கலைக்கே பெருமை அளித்து வருகின்றவர்களைக் கலக்காமல் ஏதோ ஒரு காரியம் செய்ய அது எவ்வளவு தூரம் தமிழ் நாட்டின் பெருமையையே டில்லியில் குலைத்துவிட்டது என்பதை நாம் அறிவோம்."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" நான் எதனுடைய தலைவரும் இல்லை."

SRI P. RAMAMURTHI :—" நாடகக் கழகத்தின் தலைவர் இரண்டு நாட்களுக்கு முன்பு தான் அறிக்கை ஒன்று விடுத்தார். அதற்கு நிதி மந்திரி அவர்கள் எந்த விதமான மறுப்பும் விடக்காணோம். அது போகட்டும்.

" இந்த மசோதாவைக்கொண்டு வருகின்ற காலத்தில் யாரையும் கலந்து கொள்ளாமல், அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்றவர்களின் அபிப்பிராயங்களைக் கலந்து கேட்க வசதியில்லாமல் அதற்குப் போதுமான அவகாசம் கொடுக்காமலே உடனடியாக இந்தச் சட்டத்தைப் பாஸ் செய்யவேண்டுமென்று சொல்லப்படுகிறது. எதற்காக இவ்வளவு அவசரம் ? மதுரையிலே ஒரு சம்பவம் நடந்துவிட்டது. அந்தச் சம்பவம் நடக்கவிடாமல் தடுக்கக்கூடிய அதிகாரம் இல்லை. ஆகவே இதைக்கொண்டு வருகிறோம். என்று சொல்லுகிறார்கள். அதுமாத்திரம் இவர்களுடைய நோக்கமாக இருந்தால் இருக்கின்ற சட்டத்திற்கே ஒரு திருத்தம் கொண்டுவரலாமே ? அதை விட்டுவிட்டு நாட்டின் முன்னேற்றத்தையே வெகுவாக பாதிக்கக்கூடிய வகையிலே ஒரு சட்டத்தை அவசரம் அவசரமாகத் தயாரித்து இந்தச் சபையிலே கொண்டு வந்து பிரேரித்து அதையும் இன்றைக்கே பாஸ் செய்துவிடவேண்டுமென்று முதலிலே சொன்னார். பிறகு ஒரு செலக்ட் கமிட்டியை நியமிப்பதாகச் சொல்லி அந்தக் கமிட்டியும் தனது யாதாஸ்தை 1954-ம் வருடம் டிசம்பர் மீ 13உக்குள்ளேயே சமர்ப்பிக்கவேண்டுமென்றும் சொல்வதானது, இந்த நாடக மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி, எல்லாக் கட்சியின் சம்மதத்தின் பேரிலேயே பாஸ் செய்தோம் என்று மக்களிடம் சொல்ல நடிக்கப்படும் நாடகம் என்றேதான் சொல்லவேண்டும். ஏனென்றால் ஒரு வாரத்திற்குள்ளேயே செலக்ட் கமிட்டியினால்தான் நன்றாகப் பரிசீலனை செய்ய முடியுமா ? இந்தச் சபையும் காலை 11 மணியிலிருந்து மாலை 5 மணி வரை நடக்கிறது. இந்தச் சபையிலுள்ள அங்கத்

தினர்களேதான் அந்தச் செலக்ட் கமிட்டியிலும் அங்கத்தினர்களாக இருக்கப் போகிறார்கள். அவர்கள் இந்தச் சபை நடவடிக்கையிலும் பங்கு எடுத்துக் கொண்டு, செலக்ட் கமிட்டியிலும் அதைப்பற்றி பரிசீலனை செய்ய முடியுமா என்று கேட்கிறேன். அதைப்பற்றிக் கவலையில்லை நமது நிதி மந்திரி அவர்களுக்கு. நம்மைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கக்கூடிய மக்களுக்குப் போதுமான விஸ்வாசத்துடன் இந்தச் சபையிலே நடந்துகொண்டாலும் சரி, நடந்துகொள்ளாவிட்டாலும் சரி, எங்களுக்கு எப்படியாவது இந்த மசோதாவைப் பாஸ் செய்துவிடவேண்டுமென்ற நோக்கத்தோடு இதை அனுகுகிறார் நமது நிதி மந்திரி. அதையும் மீறி நாங்கள் இதை ஒப்புக்கொள்ளமாட்டோம் என்று சொன்னாலும்கூட, எங்களுக்குப் பூர்ண மெஜாரிடி இருக்கிறது, ஆகவே எங்கள் மெஜாரிடி பலத்தைக் கொண்டு இதை நிறைவேற்றியே தீருவோம் என்கின்ற தோரணையைத்தான் அவர் தன் பூராப் பேச்சிலும் கடைப்பிடிக்கிறார். அவரிடம் பூர்ண மெஜாரிடி பலம் இருக்கலாம். ஆனால் அந்த மெஜாரிட்டி கட்சிக்குள்ளேயே இந்த மசோதாவைப்பற்றி மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருப்பது வாஸ்தவம். அதை மூடிவைத்துப் பயனில்லை. இருந்தாலும் அந்த மாறுபட்ட அபிப்பிராயங்கள் சபையிலே வராது. வேறு எந்த மசோதாவிலே அவர்கள் பேசினாலும்கூட இந்த மசோதாவைப்பற்றி அவர்கள் கட்சியிலிருந்து யாருமே பேசமாட்டார்கள். அவர்களுக்குப் பேசத் தெரியாது என்பதால் அல்ல. அவர்கள் மௌனம் சாதிக்கின்ற காரணம் அவர்களுடைய உள்ளக் கருத்துக்கள் வெளியே யாருக்கும் தெரியாமலிருக்கவேண்டுமென்பதற்காகத்தான். ஆனால் அது அம்பலம் ஏறிய விஷயம். ஆகவே யாருக்கும் தெரியாது என்பது அல்ல."

Sri V. MUTHU :—" நாங்களும் பேசுவோம். உங்களுக்கு அதிக நேரம் கொடுக்கவேண்டுமென்பதற்காகத்தான் நாங்கள் பேசாமல் இருக்கிறோம்."

Sri P. RAMAMURTHI :—" இந்தச் சர்க்காருக்கு நாட்டில் கலவரம் ஏற்படாதவாறு தடுப்பது ஒன்றிலே மாத்திரம் எண்ணமாக இருந்தாலும் அவசரம் அவசரமாக இந்த மசோதாவைக் கொண்டுவர வேண்டியதில்லை. இருக்கக்கூடிய சட்டத்திற்கு அவசரமாக ஏதாவது திருத்தங்கள் கொண்டுவரட்டும். அதை நாங்கள் ஒப்புக்கொண்டு சர்க்காருக்கு அவர்களுடைய எண்ணத்திலே வெற்றி உண்டாகும்படி செய்கிறோம். இந்த மசோதாவை இப்படி அவசரம் அவசரமாகக் கொண்டுவருவதற்குப் பதிலாக இதை நன்கு ஆர அமற ஆலோசனை செய்வோம். பொது மக்களின் அபிப்பிராயத்தையும் கேட்போம். இந்தக் கலை சம்பந்தப்பட்ட தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களின் அபிப்பிராயங்களையும் கேட்போம். அதற்குப் பிறகும் இந்தச் சட்டம் வேண்டுமென்று தோன்றினால் அதைப் பற்றி இந்தச் சபையிலே விவாதிக்கலாம். ஆனால் அப்படிச் செய்ய மாட்டார்கள். ஏனென்றால் அது மாத்திரம் அவர்களுடைய எண்ணமில்லை. உள்ளத்திலே வேறு ஒரு எண்ணத்தைக் கொண்டு இதை வெளிச் சாக்காக வைத்துக்கொண்டுதான் இந்தச் சட்டத்தைக் கொண்டுவருகிறார்கள். ஆகவே தான் கனம் நிதி மந்திரி அவர்களுக்குச் சொல்லுகிறேன். உங்கள் வாக்கிலே எங்களுக்கு நம்பிக்கை யில்லை. நீங்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொண்டு சபை பூராவும் இந்த மசோதாவை ஒப்புக்கொள்ளக்கூடாதென்று சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்."

Sri S. T. ADITYAN :—" கனம் அவைத்தலைவர் அவர்களே இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்புவதாக முடிவு செய்திருக்கிறபடியால் அதன் கொள்கையைப்பற்றி விவாதித்துப் பிரசங்கம் செய்யத்தேவையில்லை. ஆனால் இந்த மசோதாவைப் பற்றி முக்கியமாக இரண்டு விஷயங்களைச் சொல்ல பிரியப்படுகிறேன். இந்த மசோதாவைப் பற்றி மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. 3-56 p.m.

" எனக்குத் தெரிந்த வரையில் கனம் மந்திரி அவர்கள் இந்த மசோதாவைப் பிரேரேபிக்கும்போது இது புதியதாகக் கொண்டுவரப்பட்டதாக எண்ணவேண்டியதில்லை. இருக்கக்கூடிய சட்டத்தையே புதுப்பிக்

கிறேம். குறிப்பாக Press (Objectionable Matter) Act-ன் ஷரத்துக்களே இதிலும் இருக்கின்றன என்றெல்லாம் மிகத் தெளிவாக எடுத்துச் சொன்ஞர். ஆனல் முந்தைய மசோதாவிற்கும், இப்பொழுது இருக்கிற மசோதாவுக்கும் முக்கியமாக ஒரு வித்தியாசம் இருக்கிறது. அதை எடுத்துச் சொல்லவில்லை. அதுதான் இந்த மசோதாவில் இருக்கிற 6-வது கிளாஸாகும். அதாவது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய முறையில் நாட்டிலுள்ள வகுப்பினரிடையே மோதலை உண்டு பண்ணக் கூடிய, உண்டுபண்ணும் என்று நம்பக் கூடிய நாடகங்களை தடை செய்வதற்கு இது அதிகாரம் அளிக்கிறது.

"குறிப்பாக மத சம்பந்தமான அபிப்பிராய பேதங்கள் இந்த நாட்டிலே நீண்டகாலமாக, ஸ்வாமி சகஜானந்தா காலமாகிய இன்றுவரை, நீடித்து இருந்துகொண்டிருக்கிற விஷயம். அவ்வப்போது நாட்டிலே ரத்தக்களறியை உண்டு பண்ணிக் கொண்டிருக்கிற விஷயம். இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு ரங்கில ரசூல் என்ற பிரசுரத்தில் மஹமது நபியைப்பற்றி துவேஷமாக எழுதியிருந்தது என்பதற்காக அதை எழுதியவரையே கொன்றுவிட்டார்கள். ராமனைப்பற்றி எவன் ஒருவன் இழிவாகப் பேசுகின்றுனே அவனைக்கொலை செய்து விட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பேன் என்று ஸ்வாமி சகஜானந்தா போன்றவர்கள் பேசியதையும் கேட்டோம்.

"சமீபத்திலே புத்தரைப்பற்றிச் சித்தரிக்கிற லைட் ஆப் ஏஷியா என்ற படம் நம் இந்தியாவிலுள்ள எல்லா நகரங்களிலும் திரையிடப்பட்டது. நாமும் பலர் பார்த்திருக்கிறேம். ஆனல் அந்தப் படத்தை சிலோனில் காட்ட முயற்சித்தபோது அங்குள்ளவர்கள் அதைக் காட்டக் கூடாது என ஆட்சேபணை செய்தார்கள். சர்க்காரும் அதைக் காட்டக் கூடாது என்று தடை விதித்ததையும் நாம் அறிவோம். இதிலிருந்து நாம் ஒரு விஷயத்தை உணரலாம். அந்தந்த நாட்டிலே உள்ள மக்களின் உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுத்து, அவர்களது உணர்ச்சி புண்படாத வகையிலே சர்க்கார் நடவடிக்கை எடுப்பது அவசியம். நாடகங்களின் மூலமாகவோ, சினிமாப்படங்கள் மூலமாகவோ மக்களுடைய உணர்ச்சி புண்படுத்தப்பட்டால் அதற்கு மக்களிடையேயிருந்து ஆட்சேபணைகள் வருவது இயற்கையே. எனக்கு ஒரு சிறு சம்பவம் ஞாபகம் வருகிறது. நான் சிறுவனுக இருந்த காலத்தில் நவாப் ராஜமாணிக்கம் ராமதாஸ் என்ற ஒரு நாடகம் நடித்தார். அந்த ராம்தாஸ் நாடகத்தில் ஹிந்துவாக இருந்த ஒருவர் முஸ்லிமாக மாறியதாக ஒரு கட்டம் வருகிறது. அந்தக் கட்டத்தை நடிக்கக் கூடாது என்று மேலப்பாளையத்தில் பலமான ஆட்சேபணை எழுந்தது. ஆகவே அந்த ஆட்சேபணையின் பேரில் அவர் அந்தக் கட்டத்தையே நிறுத்திக்கொண்டு விட்டார். இப்படி மக்களுடைய உணர்ச்சிக்கு மதிப்புக்கொடுப்பது தான் முக்கியமானதாகும். அது தான் என்னுடைய அபிப்பிராயமாகும்.

"இது மாதிரியாக ஆட்சேபணைக்குரிய நாடகங்கள் நடந்தால் அதைத் தடுக்க பொதுமக்கள் எவ்வளவு தூரம் ஈடுபடவேண்டும். சர்க்கார் எவ்வளவு தூரம் தலையிடவேண்டுமென்பது மற்றெரு கேள்வி. பொதுவாகப் பார்க்கப்போனல் நாடகங்களிலும் சரி, படங்களிலும் சரி முற்போக்குக் கருத்துக்கள் என்ன என்னவென்று எடுத்துச் சொல்லாவிட்டாலும் கூட மக்கள் எது சரியான கொள்கை என்று எண்ணிக்கொண்டிருக்கிறர்களோ அவைகளைப் பிற்போக்குக் கருத்துக்கள் என்று சொல்லி இழிவு செய்யக் கூடிய நிலைமையே வளர்ந்து கொண்டிருக்கிறதைப் பார்க்கிறேம். கலை வளரவேண்டுமென்பதில் யாருக்கும் எந்தவிதமான ஆட்சேபணைகளும் இருக்க முடியாது. ஆனல் கலை என்று சொல்லிக் கொண்டு நமது சமுதாயத்தையே இழிவு படுத்திக் கொள்ளும் ஒன்றையும் மக்கள் விரும்பமாட்டார்கள்.

"உதாரணமாக ஒரு படம் இருக்கிறது. அதிலே ஒரு பாத்திரம் காளி தேவியையே காலால் உதைப்பது போல நடித்துக் காட்டப்படுகிறது. இதற்கு சென்ஸார் போர்டிலேயே பலத்த எதிர்ப்பு இருந்ததால் அந்த ஒரு பகுதியை வெட்டிவிட்டு, அந்தப் பாத்திரம் காளி தேவியின் பூஜைக்கு வைத்திருந்த

7th December 1954] [Sri S. T. Adityan]

சாமான்களைகாலால் உதைத்துத் தள்ளுவதைப் போல நடித்துக் காட்டப்படு கிறது. அதுவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு கேள்வி கேட்கிறேன் . . . இதே பிரகாரம் வெளி நாடுகளில் எந்த மாதிரி இருக்கிறது ? இங்கி லாந்து சம்மந்தப்பட்ட சம்பிரதாயம் அடியேனுக்குத் தெரியும். அந்த நாட்டிலே மதத்தவர்கள் யாரையும் இழிவு செய்யக்கூடாது. மத வழக் கங்களையோ சம்பிரதாயத்தையோ கேலி செய்யக்கூடிய ஒரு படம் இருக்கும் பட்சத்தில் அந்தப் படத்தை அனுமதிப்பதில்லை. அது மாத்திரமல்ல. பத்திரிகைகள் சங்கத்தில் இதை ஆராய்ந்து, அப்படிப்பட்ட படங்களுக்கு விளம்பரம் கூட கொடுப்பது கிடையாது. உலகம் பூராவும் இப்படித்தான் இருக்கிறது. அந்தக் கண்ணோட்டத்தோடு பார்க்கும்போது இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிற மசோதாவானது ஆட்சேபணைக்குறியதாக இல்லை. ஆனால், இந்த மசோதாவை என்ன நோக்கத்தோடு சர்க்கார் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. சகோதர அங்கத் தினர்கள் சொல்கிற மாதிரி ஆட்சேபிக்கக்கூடிய வாசகங்கள் அதில் இருக் கிறதென்று கருதினால் செலக்ட் கமிட்டியினர் அவைகளை அலசிப்பார்க்க வேண்டும். இந்த மசோதாவை சர்க்கார் கொண்டுவந்திருக்கும் நோக்கம் ஆட்சேபகரமான காரியங்களுக்காக என்று சில அங்கத்தினர்கள் சொல்லிய மாதிரி இருந்தால், இவைகளையெல்லாம் செலக்ட் கமிட்டியில் பரிசீலனை செய்து, சர்க்காருடைய எண்ணம் நிறைவேறுதபடி செய்துவிடமுடியும். 4 p.m.

" நாடகங்களும் கூத்துக்களும் இப்பொழுது ராஜீயப் பிரசாரத்திற்குச் சாதனமாக இருந்து வருகின்றன. காங்கிரஸ் பிரசாரம் குரவைக் கூத்து மூலமாக நடந்து வருகிறது என்பது தெரிந்த விஷயம். காங்கிரஸ் பிர சாரத்திற்கு எதிர்ப் பிரசாரமாக மற்ற கட்சிகளும் இந்த முறையைக் கையாண்டுவருகின்றன. ஸ்ரீமான் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் ஒரு காலத்திலே காங்கிரஸ்காரர்களை நோக்கி ' நீங்கள்தானே முதன்முதலாக கலையின் மூலமாக பிரசாரத்தைத் தொடங்கியது ; அதைப்பார்த்துக் கொண்டு எதிரிகளும் அந்த மாதிரி பதிலுக்கு செய்ய ஆரம்பித்திருக்கிறார் கள் ; ஆகவே, நீங்கள் வருத்தப்படவேண்டியது ஒன்றுமில்லை ' என்றார். இதையும் நாம் ஆலோசனை செய்யவேண்டும். அந்த நிலைமையிலே இன்று நாடகங்கள் ஒரு பிரசார இயந்திரமாக உபயோகிக்கப்பட்டு வருகின்றன. மலையாள, தெலுங்கு நாட்டிலும் சில கட்சிகளுக்கு இது முக்கியமாக உபயோகிக்கப்பட்டு வருகிறது. தெருக்கூத்து, நாடகங்கள், குரவைக்கூத்து, வில்லுப்பாட்டு ஆகிய கலைகள் ராஜீயப் பிரசார இயந்திரமாக உபயோகிக்கப் பட்டு வருகின்றன. அப்படிச் செய்வது சரி என்றாலும் சரி, தப்பிதம் என்றாலும் சரி, என் சம்பந்தப்பட்டவரை ஆட்சேபணை இல்லை. பொது வாக, ராஜீயக் கண்ணோட்டத்தோடு நோக்கும்போது அதில் யாதொரு ஆட்சேபணைக்கும் வழியில்லை. செய்தால் செய்யட்டும். அதில் ஒரு பிசகும் இல்லை. ஆனால், அதேநேரத்தில் ஒரு பக்கம் நமக்கு சுதந்திரம் வேண் டும் என்பது வாஸ்தவம். பேச்சு சுதந்திரம் வேண்டும் என்பதும் வாஸ்த வந்தான். இஷ்டப்படி நடித்துக் காட்டுவதற்கு சுதந்திரம் வேண்டும் என் பதும் வாஸ்தவம். ஆனால், அதே பிரகாரம் அடுத்தவனுக்கும் சுதந் திரம் வேண்டும் அல்லவா ? அவனுடைய நம்பிக்கையாக சில கொள் கையை வைத்திருக்கிறான். அந்தக் கொள்கையை, அவன் சம்பந்தப்பட்ட மட்டில், பாதுகாப்பதற்கு உரிமை வேண்டும். அதை விடுத்து இன்றைய நிலைமையில் அவனுடைய மனது புண்படும்படியாக ஏதாவது செய்வ தானால் அது நியாயமில்லை என்று எனக்குத் தோன்றுகிறது.

" இது சம்பந்தமாக ஒரு ஆட்சேபணை சொன்னார்கள் : ' வால்மீகி ராமாயண புத்தகத்தில் எழுதியிருக்கிறமாதிரி தானே அவர்கள் நடித்திருக் கிறார்கள் ' என்று கனம் அங்கத்தினர் திரு. டி. சண்முகம் பிள்ளை அவர்கள் சொன்னார்கள். இருக்கலாம். அசல் ராமாயணத்தில் அப் படியே சொல்லியிருக்கலாம். இதற்கு நான் ஒரு சிறு உதாரணம் கொடுத்து விளக்க விரும்புகிறேன். இந்த தேசத்தில் நீண்டகாலமாக ஒரு சம்பிரதாயமாக ஒரு பழக்கம் இருக்கிறது. இந்து மதக் கோயில்களில் மேள வாத்தியங்கள் முழங்கப்படுகின்றன. உற்சவ காலங்களில் கோவிலைச் சுற்றி சுவாமி வரும்போது மேள தாளங்களுடன் வருவதைப் பார்க்கி றோம். ஆனால், முஸ்லிம் தர்க்காவுக்கு அருகில் வரும்போது மாத்திரம்

மேள தாளங்களையும் வாத்தியங்களையும் நிறுத்திக்கொள்வது வாடிக்கையாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பிற மதத்திற்கு மரியாதையாக இது செய்யப்படுகிறது. இது விஷயமாக நான் எத்தனையோ முஸ்லிம் நண்பர்களைக் கேட்டிருக்கிறேன். 'சங்கீதத்துடன் மசூதியருகில் போகக் கூடாதென்று குரானில் சொல்லப்பட்டிருக்கிறதா?' என்று நான் கேட்டதுண்டு. இல்லையென்று அவர்கள் சொல்லுகிறார்கள். புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருப்பது மட்டுமா மதம்? புஸ்தகத்தைச் சார்ந்தது மட்டுமல்ல மதம். மதம் வளர்ச்சியாகிக்கொண்டிருக்கிறது. வால்மீகி ராமாயணத்தில் சொல்லியிருந்தாலும் அக்கரை இல்லை. இன்றைய நிலைமையில் ராமனைத் தெய்வம் என்று பல கோடி மக்கள் போற்றி வழிபடுகிறார்கள். நான் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவன் அல்ல. என் சம்பந்தப்பட்டமட்டில் ராமனைத் தெய்வம் என்று நம்புகிறவன் நான் அல்ல. ஆனபோதிலுங்கூட பல லட்சக்கணக்கான ஜனங்கள், கோடிக்கணக்கான ஜனங்கள் ராமனைத் தெய்வம் என்று நம்புகிறபோது என் சம்பந்தப்பட்டமட்டில், இந்தத் தேசம் சம்பந்தப்பட்டமட்டில், இந்திய அரசியலமைப்பு சட்டம் சம்பந்தப்பட்ட மட்டில் அதற்கு விரோதமாக, அவர்கள் மனதைப் புண்படுத்தவேண்டிய அவசியம் இல்லை. இதற்கு ஏற்கெனவே சட்டங்கள் போதுமானபடி இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், நிதி அமைச்சர் அவர்கள் சொன்ன பிரகாரம் ஒரு விசாரணை செய்வதற்கு தாவா செய்து கொள்ளலாம் என்பதற்கு இந்தச் சட்டம் கொண்டுவந்ததில் ஆட்சேபணை கிடையாது. நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்வது இதுதான்: ஏற்கெனவே சந்தேகக் கார்மேகங்கள் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்த ஒரு சூழ்நிலையில் கனம் மந்திரி அவர்கள் தீர ஆலோசிக்கவேண்டியது. இப்பொழுது இருக்கிற வாசகத்தைத் திருத்தியமைத்து அந்தச் சந்தேகத்தைப் போக்கிவிட முடியுமா என்று ஆலோசிக்கவேண்டும். இரண்டாவது, சர்க்கார் திட்டவட்டமான ஜாமீன் கொடுக்கவேண்டும். அதாவது 'இந்தச் சட்டத்தினால் சர்க்காருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படமாட்டாது; ராஜீய விஷயங்களுக்கு இது உபயோகப்படுத்தப் படாது; வாஸ்தவத்திலேயே ஜனங்களுக்கு நன்மை செய்யக்கூடிய ஒரு கருத்திற்காக மட்டும் இது உபயோகப்படுத்தப்படும்' என்று நிதி மந்திரி அவர்கள் திட்டவட்டமான ஒரு ஜாமீன் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

"இந்த மசோதாவில் அனேக சில்லரை சீர்திருத்தங்களும் செய்ய வேண்டியிருக்கின்றன. அவைகளை செலக்ட் கமிட்டி நல்ல விதமாக ஆலோசித்து முடிவு செய்வார்கள் என்று நினைத்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்."

* Sri M. NARAYANA KURUP :—"Mr. Deputy Speaker, Sir, even the able Finance Minister was on slippery ground in commending this Bill to this House. That shows the limitation of advocacy in certain cases. I have very carefully gone through the statement of objects and reasons and listened patiently to what the Hon. the Finance Minister had to say on this Bill. But still I am unconvinced that there is any necessity for a legislation of this kind at this juncture. It has not been stated that the 1876 Act, which is now in existence, has proved incapable of meeting any situation. The only point that has been made out is that there is now a provision for appeal and in the guise of adding that provision, a penal law of such sweeping ramification is introduced so that, if we pass it without protest, it will certainly be a slur on this House. It has been a tragedy of the post-Independence era in our country that we have sought not only to retain all the obnoxious penal laws of the Britisher but also to add considerably every year to the volume of such laws. We find to-day a tendency both at the Centre and in the States to vie with each

other in this respect. The argument comes to this. The Central Government have passed the Press (Objectionable Matter) Act; why not the State have this humble Bill at least in its own way? That is not the way of looking at things. As I said, this Bill, if enacted, will affect freedom of expression and the liberty of the individual at every stage. Probably it is consistent with the uniqueness of our country wherein the subject has got the fundamental right of being detained without trial in times of peace. This is quite consistent with that. The Bill bristles with such generalities, vagueness and indefiniteness that we do not know where we are. While everyone will agree that there must be some decency in public performances and that they should not outrage our moral feelings to a very great extent, I wish to caution the Government that there is a limitation which legislation can impose on these subjects. Could we make a nation morally high and decent by legislation? If we could, then we could have created angels by legislation. Therefore the sphere of legislation for making a nation or people more moral or morally high or for making them observe decency in every department of life is very limited. This fact must be borne in mind in undertaking a penal legislation like this.

" Sir, it has been our misfortune, peculiar misfortune, that we attach the greatest respect and importance to religious and communal feelings. The result is that our country has now been divided into India and Pakistan. What we find here is, instead of divisions based on communalism or religion, we have gone a step further and now we are faced with sectarianism in society. It would certainly have hurt our feelings when we read what Mr. Beverley Nichols wrote in his ' Verdict on India '. He said that he tried from the Himalayas to Cape Camorin to find out an Indian but that that elusive Indian always escaped his grasp. He could find only a Punjabi, a Bihari, a Bengali, a Maharashtrian and a Madrasi. Now I wish t oask : Have our feelings of nationhood or national solidarity improved after Independence? It might be asked : ' Should not facts be faced; if divisions exist in society, should we not recognize that fact and deal with it? '. I agree. But we cannot do away with divisions and feelings of communalism and sectarianism by recognizing them, much less in a penal law like the present one. We have heard of the story of ' Sahasrakavachas ' in Puranas. If one drop of blood was spilled on earth, ten thousand Sahasrakavachas sprang from it. So, if we want to kill the demon of communalism, it should be done without shedding blood. Therefore, to go on recognizing divisions and subdivisions, I am afraid, would introduce fissiparous tendencies which would ultimately prove dangerous to the very existence of our nation. The application of this law will enable any Government to prevent any performance, as has been pointed out by many hon. Members who spoke before me. I would cite one instance. A play called ' Indulekha ', written by that immortal author, Chandu Menon, used to be staged—and I believe is even now staged—at every place in Malabar. It is a humorous setting of a Nambudiri's life, depicting the social condition of our district some time ago.

4-10 p.m.

It presents a humorous picture of a Nambudri. Probably if this Bill is passed into law, this drama may be objected to on the ground that it is an insult to the Nambudri community. I am just trying to show the wide scope of mischief that can be played by the application of this Act.

" Sir, the other day it was said on the floor of the House that democracy was a much abused word. There are two phrases which are even more maligned and much more abused by officials and executives, ' breaches of peace and public order '. There are no phrases which are more vague and dangerous to the liberty of the average citizen than these two. Now who is to interpret such vague phrases? Probably it is an officer who may be even a police constable. It is such a difficult job and these things have not been defined in the Act at all. The original Act is very simple. It consists only of two or three things, as mentioned by the Hon. the Finance Minister, viz., sedition, scurrilous and indecent performances, etc., which bring about moral degradation in the audience. The existing law should suffice, if that alone is the object. Otherwise, it is an encroachment on the liberty of the people. I hope, Sir, that when it goes before the Select Committee, the provisions of the Bill will be scrutinized carefully and the evil part of the Bill removed."

* Sri T. C. Narayanan Nambiar :—" Mr. Deputy Speaker, Sir, this is a planned pincer attack on the upsurge of democratic art and culture in our country. It is an attack on the development of democratic art. I say it is a pincer attack because, on the one side the Government are legislating on a subject which will curtail and suppress this art and on the other, some manoeuvres are going on to bring to the forefront people who have nothing to do with the art and who have done nothing for the promotion of culture and the dramatic art. As has been pointed out by Mr. Ramamurthi, not only in Madras such manoeuvres are made but even in Malabar, the same dirty business is being done by responsible persons. There are about 200 Kala Samithis and a Kendra Kala Samithi at their head, which is functioning in Kozhikode, the headquarters of the Malabar district. People who have had nothing to do with the tremendous renaissance of the dramatic art, which we see now, people who have no love for the art and people who have contributed nothing to the growth of the Kerala art or culture—big officials, advocates and landlords—have formed in *Madras* a Kerala Kala Academy! Why has such a thing been done? It is because, till now there has been no patronage from the Government for the popular art. Now a *Sangeet Natak Academy* has been formed in Delhi and it is possible that some of the State institutions will be given some help. In order to see that the already existing organizations are not given any help, they have started these bogus organizations of so-called artistes, who have done nothing for art or culture. That is why I said, a planned pincer attack was being made on the upsurge of art and progressive culture in the State.

7th December 1954] [Sri T. C. Narayanan Nambiar]

"If the present piece of legislation is enacted there will not be pantomimes, dramas, etc., which we enjoy to a certain extent nowadays. For example there was a great Malayalam poet called ചങ്ങമ്പുഴ. He had written a poem called 'Vazhakula, viz., a bunch of plantains. The poem begins thus : 4–20 p.m.

'മലയപ്പുലയനാ മാടത്തിൻമുററത്ത്
മഴവന്ന നാളൊരു വാഴനട്ടു.'

That is a poor Harijan plants a plantain tree in the courtyard of his humble hut. The plantain tree grows out of the sweat and labour of the poor Harijan and yields fruit. But at the time when it yields fruits and the bunch of fruits are hanging from the tree, the landlord comes and in utter disregard of the sweat and labour of the Harijan, carries them when the children of the Pulavan shed tears. I am not going to recite all the verses. When the landlord carries the bunch of fruits without minding the toil and sweat of the Harijan, viz., Pulayan, the poet says :

'ഇതിനൊക്കെ പ്രതികാരം ചെയ്യാതടങ്ങുമോ
പതിതരേ നിങ്ങൾതൻ പിൻമുറക്കാർ? '

The meaning is 'You, depressed people, your successors are not going to leave these landlords *unavenged.* If this is depicted in a Kathakalekshepam or pantomime now, it would be declared as unlawful by the present enactment. That is why I say that this Act is going to kill culture and that is why I say that this Government are the killer of the peoples' art and culture.

"The great Kunjan has written in Kairali about those people who pretend to be very great people but who are in reality utterly useless, irresponsible and worthless people. Besides being utterly useless, irresponsible and worthless, those people pretend to be very great and are at the helm of affairs. Of those people the great Kunjan says :

'പട്ടിണി പെട്ടങ്ങുമിണ്ടും നടക്കുന്ന
പട്ടിക്കു താടിയും മീശയും ദംഷ്ട്രയും
കെട്ടിച്ചമയിച്ച് കേസരി വാഴുന്ന-
കാട്ടിൽ ഗിരിമുകളേററിയിരുത്തിയാൽ
ചേട്ടയ്ക്കു് കണ്ഠത്തിൽനിന്ന് കണ്ഠീരവ-
ശ്രേഷ്ഠൻെറ ഘോരനാദം വരുത്താവതോ ?
"ബൌ, ബൌ" യിതെന്നൊരു ശബ്ദം പുറപ്പെടും.' . .

That is, suppose a bitcch, a useless bitch, a rotten bitch, is caught and put in a lion's skin and taken to the highest peak of the mountain. Even then if the bitch opens its mouth, it will not be the lion's noise that would be heard but that of the bitch. That is what Kunjan says. The people who think that they are at the helm of affairs and who think they are big people and learned people, will not have an easy end. That is what Kunjan says. If this is depicted in a pantomime, I am sure that the ruling people, I mean the people who are bringing in this reactionary piece of legislation, will catch the concerned actors and also the great poet. If Kunjan had lived to-day, he would have been put behind bars. That is why I say this Bill is murder of the peoples' democratic culture and art of the land.

[Sri T. C. Narayanan Nambiar] [7th December 1954

" According to item (vi) of clause 2, Government intend to take the law into their hands and use them in favour of landlords and to victimize and penalize the working classes and those people who toil. I have already quoted from ' vazhakula '. If that is enacted, Government could take action against the poor Harijan, the Pulayan, who finds after his hard toil and labour that his plantain fruits are taken away by the landlord. According to item (v) of clause 2 Government may punish the actor who plays the role of the Pulayan as though his act promotes feelings of enmity or hatred between different sections of the people of India, viz., the working class and the landlords. The Harijan or the Pulayan may be punished and the man who enjoys the scene may also be a victim. Therefore this legislation is nothing but murder of our art and culture.

" The Hon. Finance Minister while introducing this Bill said in soothing words that this Bill was a democratic piece of legislation and was intended only to insert a provision for appeal to the High Court. If the Government are sincere, they could have done that by coming forward with an amendment of the existing Act. Why should they bring in a new Bill? That shows that their real object is not simply to insert the provision for appeal to High Court. It is some other thing and that is what I have referred to earlier, viz., to kill our art and culture. It is only in the name of democracy that such moves are resorted to suppress democratic art and culture. I am sure that this Bill if enacted in its present form will produce dangerous results. The consequences would be disastrous. If this is going to be passed in the form visualised by the Hon. the Minister for Finance, I would most seriously say that this enactment would never be tolerated by the progressive sections, the artistes and those people who appreciate progressive art and culture."

SRI E. L. RAGHAVA MUDALIAR :—" Mr. Deputy Speaker, Sir, two circumstances make me suspect the intentions of the Government in bringing this piece of legislation. One is what is stated in the statements of objects and reasons of the Bill, viz., that the Government are very anxious to confer the right of appeal on the people. The Government have realized this for the first time. I do not know why the Hon. Ministers, all of a sudden, after serving for three years in the Ministry became aware that the people are bereft of the fundamental right of making a judicial appeal to the High Court. After all, this appeal is only to the High Court and not to any other Court. Do the Government think that many of the people who enact these dramas, because they are poor people, would not have the wherewithal to appeal to the High Court and would not take that trouble and incur expense to appeal to the High Court? Do the Government thereby intend to crush the poor and think that they could take action conveniently at the initial stages because the poor actor will not appeal to the High Court?

" The Hon. the Leader of the House had said while speaking on the merits of the Bill that after all, they were not giving any new

7th December 1954] [Sri E. L. Raghava Mudaliar]

meaning to the word ' objectionable ' but that they were only inserting the provisions contained in an Act The Press (Objectionable Matter) Act enacted by the Parliament. He had said that because the Parliament had passed that Bill, we should have no objection to passing this Bill. That is where I suspect the intention of the Government in bringing this piece of legislation.

" The Bill says that it is necessary to promote the religious feelings of the people. Among the public there are two sections, viz., the one having religious feelings and who are religious-minded and the other who are non-religious. The latter section is growing in numbers. If under clause (vi) the Government say that they could take action against an actor enacting a drama outraging the religious feelings of any class, let that same clause be made applicable to the non-religious section also. They also form part of the public. What is non-religious to the religious-minded people is religious to the non-religious-minded public. Therefore let item (vi) be so amended as to cover non-religious-minded public also. After all who is there to judge whether a drama affects the religious feelings of a section of the public or not? It is the Executive Officer. Many interpretations could be put by different Executive Officers on a drama. We have seen it in practice. While a drama enacted by Sri M. R. Radha was banned in the first instance by the Commissioner of Police, Madras, the Government later on passed an order permitting the drama and it ran successfully for six weeks without any breach of peace and without wounding the religious feelings of any section of the public. This incident goes to show that for certain people a thing may appear ' objectionable ' while for others it may not seem ' objectionable '. It all depends upon the whims and fancies of the concerned officer who is dealing with it.

" But what was not considered to wound the feelings of the citizens of Madras was found to wound the feelings of the citizens of Madurai. The citizens of Madurai seem to be particularly supersensitive under somebody's inspired leadership and that seems to be the trouble for this inimical act towards the so-called reformists' section. Having known this, the authorities ought to have taken care to prevent the recent happenings. As my lawyer friends have pointed already out, all these provisions are covered by the Indian Penal Code which is a more comprehensive Act than this piece of legislation. When all these things are covered by one legislation, why should there be a duplicate legislation like this is the one circumstance which I am not able to understand and even the Hon. the Leader of the House has not been able to explain. Clause 12 of this Bill says " No prosecution under this Act shall bar a prosecution under the Indian Penal Code or any other law '. When another prosecution for the same offence is not barred, why should there be a duplicate legislation to cover the same subject? We all know that even the British bureaucracy in the worst days of the Non-co-operation Movement found that the then existing laws were sufficient to prevent the promotion

4-30 p.m.

of disaffection or any other untoward incident towards the Government. When such provisions were sufficient in the opinion of a foreign bureaucracy, it passes my comprehension why they are not sufficient in the opinion of a democratic Government. That is why people now equate the Congress Government by saying that the Congress Government is equivalent to the British bureaucracy *plus* corruption *minus* efficiency.''

Sri A. RATNAM :—'' கனம் உதவித் தலைவர் அவர்களே ! இன்று சபையில் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவானது மக்களுடைய முன்னேற்றத்திற்காகவா, அல்லது நாட்டின் முன்னேற்றத்திற்காகவா, மதத்தின் முன்னேற்றத்திற்காகவா, கலையின் முன்னேற்றத்திற்காகவா என்று தெரியவில்லை. நாடு சுபிட்சமடைய, நாடு முன்னேற்றமடைய, நாடு கல்வித்துறையில் முன்னேற, நாட்டின் மக்கள் அறிவுத் துறையில் முன்னேற்றமடைய அதாவது சுபிட்சமாக வாழ்வதற்கு சட்டங்கள் இயற்றுவது ஆட்சியாளரின் பொறுப்பே ஒழிய நாட்டின் நிலையை, நாட்டின் கல்வியை, நாட்டின் முன்னேற்றத்தை, நாட்டு மக்களின் அறிவை அடக்குவதற்காக ஒரு சட்டம் தேவையில்லை. இந்த நாட்டிலே 1876-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட ஒரு சட்டம் இருக்கிறது. அது இந்த நாடு பூராவும் சட்டமாக இன்றளவும் இருக்கிறது. இந்திய அரசியல் சட்டத்தின் காரணமாக ஆட்சியாளர்களுக்கு சகல பொறுப்பும் தேவையென்றாலோ, அல்லது திருத்தப்படவேண்டுமென்றாலோ அந்த 1876-ஆம் வருஷத்திய சட்டத்தைத் திருத்தவேண்டும். அதைக்கொண்டு வந்தால் மிக நன்மையாக இருக்கும் ; இந்தச் சபையிலுள்ளவர்களில் பெரும்பாலோர் ஏற்றுக் கொள்வார்கள். நம்முடைய நாட்டிலே கடந்த சுமார் 80 ஆண்டுகளாக நிலவி வருகின்ற ஒரு சட்டத்தின்மேல் இன்றுவரை ஆட்சி நடத்தப்பட்டு வருகின்றது. ஆனால் நம்முடைய சென்னை ராஜ்யத்தினர் மட்டும் அதன்மீது ஒரு புதிய மசோதா கொண்டு வருவது அவசியமா ? இந்திய அரசியல் சட்டத்தின்படி இது மற்ற ராஜ்யங்களைக்கூட பாதிக்கின்றது. ஆனால் நம்முடைய ராஜ்யத்திலே அவசர அவசரமாக இந்த மசோதாவைக் கொண்டு வந்து திணித்து, அது உடனே செலக்ட் கமிட்டிக்கு விடப்பட்டு, ஐந்து நாட்களுக்குள் அதனை நிறைவேற்ற வேண்டுமென்று சர்க்கார் நினைக்கிறார்கள். ஆனால் அதனை மக்கள் எவ்வாறு நினைக்கிறார்கள், கலையை வளர்க்கும் கலைஞர்கள் எவ்வாறு நினைக்கிறார்கள், அறிவு வளர வேண்டுமென்று நினைக்கின்ற அறிஞர்கள் அதனை எவ்வாறு நினைக்கிறார்கள், பத்திரிகை உலகில் என்ன நினைக்கிறார்கள், அரசியல் உலகில் என்ன நினைக்கிறார்கள் என்றெல்லாம் ஆராய வேண்டும். ஆனால் இந்த நாட்டின் ஜனநாயக முறைப்படி, மக்கள் உரிமையால் தேர்ந்தெடுக்கப்பட்ட இங்குள்ளப் பிரதிநிதிகள் ஆட்சியாளர் பக்கத்தில் அதிகமாக இருக்கின்றனர் என்ற காரணத்திற்காக வேண்டுமென்றே இது திணிக்கப்படுவதாகத்தான் சொல்லவேண்டும். இந்தக் காலத்திலே இந்த மசோதாவானது இங்கு கொண்டுவரப்படுகின்றது. ஆனால் காமராஜர் ஆட்சியிலா அல்லது ஆச்சாரியார் ஆட்சியிலா இந்த மசோதாவானது உருவாக்கப்பட்டது என்று பார்க்கவேண்டும். அம்மாதிரியான ஒரு காலகட்டத்தில் இன்று நாட்டிலுள்ள மக்கள் பேசுகின்றனர். ஆச்சாரியார் காலத்தில் பிள்ளையார் உடைப்பு நடந்து கொண்டிருக்கின்ற காலத்திலே இந்த மசோதாவானது உருவாக்கப்பட்டது. ஆனால் அன்று திருச்சியிலும், சென்னையிலும் பல கேஸ்கள் நடந்துகொண்டிருந்த காரணத்திற்காக, ஆரியர்களுடைய சூழ்ச்சியினால் இறுக்கப்பட்டு, இப்போது காமராஜர் காலத்திலே கொண்டுவரப்பட்டிருக்கிறது என்ற பேச்சு நிலவுகின்றது. ஆனால் இதை நடைமுறையில் பார்க்கும்போது, இது ஒரு நாடகமா அல்லது மக்களுக்கு உகந்ததான ஒரு சட்டமா, மக்கள் சுபிட்சத்திற்கு வழிகாட்டுமா அல்லது மக்களைப் புரட்சிக்குத் தூண்டுமா என்பதைப் பார்க்கவேண்டும். நம்முடைய நாட்டிலே குறிப்பாக எடுத்துக்கொண்டால், கலைஞர்கள் கலையின் மூலமாக, நடிப்பின் மூலமாக, இசையின் மூலமாக மக்களை முன்னேற்றிக்கொண்டு செல்லுகிறார்கள். ஆனால் ஆயிரம், ஆயிரம் ஆண்டுகளாக இந்த நாட்டிலே வர்ணாசிரம முறையாலும், மதத்தின் அடிப்படையாலும் நம் மக்களிடையே கல்வி வசதி குறைக்கப்பட்டு வந்

7th December 1954] [Sri A. Ratnam]

திருக்கிறது. அதன் காரணமாக அவர்கள் மட்டும் கல்வி வளர்ச்சி பெற்று, நம்மை மட்டும் மடமையில் ஆழ்த்திவிட்டார்கள். அதன் காரணமாக நாட்டிலே கல்வி, கலாசாரம், நாகரீகம் குறைக்கப்பட்டது. ஆனால் உண்மையில் ஆங்கிலேயர்கள் இந்த நாட்டிற்கு வந்தபிறகு, அனைவரும் கல்வி வளர்ச்சி பெறுகின்றனர். ஆனால் நம் நாட்டிலே துரிதமாக அறிவு வளர்ச்சிக்கு காரணமாக இருந்தவர்கள் கலைஞர்கள்தான். கல்வி அதிகமாக நாட்டிலே பரவாவிட்டாலும், கிராமத்திலுள்ள பாமர மக்கள், ஏழை மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், கல்வியறிவு இல்லா மக்கள் எல்லோரும் கலையின் மூலமாக, நாடகங்களின் மூலமாக, கவிதைகளின் மூலமாக அறிவு வளர்ச்சியில் துரிதமாக வளர்ந்து வருகிறார்கள்.

" மதம் மக்களை மடமையில் ஆழ்த்தியிருக்கிறது. மதம் மயக்கத்திற்கு சமம். எனவே மக்களை மயக்க, மடமையில் ஆழ்த்த மூலகாரணமாக ஆக்கப்படுவது மதம் தான். ஆனால் அந்த மதத்தை ஊக்குவிப்பதற்கு, மதத்தை மேலும்மேலும் வைத்துக்கொண்டிருப்பதற்கு மதத்தின் பெயரால், தர்மத்தின் பெயரால், கடவுளின் பெயரால், மதத்தினுடைய செயல் திட்டங்களை மக்களிடையே பரப்பி மடமையில் ஆழ்த்திக்கொண்டு, ஆட்சி செலுத்தவேண்டும் என்பதுதான். எதற்கும் செல்வாக்குவேண்டும். தாங்கள்மட்டும் சுகமாக வாழவேண்டுமென்று கருதுகின்ற ஒரு சிலர் இம்மாதிரிக் காரியங்களுக்கு ஆயிரம், கோடிக்கணக்கான ரூபாய்களை கொடுக்கத் தயாராக இருக்கின்றனர். அவர்கள் யார் என்றால் மதவாதிகள், பணம் படைத்தவர்கள், மிட்டா மிராசுகளைப்போன்றவர்கள். ஆகவே அவர்கள் வாழவேண்டுமென்ற காரணத்திற்காகத்தான் இந்தச்சட்டம் கொண்டுவரப்படுகின்றதே யொழிய, மக்களிடையே மேன்மேலும் மடமை இன்னும் அதிகமாகப்பரவச் செய்யவேண்டும் என்பதற்காகவே ஒழிய, அறிவு வளரச்செய்வதற்காக செய்யப்படுபவை அல்ல. ஆகவேதான் முடிவாக இன்று இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. அது எப்படி இருந்தாலும் இன்றைய நாட்டின் முன்னேற்றத்தைப் பார்க்கும்போது, அறிவு வளர்ச்சிதான் முக்கியமாக வேண்டியிருக்கிறது. அப்படியிருக்கிறதா என்று கவனித்தால் மிகவும் சீர்கேடான நிலைமையிலிருந்து இப்பொழுதுதான் அறிவு வளர்ச்சியை பெருக்கிக்கொண்டு வருவது அறியப்படுகிறது. இவ்வளர்ச்சியை இன்று நாம் கண்கூடாக பார்த்துக்கொண்டுவருகிறோம். இந்த அறிவு வளர்ச்சிக்கு தடைசெய்வது அவசியமா ? இதுபற்றி எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் ஒரு மணிநேரம் பேசியிருக்கிறார். இந்த சட்டத்திலே சில கருத்துக்கள் கூறி, எப்படி ஆட்சியாளர்கள் சார்பில் ஒரு சப்-இன்ஸ்பெக்டருக்கு அல்லது இன்ஸ்பெக்டருக்கு அல்லது ஒரு கலெக்டருக்கு ஏதாவது ஒரு குற்றமிருப்பதாகக் கருதப்பட்டால், அவர் அந்த நாடகத்தை நினைத்த மாத்திரத்தில் இரண்டு மாதங்களுக்கு தடைச்செய்யமுடியும் என்ற விதியை விளக்கிக் கூறினார்கள்.

" முக்கியமாக ஒரு நாடகத்தை கஷ்டப்படுத்தி நடத்த ஏற்பாடு செய்து, இம்மாதிரி தடைசெய்வதால் அதனால் எவ்வளவு பணநஷ்டமேற்படும் என்பதைக் கவனிக்கவேண்டும். ஆகவே அம்மாதிரியான நஷ்டத் தொகையை அரசாங்கம் அவர்களுக்கு கட்டிக் கொடுக்கவேண்டும். காரணம், அதைத் தவறு என்று ஒரு அதிகாரி உடனே தடைசெய்யலாம் என்று இருக்கும் சட்டத்தின் காரணமாக, எதிரினுடைய வாதம் செல்லுபடியாக முடியாமல் போகலாம். இந்த அளவிற்குத்தான் இந்த சர்க்கார் இருக்கிறது. அதுமட்டுமல்ல. ஆட்சியாளர்கள் கையில் 1876-ம் வருஷத்திய சட்டம்மட்டும் இல்லை. அந்த மாதிரி பல சட்டங்கள் இருக்கின்றன. அப்படி இருக்கும்போது திடீரென்று இந்த நாடகத்தைத்தடை செய்யவேண்டுமென்ற சட்டத்தை மட்டும் உடனடியாக கொண்டுவருவது மக்களுடைய அமைதிக்கு பங்கம் விளைவிக்குமே அல்லாது அறிவு வளர்ச்சிக்கு உகந்ததல்ல என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

" எல்லாவற்றிற்கும் இப்போழுது உபயோகப்படுத்தக்கூடிய 144 செக் 4–40 p.m.
ஷன் இருக்கிறது. அவைகளையெல்லாம் விட்டுவிட்டு ஏன் இந்த புதிய நாடகச்சட்டத்தை ஆட்சியாளர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று புரியவில்லை. இது பொதுமக்களுடைய நன்மையைக்கருதி கொண்டுவருவதாக இல்லை. அப்படி இருந்தால் சென்ற ஆண்டு தீண்டாமையை ஒழிப்பதற்

[Sri A. Ratnam] [7th December 1954

காக ஆட்சியாளர்கள் எவ்வளவு பணம் செலவு செய்திருக்கிறார்கள். இதற்காக 6 லட்ச ரூபாய் மத்திய அரசாங்கம் இந்த அரசாங்கத்திற்கு கொடுத்திருக்கிறார்கள். கொள்கை அளவில்தான் சட்டம் இருக்கிறது. சென்ற ஆண்டு தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் சார்பின் தீண்டாமை ஒழிப்பு நிதிக்காக ஒரு நாடகம் நடத்த 'ராஜாஜி ஹாலைக்' கேட்டிருந்தோம். நான் ஒரு எம்.எல்.ஏ. என்ற முறையில் இதைக்கேட்டிருந்தும்கூட, சர்க்கார் பொது மராமத்திலாகா டெபுடி காரியதரிசி இதைக்கொடுக்க மறுத்துவிட்டார் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக்கொண்டுவருகிறேன். மறுக்கக்காரணம் என்ன ? அவர்களுடைய நோக்கம்தான் என்ன என்று புரியவில்லை. தீண்டாமை ஒழிப்பதற்கு ஒரு சட்டம் கொண்டுவந்திருக்கிறார்கள். இதற்காக பிரசாரம் செய்கிறார்கள். ஆனால் நடைமுறையில் எங்கே ஒழிந்தது. தீண்டாமை ஒழிப்பிற்கு நாடகம் நடத்தாத அளவுக்கு தடைசெய்கிறது இந்த அரசாங்கம். அந்த நாகடத்தை நடத்த இடம் கொடுக்கவும் மறுக்கிறது. எங்கே எல்லா மக்களும் அறிவு வளர்ச்சிபெற்று புரட்சிகரமாக மாறுவார்களோ என்ற எண்ணம்கொண்டு வளர்ந்தோங்கும் இந்த நாடகக்கலையை தடுக்கப்பார்க்கிறார்கள். சட்ட சபையில் அங்கத்தினனாக இருக்கும் எனக்கே இந்த ராஜாஜி ஹாலை ஒரு தீண்டாமை ஒழிப்பு நாடகத்திற்குக்கொடுக்கவில்லையென்றால் மற்றவர்களிடமிருந்து வரும் மனுக்களையெல்லாம் இவர்கள் எங்கே கவனிக்கப்போகிறார்கள் ? மக்கள் ஆடுமாடுகளைப்போல் வாழவேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

" இப்பொழுது சபையின் முன் கொண்டுவந்திருக்கும் நாடக தடை மசோதாவைக்கொண்டுவருவதற்குமுன் பொதுமக்களின் எண்ணங்களை ஆராய வேண்டும். நாடகத்தில் சம்பந்தப்பட்டவர்களையாகிலும் ஆலோசனை கேட்டிருக்கவேண்டும். இவைகளில் ஒன்றையும் செய்யவில்லை. இதை இவ்வளவு அவசர அவசரமாக கொண்டுவருவதன் அவசியம் என்ன என்று கேட்கிறேன். பொதுமக்களின் நன்மையைக்கருதாமல், அறிவுக்குப்புறம்பான, அங்கத்தினர்களுக்கு விரோதமான நாடகக்கலைக்கே விரோதமான ஒரு சட்டத்தைக்கொண்டுவந்தால் இந்த சர்க்கார் மக்களுடைய ஆதரவைப் பெறமுடியாது. ஆதலால் இந்தச் சட்டத்தை கொண்டுவராது நிறுத்திக் கொள்ளவேண்டுமென்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்."

4-45 p.m. SRI K. T. RAJU :—" கனம் உபசபாநாயகர் அவர்களே, பல அங்கத்தினர்கள் இந்த சட்டத்தைப் பற்றி பேசினார்கள். குறிப்பாக எதிர் கட்சித் தலைவர் இந்த சட்டத்திலுள்ள பல குறைபாடுகளை எடுத்துச்சொன்னார். இந்தச்சட்டம் இப்போழுது இருக்கிறமாதிரியே நிறைவேறினால் வருங் காலத்தில் முற்போக்கான எந்த நாடகத்தையும் தமிழ்நாட்டிலே நடத்த முடியாது.

" இன்றையதினம் ஒரு குறிப்பிட்ட மதத்தைப் புண்படுத்தும் வகையில் நாடகம் நடத்துவதாகச் சொல்லுகிறார்கள். அப்படியும் இருக்கலாம். மனதைப்புண்படுத்துகிறவர்களின் மனதை சட்டத்தின் மூலமாக மாற்றுவதென்றால் முடியாதகாரியம். பிரசாரத்தின் மூலமாகத்தான் மனமாற்றத்தை ஏற்படுத்தமுடியும். எங்களிடத்தில் சில கருத்துமாறுபாடுகள் இருக்கலாம். தோழர் ரத்தினம் அவர்கள் இந்தச் சட்டத்தைப்பற்றி பேசும் போது 'இந்தச்சட்டமானது ஆச்சாரியாரின் ஆட்சியின் காலத்திலே உருவானது, ஆனால் அவர் தனக்கு நாட்டிலேயிருந்த எதிர்ப்பை எண்ணி அந்தச் சட்டத்தைக்கொண்டுவரவில்லை. அது இன்றைக்கு காமராஜர் பதவியில் இருக்கும்போது கொண்டுவரப்படுகிறது' என்று கூறினார். நாங்கள் ஆரியன், திராவிடன் என்ற அந்தக்கண்ணோட்டத்தோடு பார்க்கவில்லை. முழுக்க முழுக்க நாட்டிலே இருக்கக்கூடிய பிரத்தியட்சக்கண்ணோட்டத்துடன்தான் நாங்கள் எந்த பிரச்னைகளையும் பார்க்கிறோம். பொது மக்கள், பெரும்பாலும் எழுதப்படிக்கத்தெரியாதவர்கள். இன்றையதினம் முற்போக்கு நாடகத்தின் மூலமாக நல்லறிவுபெற்றுவருகிறார்கள். கடந்த 8 ஆண்டுகாலமாக தமிழ் நாட்டில் இந்த முற்போக்குக்கருத்துகளுடன் கூடிய கலை வளர ஆரம்பித்திருக்கிறது. ஆனால் அரசாங்கம் சென்ற இரண்டு வருஷங்களாக முற்போக்கான நாடகங்களுக்கு தடைவிதிக்க தொடர்ந்து கவனித்துப் பல யோசனைகளை செய்துகொண்டுவந்திருக்கிறது. சாதார

7th December 1954] [Sri K. T. Raju]

ணமாக ஒரு குறிப்பிட்ட நாடகத்திற்கு வரக்கூடிய பொது மக்கள் அவ்வளவு பேருக்கும் அந்த நாடகம் எந்த விதமான கொள்கையை அடிப்படையாகக் கொண்டது என்பதை அறிவார்கள். இந்த மக்களின் கருத்திற்குமாருக இன்றையதினம் நமது ஆட்சியாளர்கள்கொண்டுவந்திருக்கும் சட்டத்தை பார்த்தால் இவர்கள் 50 ஆண்டுகளுக்கு பின்நோக்கி செல்லவேண்டியது தான். சுருக்கக்கூறுவோமாஞல் பழையகாலத்திற்கேதான் சென்னை சர்க்கார் போய்க்கொண்டிருக்கிருர்கள். இந்தச் சட்டத்தைக்கொண்டுவருவதற்கு பதில் இந்த அரசாங்கம் ஒரு காரியம் செய்திருக்கலாம். ஒரு லிஸ்ட் வைத்துக்கொண்டு வள்ளித்திருமணம், ராமாயணம், மார்க்கண்டேயர், நல்லத் தங்காள் முதலிய 5, 6 நாடங்களைத்தான் நடிக்கவேண்டும் என்று ஒரு உத்தரவுப்போட்டால், அரசாங்கத்திற்கு ஒரு தொந்திரவும் இருக்காது. நிம்மதியாக இருக்கலாம். ஹைக்கோர்ட்டுக்கு போகவேண்டிய அவசியம் இருக்காது, நாடகத்திற்குத் தடைபோடவேண்டிய அவசியமும் இருக்காது. அப்படித்தடைபோட்டாலும், தடையை நீடிக்கவேண்டிய அவசியமும் இருக்காது.

" ஒரு நாடகம் எந்தவிதமான கருத்துகொண்டதாகவும் இருக்கலாம். முற்போக்குக்கருத்துக்களைக் கொண்டதாகயிருக்கலாம். ஏன் இருக்கக்கூடாது ? சிலநாடகங்கள் பிரசாரத்திற்காக நடத்தப்படுகிறது என்று சொல்லுகிருர்கள். இப்படிப் பார்த்தால் காங்கிரஸ்காரர்களும்தான் பிரசார நாடகங்கள் நடத்துகிருர்கள். ஐயம்பேட்டை மாரிமுத்து அவர்கள் நாடகம் நடத்துகிருரே, அதில் கம்யூனிஸ்டுகள் தண்டவாளம் பெயர்ப்பதுபோலவும், குத்திக்கொல்லுவதுபோலவும் நடிக்கவில்லையா ? ராமமூர்த்தியைப் போல பேசி நடித்து கிண்டல் பண்ணவில்லையா ? காங்கிரஸ் மந்திரிகள் கூடத்தானே அந்த நாடகத்தை ரசித்துப்பார்க்கிருர்கள். இல்லையென்று சொல்லமுடியுமா ? ஸ்ரீ ராமமூர்த்தி மாதிரி பேசி நடித்துக்காட்டுகிருறே, அந்த மாரிமுத்துவின் நாடகத்தைப் பார்க்கும்போது எங்கள் மனம் மாத்திரம் புண்படவில்லையா ? ஸ்வாமி சகஜானந்தாவின் மனம் மாத்திரம் ராதாவின் நாடகத்தைப்பார்த்து ஏன் புண்படவேண்டும் ? மதத்திலே உங்களுக்கு அதிக நம்பிக்கை இருக்குமாஞல் நீங்கள் மக்களிடையே சென்று மதத்தைப்பற்றி பிரசாரம் செய்யுங்கள். வேண்டாமென்று சொல்லவில்லை. அதைப்போலவே எனக்கு மதத்தில் நம்பிக்கை இல்லையென்றால் மதத்தில் நம்பிக்கை இல்லை என்று நான் ஏன் பிரசாரம் செய்யக்கூடாது. இதை ஏன் தடுக்கவேண்டும். அது தான் இங்கே பிரச்னை. இரண்டு கட்சிகளும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை மக்கள் மத்தியிலே சென்று எடுத்துச்சொன்ஞல் மக்களுக்கு எது நல்லது என்று படுகின்றதோ அதை ஏற்றுக்கொள்ளட்டுமே. அதைச்செய்யாது அரசாங்கம் தங்கள் கையில் இருக்கிறது என்ற எண்ணத்தில் எந்தச் சட்டத்தைவேண்டுமாஞலும் கொண்டு வரலாமென்று எண்ணிஞல் அது மிகத் தவருகும். மதத்தைச் சொல்லிக்கொண்டு ஜனங்களை சிலர் மோசம் செய்து வருகிருர்கள் என்று பிரசாரம் செய்தால் அதைக் கேட்டு நாம் எதற்குக் கோபப்படவேண்டும். நீண்டகாலமாக நாம் எப்படி எப்படி எல்லாம் ஜனங்களைக் கேவலப்படுத்தி, அடிமைகளாக நடத்திக்கொண்டு வந்திருக்கிறேம். நீண்டகாலமாக நாம் எப்படி எப்படி எல்லாம் ஜனங்களை மிகக்கொடுமை படுத்தி வந்திருக்கிறேம். நீண்டகாலமாக நாம் எப்படி எப்படி எல்லாம் சமுதாயத்திலே ஒரு வகுப்பாரை, ஒரு சாராரை மிக இழிவு படுத்தி தொடப்படாதவர்களாகவும், தீண்டப்படாதவர்களாகவும் வைத்திருக்கிறேம். அதை எல்லாம் எண்ணி யாருடைய மனமும் புண்பட்டதாகக் காணேமே. அதை எல்லாம் எண்ணி மதவாதிகளின் மனம் புண்பட்டதாகக் காணேமே. விஞ்ஞான அறிவு வளர வளர, விடுதலைவேட்கை வளர வளர முற்போக்குக் கருத்துக்கள் வளர வளர தாங்கள் இந்தச் சமுதாயத்திலே எந்த இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறேம் என்பதை அவர்கள் உணர்ந்து தாங்கள் அடிமைத்தளையிலிருந்து விடுபடவேண்டும் என அவர்கள் போராட்டம் நடத்திஞல் அதைக்கண்டு எதற்குப் பயப்படவேண்டும் ? எங்கள் மனம் புண்படுகிறதே, புண்படுகிறதே, புண்படுகிறதே என்று ஸ்வாமி சகஜானந்தாவைப் போன்றவர்கள் குத்திக்கொண்டால் குத்திக்கொள்ளவேண்டியது தான். பாண்டேஜ் போட்டுக்கொள்ளவேண்டியதுதான். யார் யார் எந்தக் கொள்கை உடையவர்களாக இருந்தாலும் சரி அவரவர்கள் இந்த நாட் 4–50 p.m.

[Sri K. T. Raju] [7th December 1954

டிலே தங்கள் தங்கள் கொள்கையைப் பிரசாரம் செய்ய உரிமை அளிக்கப் படவேண்டியது முக்கியமாகும். அது அடிப்படை உரிமையாகும். உதாரண மாக உலகிலேயே மிகவும் முற்போக்குக்கொள்கையையுடைய நாடுகளான சீனுவில், ரஷ்யாவில் மதம் மனித வாழ்வுக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது என்பதை உணர்ந்திருக்கிறது அரசாங்கம். ஆனுல் மதத்திற்கு எந்த விதமான தடையும் விதிக்கவில்லை. இன்றைக்கு மத நம்பிக்கை உள்ள வர்கள் பதவியில் இருக்கிருர்கள் என்பதற்கு சர்க்காரின் உதவியோடு சட்டத்தைக்கொண்டுவந்து மதத்திற்கு எதிராகப் பிரசாரம் செய்கின்றவர் களுக்குத் தடை விதித்தால், நாளை மத நம்பிக்கையற்றவர்கள் பதவிக்கு வருகின்றபோது மத நம்பிக்கையுள்ளவர்களுக்குத் தடை விதிப்பார்கள். இது இரண்டும் நியாயமற்றது என்பதே எங்கள் கொள்கை.

"வளர்கின்ற சமுதாயம் தானே வளரும்படியாக விட்டுவிடுவதுதான் நல்லது. வளர்கின்ற மக்களின் முற்போக்குக் கருத்துக்கள் தானே வளரும்படியாக விட்டுவிடுவதுதான் நல்லது. அதற்குத் தடைவிதிப்பது நாட்டின் முன்னேற்றத்திற்கேதடை விதிப்பது போலாகும். அந்தத் தவ ருன கருத்தை இந்தச் சட்டசபை செய்யக்கூடாது என்பதே என் அபிப் பிராயம்.

"தன் அபிப்பிராயத்தை ஒருவர் எடுத்துச்சொன்னுல் அதைப்போலவே மற்றவர்களும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை நன்ருக எடுத்துச்சொல் லட்டுமே. அதை யார் வேண்டாமென்கிருர்கள். நான் ஒரு நாடகம் நடிக் கிறேன் என்ருல் நீங்களும் ஒரு நாடகம் நடியுங்களேன். உங்களிடம் என்ன பணம் குறைவா ? பிரசாரக் கருவிகள் தான் குறைவா ? உங்கள் கட்சியில் நடிகர்களுக்குத்தான் பஞ்சமா ? பேஷாக நீங்களும் நாடகம் போடுங்கள், மற்ற கட்சிக்காரர்களும்போடட்டும். யாரையும் தடை செய்யும் படியாக எந்த நடவடிக்கையும் செய்யாதீர்கள் என்று மாத்திரம் கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்."

4-54 p.m. *Sri N. RATHINA GOUNDER:—"மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நாடகத்தடை மசோதா சபை முன்பு கொண்டுவரப்பட்டிருக் கிறது. அதைப்பற்றி நான் மிக மிக வருத்தப்படுகிறேன்.

"இந்த நாடகத் தடை மசோதாவை கொண்டுவரவேண்டுமென்ற எண்ணமே உண்டானது 1954-ம் ஆண்டில் ராமாயணத்தை நடிக்க ஸ்ரீ ராதா அவர்கள் ஆரம்பித்தவுடன்தான் என நான் எண்ணுகிறேன். ராமாயணத்தைச் சொல்லிச் சொல்லி மக்களை மடமையில் ஆழத்திக் கொண்டிருக்கிருர்கள். அதை ஒழிக்கவேண்டுமென்ற உயர்ந்த கருத்தோடு தான் அவர்கள் நாடகம் நடிக்க ஆரம்பித்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ராமாயணத்திலே எப்படி கருத்துக்குப் பொருந்தாத விஷயங்கள் இருக்கின்றன என்பதை சில உதாரணங்கள் மூலம் உங்களுக்கு நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

"இந்தச் சபையிலே 231 அங்கத்தினர்கள்தான் இருக்கிருர்கள். ஆனுல் நமக்குள் யார் யார் இன்னன்னுர் என்பதும், அவர்கள் பெயரும் சரியாகத் தெரியாத நிலைமையிலேயேதான் இருந்துகொண்டிருக்கிறேம். அப்படியிருக்கும்போது தசரத அரசனுக்கு அறுபதினுயிரம் மனைவிகள் என்ருல் மகாராஜா அந்தப்புறம் போகும்போதெல்லாம் சேவகர்கள் ராஜாவுக்கு, 'மேன்மை தங்கிய அரசே, இவர்கள் தங்களுடைய மனைவி யார்' என்று அறிமுகம் செய்துவைத்துக்கொண்டே போகும்படி இருக்கும். (சிரிப்பு.) இப்படிப் பகுத்தறிவுக்குப் பொருந்தாத, ஒவ்வாத கதையை நாட்டிலே பிரசாரம் செய்ய அனுமதிப்பதே தவறு. சபைத்தலைவர் உள்பட, மந்திரிமார்கள் உள்பட எல்லோரும் நன்கு யோசித்துப் பாருங்கள். அறிவு வளர்ந்துகொண்டிருக்கிறது. நாட்டு மக்களின் பகுத்தறிவு நாளுக்குநாள் வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையிலே இப்படிப்பட்ட முற்போக்கு சக்திகளுக்கு எல்லாம் முட்டுக்கட்டை போடக்கூடிய பிற்போக்கான சட்டம் கொண்டுவருவது மகாக் கொடுமையாகும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

"அடுத்து நல்லதங்காள் கதையை எடுத்துக் கொள்ளுங்கள். நல்ல தங்காளுக்கு ஏழு குழந்தைகளாம். அவர்களுடைய கணவன் நாட்டிலே மழை பெய்யவில்லை. பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. சாப்பாட்டுக்கு வழியின்றி அவள் தன் சகோதரன் வீட்டிற்குச் சென்றாள். சகோதரன் மனைவி தங்களுக்குப் பாரமாக இவள் வந்துவிட்டாளே என்ற ஆத்திரத்தில் கொஞ்சம் கேழ்வரகையும், விறகுக்கு பதிலாக வாழை மரத்தையும் கொடுத்து தனியாக பொங்கி சாப்பிடச் சொல்லுகிறாள். நல்லதங்காள் கண்ணீர் வடித்துக்கொண்டு நான் பத்தினிப் பெண்ணானால் இந்த வாழைப் பட்டை பற்றி எரியட்டும் என்று சொன்ன அளவிலே அந்த வாழைப்பட்டை பற்றி எரிந்தது என்பது கதை. இது பகுத்தறிவுக்குப் பொருந்துமா? பத்தினிப் பெண்ணுக்கு வாழைமரத்தை எரிக்க வைக்கும் சக்தியிருந்தால் அவள் தன் சக்தியை வாழைமரத்தைத்தானா எரிக்க உபயோகப்படுத்தி யிருக்கவேண்டும்? தன் நாட்டிலே நல்ல மழை பெய்து பஞ்சம் நீங்க வேண்டுமென்று அவள் வேண்டிக்கொண்டிருக்கக்கூடாதா? பாரெல்லாம் செழிக்க ஏற்பாடு செய்திருக்கக்கூடாதா? அவளுக்கு அந்தச் சக்தி இருந்த தாகச் சொல்வதே வெறும் பொய் என்பது பகுத்தறிவுக்குத் தெரிய வில்லையா?

"அதுமாத்திரமா? குசேலருக்கு 27 பிள்ளைகள் என்று சொல்லு கிறார்கள். ஆண்டுக்கு ஒரு பிள்ளையை அவர் பெற்றார் என்று சொன்னா லும்கூட கடைசிப் பிள்ளை பிறக்கும்போது நிச்சயமாக மூத்த பிள்ளை மேஜராகத்தான் இருக்கவேண்டும். மூத்தபிள்ளைக்கு 27 வயது இருந் திருக்கவேண்டும்."

THE HON. SRI C. SUBRAMANIAM :—"தடவைக்கு நாலு பிள்ளையாகப் பெற்றிருக்கலாம்." (சிரிப்பு.)

*SRI N. RATHINA GOUNDER :—"ஆண்டுக்கு ஒன்றாகப் பெற்றெடுத்திருந்தாலே அந்த அம்மாள் உயிரோடு இருப்பது டி பி.யில் சந்தேகம். தடவைக்கு நாலு குழந்தைகளாகப் பெற்றிருந்தால் நிச்சயம் க்ஷயரோகத்தில்செத்திருப்பாள். அது எப்படியிருந்தாலும் இப்படி 27பிள்ளை களைப் பெற்றதாகக் கதை சொல்வது மக்களின் மடமைத்தனத்தை அதிகப்படுத்தவா? இப்படி மக்களின் மடமைத்தனத்திற்கு எடுத்துக்காட் டாக உள்ள கதைகளையும், புராணங்களையும் கனம் மந்திரி அவர்கள் தடை செய்யச் சட்டம் கொண்டுவராமல், இந்த மடமைத்தனத்திலிருந்து மக்களை விடுவிக்க புதுக்கருத்துக்களை, முற்போக்கு கருத்துக்களைக் கொடுக்கும் கலைஞர்களுக்கு, நாடகாசிரியர்களுக்கு, சமூக சீர்திருத்தவாதிகளுக்கு தடை விதிக்க முன்வருவது மிகவும் வருந்தவேண்டிய விஷயமாகும். அறிஞர் அண்ணா போன்றவர்கள், பெரியார் போன்றவர்கள், தலைசிறந்த கலைஞர் களாகிய ஸ்ரீ டி. கே. ஷண்முகம், கே. ஆர். ராமசாமி, ஸ்ரீ எம். ஆர். ராதா போன்றவர்கள் பல்வேறு முறைகளில் நாட்டிலே சீர்திருத்தக் கருத்துக்கள் உலவும்படியாக பாடுபட்டு வருகிறார்கள். இந்தத் தடை சட்டத்தைக்கொண்டு வருவதால் அந்த முற்போக்குக் கருத்துக்களுக்கே ஒரு பெரும் முட்டுக் கட்டை போடுவதைப்போலத்தான் ஆகும்.

"பல பல காலமாக இந்த நாட்டிலே ஜாதி ஒழியவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஜாதிகளை ஒழித்தபாடில்லை. என் பெயர் ரத்தினம் என்றால் என் பெயருக்குப் பின் ரத்தின கவுண்டர் என்று போட்டுக் கொள்வதும், ரத்தினம் என்ற பெயருடைய ஐயர், ரத்தின ஐயர் என்று போட்டுக்கொள்வதும் இன்றைக்கும் நாட்டிலே இருந்து கொண்டுதான் இருக்கிறது. நாட்டிலேயுள்ள ஜாதிகளை எல்லாம் ஒழிப் பதற்கு முதற்படியாக இனிமேல் ரத்தினம் என்ற பெயருக்கு பின் அவரவர்களுடைய ஜாதியைக் குறிக்கும் பெயர்களையே போட்டுக்கொள்ளக் கூடாது என்றும் அப்படிப்போட்டால் ஆறு மாதம் கடினகாவல் என்று தடை செய்யும் ஒரு சட்டத்தை கொண்டுவரக்கூடாதா? அதைவிட்டு இப் படிச் செய்வது தர்மமாகாது. இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தால் நாட்டிலே பெரிய குழப்பம் உண்டாகும். ஆகவே இதைக் கைவிட்டுவிடும் படியாகக் கேட்டுக்கொண்டு நான் என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

[7th December 1954

* SRI S. DEIVASIGAMANY :—" Mr. Deputy Speaker, Sir, I would only make one or two submissions regarding the legal aspects of this Bill. I had only a cursory glance of this Bill and what struck me was that this Bill was ill-drafted and is not at all suitable to the present-day conditions obtaining in our State. Hon. Members may know that the very elementary principle of Criminal Jurisprudence is that no act or omission will be construed to be an offence unless it is committed with a particular intention. Intention is the main element of any offence. In this case, the Bill seeks to punish persons who commit an act without any particular intention whatsoever. But if simply an act is committed, the person who has committed it will come within the mischief of the Bill that is now contemplated. The provisions that find a place in this Bill are already there in other enactments. The main Act under which offences like this are punishable is the Indian Penal Code. Under that Code, any obscene act or the publication of any book which contains obscene matter is punishable under section 294. Under section 295 any person who outrages the religious feelings of any class of people is punishable. There is another provision under section 499 of the Indian Penal Code under which a person who defames a class of people or a particular person can be punished. But there is an exception in the Indian Penal Code which says that if an act is done in public interest then, it cannot be construed as an offence. Of course, dramas or kathakalakshepams are performed only with a particular intention in view, namely, to make the people to realize that they should not accept the old way of thinking which is not suitable to present-day conditions and which will not help the progress of the country. From time immemorial, these dramas have been the medium by which the illiterate people have been made to realize that they should give up their superstitious beliefs and that what they had been taught hitherto are not correct.

" We must very carefully go through the provisions of this Bill and see that it does not offend the elementary human rights. Now, 'objectionable performance' is defined in the Bill to mean any play, pantomine or other drama which is likely to—

* * * * *

'(vi) outrage the religious feelings of any class of the citizens of India by insulting the religion or the religious beliefs of that class.'

The words 'who intentionally incites the religious feelings of that class' are omitted in this provision. A provision of this kind is likely to produce adverse results. Suppose a group of persons join together and say that the staging of a drama like 'Valli Thirumanam', as suggested by hon. Members, wounds their religious beliefs. Then, what is to happen? Many people have assimilated progressive ideas which, according to them, may even be called religious ideas or beliefs. They believe that they should move with the tide of progressive thought and civilization and that they should diffuse scientific knowledge to everyone in the country. Probably they may say that the old principles are wrong

7th December 1954] [Sri S. Deivasigamany]

and that the new principles alone are the correct ones. If an old-fashioned drama like 'Valli Thirumanam' is staged, these people may say that it offends their sense of justice or scientific truth, which is their religion. Cultured persons who have been educated on modern lines may say that such a drama will offend their feelings and that they will protest against it. They may consider it their sacred duty to do anything in their power to canvass public opinion in their favour, against superstitious beliefs and irrational religious teachings, by means of dramatic performances, public speechs, etc. Even such *bona fide* cases will come within the scope of this particular provision. I therefore submit that if this Bill goes to a Select Committee, it must be very carefully considered and that plenty of time must be given to all the persons concerned to go through the provisions of this Bill carefully. Then only the Bill should be brought before this House. There should be no hurry in this matter at all.''

*SRI C. H. KANARAN :—'' മിസ്റ്റർ സ്പീക്കർ, സർ, വളരെ തിടുക്കത്തിൽ 5 p.m.
13-ാം തിയ്യതിക്കകം തന്നെ സെലക്ട് കമ്മിററി പരിശോധിച്ചു വേണ്ടപ്പെട്ട ഭേദഗതികളോടുകൂടി ഈ സിററിങ്ങിൽതന്നെ പാസ്സാക്കിക്കിട്ടണമെന്നുള്ള അഭിപ്രായത്തോടുകൂടിയാണ് ധനകാര്യമന്ത്രി ഈ ബില്ല് ഇപ്പോൾ അവതരിപ്പിച്ചിട്ടുള്ളത്. ഇത്ര ധൃതി കൂട്ടാനുള്ള കാരണമെന്തെന്നു എനിക്കു മനസ്സിലാകുന്നില്ല. ഈ രാജ്യത്തെ കലാകാരന്മാരെ മാത്രമല്ല മുഴുവൻ ജനങ്ങളെയും ബാധിക്കുന്ന അതിപ്രധാനമായ ഒരു ബില്ല് കൊണ്ടുവന്നിട്ടു ഇത്ര വേഗത്തിൽ അത് പാസ്സാക്കിക്കൊടുക്കണമെന്ന ഗവമ്മേണ്ട് ശാഠ്യംപിടിക്കുന്നതിന്റെ അർത്ഥം മനസ്സിലാക്കാൻ വലിയ വിഷമമായിരിക്കുന്നു.

'' ഈ ബില്ലിന്റെ ഉള്ളടക്കം ഒന്നു പരിശോധിച്ചുനോക്കുകയാണെങ്കിൽ, അതായത്, ഏതു തരത്തിലുള്ള നാടകങ്ങളാണ് അഭിനയിക്കാൻ പാടില്ലാത്തവ, ഏതു തരത്തിലുള്ളവയാണ് അഭിനയിക്കാവുന്നവ എന്നെല്ലാം പറയുന്ന വകുപ്പുകൾ ഒന്നു പരിശോധിച്ചുനോക്കുകയാണെങ്കിൽ നിരോധനത്തിന്റെ പരിധിയിൽ വരാത്ത നാടകങ്ങൾ വല്ലതും ബാക്കിയുണ്ടാവുമോ എന്നുതന്നെ സംശയമാണ്. മലബാറിനെ സംബന്ധിച്ചിടത്തോളം എനിക്കു തോന്നുന്നു ഒന്നോ രണ്ടോ നാടകങ്ങളൊഴിച്ചാൽ ബാക്കിയെല്ലാം ഈ നിയമമനുസരിച്ചു നിരോധിക്കപ്പെടേണ്ടിവരുമെന്ന്. അത്രയും വൈപുല്യവും സർവ്വവ്യാപകത്വവും ഈ ബില്ലിലെ വ്യവസ്ഥകൾക്കുണ്ട്. നിരോധിക്കേണ്ടുന്ന നാടകങ്ങളുടെ കൂട്ടത്തിൽ ഈ രാജ്യത്തിലെ ഭിന്നസമുദായങ്ങൾ തമ്മിൽ അല്ലെങ്കിൽ ഭിന്നവർഗ്ഗങ്ങൾ തമ്മിൽ അകൽച്ചയുണ്ടാക്കുന്ന നാടകങ്ങളേയും നിരോധിക്കാമെന്നാണ് പറയുന്നത്. ഈ രാജ്യത്തു അനവധി ജാതികളുണ്ട്, അനവധി വർഗ്ഗങ്ങളുണ്ട്. ഈ ജാതികളേയും വർഗ്ഗങ്ങളേയും അവസാനിപ്പിക്കുക എന്നുള്ളത് നമ്മുടെ ദേശീയപ്രസ്ഥാനത്തിന്റെ ഉത്ഭവം മുതല്ക്കേ നമ്മുടെ പ്രധാന ലക്ഷ്യങ്ങളിലൊന്നായിരുന്നു. ജാതീയമായ അസമത്വങ്ങൾ ഈ നാട്ടിൽനിന്നു നിർമ്മാർജ്ജനം ചെയ്യാതെ നമുക്കു പുരോഗതിയില്ലെന്നു നാം വിശ്വസിക്കുന്നു. അതുപോലെതന്നെ ഈ രാജ്യത്തെ സാധാരണക്കാരന്റെ കഷ്ടപ്പാടുകളും അവശതകളും പരിഹരിക്കേണ്ടതുണ്ട്. അതിനുള്ള ശ്രമത്തിൽ മുതലാളിമാർക്കും മേൽജാതിക്കാർക്കും രുചിക്കാത്ത പലതും ചെയ്യേണ്ടിവരും. ആ ഉദ്ദേശത്തോടുകൂടി രചിച്ചിട്ടുള്ള നാടകങ്ങൾ എത്രയോ ഉണ്ട്. ഈ ബില്ലനുസരിച്ചു ഏതെങ്കിലും ജാതിക്കാർക്കു രസിക്കാത്തതായ നാടകങ്ങളൊന്നുംതന്നെ അഭിനയിക്കാൻ പാടില്ല. ജാതിവ്യത്യാസത്തിന്നെതിരായി സമരാഹ്വാനം മുഴക്കുന്ന എത്രയോ ഉത്തമനാടകങ്ങളുണ്ട്. ഈ നിയമമനുസരിച്ചു അവയുടെ ഗതി എന്തായിത്തീരുമെന്നാലോചിക്കേണ്ടതാണ്. അതൊന്നും മേൽജാതിക്കാർക്കിഷ്ടപ്പെടുന്നതല്ല. അതുകൊണ്ട് അതെല്ലാം ഈ നിയമമനുസരിച്ചു നിരോധനത്തിന്റെ പരിധിയിൽപ്പെട്ടുപോകും. ഈ രാജ്യത്തെ ധനികന്മാരും ജന്മിമാരും മുതലാളിമാരും ജമിന്ദാർന്മാരും സാധുക്കളായ തൊഴിലാളികളേയും കർഷകരേയും ചൂഷണംചെയ്യുന്നതിനേയും മട്ടിക്കുന്നതിനേയും ചിത്രീകരിക്കുന്ന നാടകങ്ങളുണ്ട്. അത്തരം നാടകങ്ങൾ മുതലാളിമാർക്കും ജന്മിമാർക്കും ജമിന്ദാരന്മാർക്കും ഇഷ്ടമാവുകയില്ല. മുതലാളിവർഗ്ഗത്തെ വേദനിപ്പിക്കുകയും മുഷിപ്പിക്കുകയും ചെയ്യുന്നു എന്ന കാരണം പറഞ്ഞു അത്തരം നാടകങ്ങ

ളേയും ഈ നിയമമനുസരിച്ചു നിരോധിക്കാം. ജാതീയവും വർഗ്ഗീയവുമായ അസമത്വങ്ങൾ അവസാനിപ്പിക്കേണ്ടതു് രാജ്യത്തിൻെറ പുരോഗതിക്കു് അത്യന്താപേക്ഷിതമാണു്. ജന്മിമാരും മുതലാളിമാരും ഈ രാജ്യത്തു നടത്തുന്ന അക്രമങ്ങൾക്കു കയ്യും കണക്കുമില്ല. തൊഴിലാളികളേയും കൃഷിക്കാരേയും മർദ്ദിക്കുന്നു, ചൂഷണം ചെയ്യുന്നു, കഴിയുംവിധത്തിലെല്ലാം ദ്രോഹിക്കുന്നു. പാവപ്പെട്ടവന്നു ഒരു രക്ഷയുമില്ല. ഹരിജനങ്ങളെ മർദ്ദിക്കുക, സ്ത്രീകളെ മാനഭംഗം ചെയ്യുക, വീടു പൊളിക്കുക, തീവെയ്ക്കുക എന്നിങ്ങനെ ഈ നാട്ടിലെ മുതലാളിമാരും ജന്മിമാരും അവരുടെ കിങ്കരന്മാരും ചെയ്യുന്ന ദ്രോഹപ്രവൃത്തികളെ ചിത്രീകരിച്ചു കാണിച്ചു അവയുടെ അറുതിവരുത്തുവാനുള്ള സമരത്തിന്നു ആഹ്വാനം ചെയ്യുകയും ഉച്ചനീചത്വങ്ങളും ചൂഷണവുമില്ലാത്ത ഒരു പുതിയ സമുദായസൃഷ്ടിക്കു ഉത്തേജനം നൽകുകയും ചെയ്യുന്ന എത്രയോ നല്ല നാടകങ്ങളുണ്ടു്. ഈ നിയമമനുസരിച്ചു അതൊന്നും അഭിനയിക്കാൻ പാടില്ല. പിന്നെ നിരോധിക്കപ്പെട്ടേക്കാവുന്നതല്ലാത്ത നാടകങ്ങൾ വല്ലതുമുണ്ടോ എന്നു നോക്കിയാൽ ഇപ്പോഴുള്ള നാടകങ്ങളിലൊന്നുമില്ല. 'ബഹുമാനപ്പെട്ട ഗവർമ്മേണ്ടാണു് ഭരിക്കുന്നതു്. ശ്രീ കാമരാജനാടാരാണു് മുഖ്യമന്ത്രി. അദ്ദേഹം സാധാരണക്കാരൻെറ രക്ഷകനാണു്. പിന്നെ ധനകാര്യമന്ത്രിയുണ്ടു്, ശ്രീ സുബ്രഹ്മണ്യം. അദ്ദേഹം മഹാഗംഭീരനാണു്. മന്ത്രിസഭയിലും ഭരിക്കുന്ന കക്ഷിയിലും ഉൾപ്പെട്ടവരെല്ലാം ഗംഭീരന്മാരും ഉത്തമന്മാരും ആദർശമതികളുമാണു്. അവർ ഭരിക്കുന്ന കാലത്തു രാജ്യത്തു് ക്ഷേമവും ശാന്തിയും സമാധാനവും സുഭിക്ഷവും നിറഞ്ഞുകവിയുകയാണു്' എന്നെല്ലാം പറഞ്ഞു ഭരണകർത്താക്കളുടെ അടിപണിയുന്ന നാടകങ്ങൾ വല്ലതും ഉണ്ടെങ്കിൽ അഭിനയിക്കാം. അല്ലാത്തതൊന്നും അഭിനയിക്കാൻ പാടില്ല. ഈ രാജ്യത്തിൻെറ ഭരണകർത്താക്കളെ മുഷിപ്പിക്കുന്ന യാതൊരു നാടകവും പാടില്ലെന്നു ചുരുക്കം. അതിന്നു ഇങ്ങനെ വളച്ചുകെട്ടി ഒരു ബില്ലിൻെറ ആവശ്യമെന്തെന്നു ഞാൻ ചോദിക്കുന്നു. നേരെ ഒററ വാചകത്തിലതങ്ങു പറഞ്ഞാൽ കാര്യം തീർന്നല്ലൊ.

"ഇനി ഈ ബില്ലനുസരിച്ചു കുററകരമായ ഒരു നാടകം നടത്തിയാൽ പിടികൂടുന്നതു ആരെയെല്ലാമെന്നു നോക്കാം. നാടകം നടത്തുന്നവരെ മാത്രമല്ല, സ്ഥലം കൊടുക്കുന്നവരെ, ടിക്കററ് വില്ക്കുന്നവരെ, അബദ്ധത്തിൽ എന്താണെന്നു നോക്കാൻ പോകുന്നവരെ, ടിക്കററ് വാങ്ങിക്കൊടുക്കുന്നവരെ, സ്ഥലമുടമസ്ഥനെ, എന്നുവേണ്ട നാടകാഭിനയവുമായിട്ടു ഏതെങ്കിലും തരത്തിൽ ബന്ധപ്പെട്ടിരുന്നുവെന്നു സംശയിക്കപ്പെടുന്നവരെയെല്ലാം പിടികൂടാമെന്നാണു് പറയുന്നതു്. ഗവർമ്മേണ്ടിന്നും ഗവർമ്മേണ്ടുദ്യോഗസ്ഥന്മാക്കും രസിക്കാത്ത യാതൊന്നും എഴുതാൻ പാടില്ല, അഭിനയിക്കാൻ പാടില്ല, അതങ്ങു തുറന്നു പറഞ്ഞുകൊണ്ടു തങ്ങൾക്കിഷ്ടമില്ലാത്തതെല്ലാം നിരോധിക്കാനുള്ള ഒരു ബില്ല് തയ്യാറാക്കി അവതരിപ്പിക്കുകയായിരുന്നില്ലേ ഇതിനേക്കാൾ ഭേദം എന്നു ഞാൻ ചോദിക്കുന്നു. ഒററ വാചകത്തിൽ കാര്യം തീരുമായിരുന്നു. എന്തിനിത്രയും കടലാസ് വെറുതെ കളയുന്നു, സമയം കളയുന്നു ?

"കലാകാരന്മാരെ, നിങ്ങൾ കലയെല്ലാം ഉപേക്ഷിച്ചു വേറെ വണി നോക്കിക്കൊള്ളിൻ എന്നു ഒരു നോട്ടീസ് കൊടുക്കുകയാണു് ഈ ബില്ല്കൊണ്ടു ചെയ്യിരിക്കുന്നതു്. സിനിമാശാലകളും നാടകശാലകളും കലാമണ്ഡലങ്ങളുമൊന്നും ഇനി ആവശ്യമില്ല ; അവയെല്ലാം താമസസ്ഥലങ്ങളൊ പണിപ്പുരകളൊ ആക്കി മാററിക്കൊള്ളുക എന്നങ്ങു പറയുകയായിരുന്നു നല്ലതു്. കലാപരമൊ സംസ്കാരപരമൊ ആയ യാതൊരു പ്രവർത്തനങ്ങളും ഈ രാജ്യത്തു നടക്കരുതെന്നുള്ള ഉദ്ദേശത്തോടുകൂടി കൊണ്ടുവന്നിട്ടുള്ള ഒരു ബില്ലാണിതു്. ഒരു കാര്യം പ്രത്യേകം ശ്രദ്ധിക്കേണ്ടതുണ്ടു്. മറേറതു ബില്ല് വരുമ്പോഴും കോൺഗ്രസ്സ് ബെഞ്ചുകളിൽനിന്നു ചിലരെങ്കിലും സംസാരിക്കുക പതിവാണു്. നേരെമറിച്ചു ഇന്നു നോക്കുക. ഈ ബില്ലിനെ അനുകൂലിച്ചിട്ടു നാട്ടിൽ ചെന്നാൽ എന്തായിരിക്കും അനുഭവമെന്നു അവർക്കു നല്ലവണ്ണം അറിയാം. അതുകൊണ്ടാണു് മണി അഞ്ചരയായിട്ടും കോൺഗ്രസ്സ് ബെഞ്ചുകളിൽനിന്നു ഒരൊററ കുഞ്ഞുപോലും നാവനക്കാതിരിക്കുന്നതു്. എൻെറ പ്രസംഗം കേട്ടിട്ടു ഇനി പ്രസംഗിച്ചേ അടങ്ങു എന്നു വിചാരിച്ചു ആരെങ്കിലും ചാടിപ്പുറപ്പെടുകയാണെങ്കിൽ തന്നെയും ഞാൻ തീർത്തു പറയുന്നു അതു് ആക്കാനുംവേണ്ടിയുള്ള ഓക്കാനിക്കൽ മാത്രമായിരിക്കും ; ആത്മാർത്ഥതയുടെ കണികപോലും അതിലുണ്ടാവുകയില്ല എന്നു്. ഈ ബില്ല് പുറത്തെടുക്കരുതെന്നാണു് എൻെറ അഭ്യർത്ഥന. അത്രയ്ക്കു ദുർഗ്ഗന്ധം വമിക്കുന്ന ഒരു സാധനമാണതു്. പുസ്തകങ്ങളേയും നാടകങ്ങളേയും ചുട്ടുകരിക്കുകയും കലയേയും സംസ്കാരത്തെയും കുഴിച്ചുമൂടുകയുംചെയ്ത നാസി ഗവർമ്മേണ്ടിൻെറ പാരമ്പര്യമാണു് ഈ ബില്ല്മൂലം ഇവിടത്തെ ഗവർമ്മേണ്ടും സ്വീകരിച്ചിരിക്കുന്നതു്.

മന്ത്രിക്കസേരകളിൽ ഇരിക്കുന്നവരോടും കോൺഗ്രസ്സ് ബെഞ്ചുകളിൽ ഇരിക്കുന്നവരോടും ഞാൻ ഒന്നു ചോദിക്കുന്നു. മട്ടനവും ചൂഷണവും അവസാനിപ്പിച്ചു ഉച്ചനീചത്വങ്ങളില്ലാത്ത ഒരു പുതിയ വ്യവസ്ഥിതി സൃഷ്ടിക്കുവാനാണ് നിങ്ങൾ നിലകൊള്ളുന്നതെന്നു നിങ്ങൾ പ്രസംഗിക്കാറുണ്ടല്ലോ; ആ പ്രസംഗങ്ങളിൽ അല്പമെങ്കിലും ആത്മാർത്ഥതയുണ്ടോ? നാടകം തുടങ്ങിയ കലാപ്രസ്ഥാനങ്ങളിലൂടെ ഈ നാട്ടിൽ മാററങ്ങൾ ഉണ്ടായിക്കൊണ്ടിരിക്കയാണ്. ഒരു പുത്'യ വ്യവസ്ഥിതിക്കു വേണ്ടിയുള്ള ആഹ്വാനം മുഴക്കിക്കൊണ്ടിരിക്കുകയാണ്. അതിനെ തടയുവാനാണ് ഈ ബില്ല് കൊണ്ടുവന്നിരിക്കുന്നത്. ഈ രാജ്യത്തിന്റെ അഭിവൃദ്ധിയേയും പുരോഗതിയേയും ആഗ്രഹിക്കുന്ന ആർക്കും ഈ ബില്ലിനെ അനുകൂലിക്കാൻ സാദ്ധ്യമല്ല. അതുകൊണ്ട് ഇതിനെ സെലക്ട് കമ്മററിക്കയച്ചു സമയം കളയാതെ അപ്പാടെ തന്നെ കുഴിച്ചുമൂടണമെന്നാണ് എന്റെ ശക്തിയായ അഭിപ്രായം."

* SRI A. GOVINDASAMY NAYAGAR :—" கனம் சபா 5-16 p.m.
நாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் ஸ்ரீ சுப்ரமண்யம் அவர்கள் நாடகங்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு புதிய மசோதாவைக் கொண்டு வருகின்றார். அவர் இந்த மசோதாவை க்கொண்டுவருகிற நேரத்தில் நாட்டு கலைஞர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க இந்த மசோதா வருகிறதென்று அவர் சொல்வதானது தமிழ்நாட்டில் நிலவுகின்ற ஒரு பழமொழி எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. 'ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுததாம்'. அதுமாதிரி கலைஞர்களுக்கு ஆபத்தைத் தேடுகின்ற முறையிலே இந்தச் மசோதாவைக் கொண்டுவருகிறார். கலைஞர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க அரசியல் சட்டத்தைச் சுட்டிக்காட்டுகிறார். இன்றையதினம் இருக்கின்ற சட்டமே போதுமானது. எந்த ஒரு நாடகத்தையும் போலீஸ் அதிகாரிகள் எப்பொழுது தடுக்கவேண்டுமென்று நினைத்தாலும் தடுப்பதற்குப் போதுமான வசதி இருக்கிறது. நாடக நகலைப் போலீஸ் அதிகாரி பார்வையிட்டு அனுமதி அளித்தால்தான் அந்த நாடகம் நடைபெறுகிறது. ஆனால், இந்த மசோதா வருவதற்கு யார் பின்னால் காரணமாக இருக்கிறார்கள் என்பதைப் பரிசீலிக்கவேண்டும்.

" சமீப காலமாக நமது மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் ராமாயணப் பிரசங்கம் செய்து வருகிற இந்த நேரத்தில் இந்த மசோதா வருகின்றது. கனம் மந்திரி அவர்கள் பகுத்தறிவுப் பிரசாரத்திற்கு எதிராக இருக்கிறார்கள். இப்பொழுது இருக்கின்ற கனம் மந்திரி அவர்கள் நவாப் ராஜமாணிக்கத்தின் நாடகங்களுக்கு போவதையும், அவைகளைப் புகழ்வதையும் பார்க்கின்றோம். ஆனால், ஏற்கெனவே முதல் மந்திரியாயிருந்த ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் எம். ஆர். ராதா நடத்திய 'ரத்தக் கண்ணீர்' நாடகத்தைப் பார்த்திருக்கிறார். அதைப்பற்றி அவர் புகழ்ந்து பேசியிருக்கிறார். ஜஸ்டிஸ் ஸ்ரீ சோமசுந்தரம் அவர்களும் அதைப் பார்த்திருக்கிறார். அந்த நாடகத்தை நீதிபதியே பார்த்திருக்கும்போது இன்றைய ஆட்சியாளருக்கு அது பிடிக்கவில்லையென்றால் அதன் காரணம் என்னவென்று தெரியவில்லை. மத்திய அரசாங்கத்திலிருந்து இந்த அரசாங்கத்திற்குத் தாக்கீது வந்திருப்பதாக அறிகின்றோம். பிராம்மணர்களுடைய மனதைப் புண்படுத்தக்கூடிய, இந்துக்களுடைய மனதைப் புண்படுத்தக்கூடிய அளவு நாடகம் தென்னாட்டில் நடக்கிறது . . ."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" May I inform the hon. Member that his statement that we have received some communication from the Centre in this connexion is absolutely wrong? "

* SRI A. GOVINDASAMY NAYAGAR :—" அப்படி வரவில்லையென்றால் நான் சொன்னதை மாற்றிக்கொள்கிறேன். ஆயினும், இன்றையதினம் நம்முடைய சர்க்கார் எந்த ராஜ்யத்திலும் இல்லாத ஒரு சட்டத்தை சென்னை ராஜ்யத்தில் மட்டும் கொண்டு வரவேண்டிய காரணம் என்னவென்று நினைக்கும்போதுதான் நான் சொன்னதை ஊகிக்க இடம் இருக்கிறது. இல்லாவிட்டால் அந்தப் பிரச்னையை எழுப்புவதற்குக் காரணம் இல்லை.

[Sri A. Govindasamy Nayagar] [7th December 1954

"நம்முடைய நாட்டில் ஜாதி மதச் சார்பற்ற சர்க்கார் இருக்கும் போது மதத்திற்குப் பாதுகாப்பு அளிக்கின்ற முறையில்தான் இந்த மசோதா வருகிறது. இன்றையதினம் நாடக உலகிலே அறிவு வளர்ச்சிக்குப் பிரசாரமும் சமுதாய சீர்திருத்தமும் நடைபெற்று வருவதைத் தடுக்கவே தான் இந்த மசோதா வருகிறதென்று சொல்ல விரும்புகிறேன். நாடகங்களைப் பார்ப்பதற்கு முன்னாலேயே ஒரு அதிகாரி 'இந்த நாடகம் குற்ற முடையது' என்று தடுக்கின்ற அளவுக்கு சட்டம் இருக்குமானால் நாடகக் கலை வளருமா என்று நான் கனம் நிதி மந்திரி அவர்களைக் கேட்கின்றேன்.

"புத்தகங்கள் வெளியிடுவதற்கும், பத்திரிகைகள் வெளியிடுவதற்கும் சில சட்டதிட்டங்கள் இருக்கின்றன. அவைகளை யெல்லாம் கட்டுப்படுத்த சட்டங்கள் இருக்கிறபோது, நாடகங்களைக் கட்டுப்படுத்துவதற்கு மட்டும் இத்தகைய சட்டம் வரவேண்டிய அவசியம் இல்லை. சிறு சிறு அதிகாரிகள் அவர்களுடைய விருப்பு வெறுப்புக்கேற்ற முறையிலே எத்தகைய நாடகத்தையும் தடுக்கலாம். நாடகக் கொட்டகைக்காரருக்கும் ஆறு மாத சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கலாம். அந்த முறையில் இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது. தண்டனைக்குட்பட வேண்டியிருக்கும் என்ற பயத்தில் நாடகக் கொட்டகைக்காரர் இடம் கொடுக்க பயப்படுகிறார்கள். ஏனென்றால் அவர்களெல்லாம் வழக்கறிஞர்களாக இருக்கமுடியாது. இம்மாதிரியெல்லாம் தடைகள் விதிக்கப்பட்டால் நாட்டில் அறிவு பிரசாரமே நடக்காது.

"ஸ்ரீ கே. டி. ராஜு அவர்கள் சொன்னதைப்போல புராண சம்பந்தமான நாடகங்களைத்தான் நடத்தலாம் என்று ஒரு மசோதாவை வேண்டுமானால் கொண்டுவந்துவிட்டால் இத்தகைய ஒரு மசோதாவே வரவேண்டிய அவசியம் இருக்காது அல்லவா? அதற்குப் பல ஷரத்துக்களைக்கூறி பொது மக்களை ஏமாற்றுகிற அளவுக்கு, நடாகக்கலையை அழிக்கின்ற அளவுக்கு வரவேண்டிய அவசியம் இல்லை. புராணக் கதைகளைப் பார்க்கும்போது என்னைப்போன்ற பகுத்தறிவில் நம்பிக்கை உள்ளவர்களுக்கு மனம் புண் படுகிறது. சர்க்கார் பகுத்தறிவை நம்பச் சொல்கிறார்களா? புராணத்தை நம்பச் சொல்கிறார்களா? எனக்குத் தெரியவில்லை. பகுத்தறிவுக்குகந்தாற் போல் பிரசாரகர்கள் சொன்னால் மக்கள் சிந்தித்துப்பார்த்து அவர்களுக்கு எது சரியென்று படுகிறதோ அதை எடுத்துக்கொள்வார்கள். பகுத்தறிவாளர்களை அடக்கத்தான் இந்த மசோதா வருகிறது. யாரோ ஒரு குறிப்பிட்ட நபரைக் கெடுப்பதற்காக இந்த மசோதா கொண்டுவரவில்லை என்று சொல்வது சரியல்ல என்று நான் சொல்கிறேன்.

"புராண காலத்தில் நடந்த கதைகளை யார் ஒத்துக்கொள்வார்கள்? கிருஷ்ணன் பெண்கள் நீராடும்போது அவர்களுடைய புடவைகளைத் திருடி மரத்தின்மேலே கட்டிவிட்டு பெண்களை நிர்வாணமாக்கிய காட்சிகளை நாடகத்தில் நடித்துக்காட்டினால் யார் அதை ஒத்துக்கொள்வார்கள்? பெண்கள் அருவருப்பு அடையக்கூடிய முறையில் அல்லவா அது இருக்கிறது? புராண நாடகங்களை நம்பாதீர்கள் என்று பிரசாரம் செய்ய எத்தனை அணுகுண்டு அய்யாவுகள், விபூதி வீரமுத்துக்கள் வழக்கறிஞர்கள் தோன்றினாலுங்கூட பகுத்தறிவுக்குகந்த நாடகங்களைப் பார்க்க மக்கள் திரள் திரளாகப் போய்க்கொண்டுதான் இருக்கிறார்கள். 1,500 பேர்களுக்குமேல் மதுரையில் நடந்த நாடகத்தைப் பார்த்தார்கள். ஆனால் வெளியே கலாட்டா செய்ததாகச் சொல்லுகிறார்கள். நான் சொல்லவில்லை. 'பிக்கெட்டிங்' கில் ஈடுபட்டார்கள் என்று. கனம் நிதி மந்திரி அவர்கள் சொன்னார்கள். ஆகவே, மதத்தில் நம்பிக்கையுள்ளவர்கள், கடவுளை நம்புகிறவர்கள் இந்தக் காரியத்தைச் செய்கிறார்கள். உண்மையிலேயே இந்த சர்க்காரில் இருக்கின்ற மந்திரிகள் எவ்வளவு பேருக்குக் கடவுள் பக்தி இருக்கிறதென்று கேட்கிறேன். கனம்நிதி அமைச்சர் அவர்கள் நெற்றியில் ஒன்றும் இட்டுக் கொள்ளவில்லையே! 'நீறில்லா நெற்றி பாழ்' என்று ஒரு பழமொழி இருக்கிறது. ஸ்ரீமான் பழனிசாமி கவுண்டர் அவர்கள் தன்னுடைய நெற்றியில் விபூதி அணிந்திருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார். அவர் ஒரு சிவ பக்தர். ஆனால் மந்திரிகள் நெற்றியிலே ஒன்றுமே இல்லை. நாமத்தைப்பற்றி வடகலை நாமம் தென்கலை நாமம் என்ற விஷயத்தில் ஒரு மாறுபட்ட கருத்து இருக்கிறது. இது ஆராய்ச்சிக்குரியது. நான் இவைகளைச் சொன்னால் மந்திரிகள் மனது புண்படும்.

7th December 1954] [Sri A. Govindasamy Nayagar]

"இந்த சட்டத்தின்படி சாதாரண ஒரு சப்-இன்ஸ்பெக்டருக்கும் ஒரு நாடகத்தைத் தடுத்துவிடக்கூடிய அதிகாரம் இருக்கிறது. ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து, ஆயிரக்கணக்கான ஜனங்கள் பார்ப்பதற்காக வந்திருக்கும் ஒரு நாடகத்தை ஒரு சப்-இன்ஸ்பெக்டர், தன்னுடைய கருத்துக்கு அது குற்றமென்று பட்டுவிட்டால், தடைசெய்துவிடலாம் என்று விதி இருக்கிறது. அப்படிச் செய்தால் நாடகம் பார்க்கவந்தவர்களெல்லாம் ஏமாற்றமடைந்து திரும்பிச் செல்லவேண்டியிருக்கும். ஒரு ஊரிலுள்ள காங்கிரஸ்காரருக்கு அல்லது பெரிய பணக்காரருக்கு அல்லது செல்வாக்கு உள்ளவருக்கு ஒரு குறிப்பிட்ட நாடகம் பிடிக்கவில்லையென்று நினைத்து, அந்த நாடகம் நடக்கக்கூடாதென்று அதிகாரியிடம் சொன்னால் அதைச்சுலபமாகத் தடுத்துவிடலாம். அத்தகைய அதிகாரங்களை சாதாரண அதிகாரியிடம் கொடுப்பதற்குப் பதிலாக ஜில்லா கலெக்டரிடம் கொடுத்திருந்தால்தான் நாடகக் கலைக்குப் பாதுகாப்பு அளிக்கமுடியும். உள்ளபடியே இன்றையதினம் மந்திரிகளெல்லாம் நவாப் ராஜமாணிக்கம் நடத்தக்கூடிய நாடகங்களை மட்டும் பார்ப்பதற்குப் பதிலாக, இன்றையதினம் ராயப்பேட்டையில் நடக்கப்போகிற 'இன்பக் கனவு' என்னும் நாடகத்திற்குத் தலைமை தாங்கி பார்க்கவேண்டும். அத்தகைய நாடகங்களை கனம் மந்திரி அவர்கள் பார்த்தால் அவருக்கு ஒரு தெளிவு ஏற்படும். பழைய கதைகளை மட்டும் தான் படித்திருக்கிறார். அதையே திரும்பத் திரும்ப பார்த்து சந்தோஷப்படுவதை விட நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக நடத்தப்படும் மற்ற நாடகங்களையும் பார்த்தால் உண்மையாகவே கனம் மந்திரி அவர்களுக்கு புதிய கருத்துக்கள் தோன்றி அவைகள் நாட்டு மக்களுக்கு நன்மை பயப்பனவாக இருக்கும். ஆகவே, இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டிய அவசியமே இல்லை. இதைக் கைவிடுவதுதான் நியாயம்.

"மதுரை நிகழ்ச்சி மற்ற இடங்களில் வந்துவிடக்கூடாது. ஸ்ரீ காமராஜ் அவர்கள் ஆட்சியில் அமைதி இருக்கிறது; நாட்டில் அவருடைய ஆட்சியின் காரணமாக அமைதி நிலவி வருகிறது. அந்த அமைதியைக் குலைத்து ஆட்சிக்குப் பங்கம் விளைவிக்கவேண்டும் என்று யாரோ ஒரு சிலர் சூழ்ச்சி செய்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஸ்ரீ காமராஜ் அவர்களுடைய ஆட்சிக்கு ஆபத்தை விளைவிக்க வேண்டுமென்ற சூழ்ச்சியின் காரணமாக சதி நடக்கிறது. இதற்கு இடங்கொடுக்கக்கூடாது என்று கேட்டுக்கொண்டு, கனம் நிதி மந்திரி அவர்கள் நிதி மந்திரியாகவே இருக்கவேண்டுமானால் அவர்கள் இந்தச்சட்டத்தைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்."

* SRI C. KANDASAMY :—"கனம் சபாநாயகர் அவர்களே, காலை முதற்கொண்டு இந்த மசோதாவை எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் ஏக மனதாக எதிர்த்துப் பேசிக்கொண்டுவருவதை இந்த அரசாங்கம் நன்கு கவனித்துக்கொண்டு வந்திருக்குமென்று நினைக்கிறேன். இந்தச் சட்டத்தை மேலெழுந்தவாரியாக பார்க்கும்போது இந்த சட்டசபையில் இப்பொழுது திடீரென்று கொண்டுவருவதற்கு காரணம் என்னவென்று தோன்றவில்லை. ஒரு தேசத்தில் நெருக்கடியான அமளி ஏற்படுகின்ற காலத்தில் அங்குள்ள நிலைமையைச் சமாளிக்க அதிகாரத்தில் உள்ளவர்கள் சட்டசபையைக் கலைத்துவிட்டு, இந்த மாதிரியாக உடனடியாக இன்னனென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று உத்தரவிடுவார்கள். ஆனால் இங்கு அம்மாதிரியான என்ன அமளி ஏற்பட்டுவிட்டது? அதிலும் கலை சம்பந்தமாக இம்மாதிரியான நடவடிக்கைகள் கொண்டுவருவதற்கு காரணமென்ன என்பதை தெரிவிக்க விரும்புகிறேன். 5-25 p.m.

"அடுத்தபடியாக, நாடகக்கலை நாட்டிற்கு மிக முக்கியமானது என்று சொல்லத் தேவையில்லை. எந்தக் காலத்தில் தமிழ் ஏற்பட்டதோ, அந்தக் காலத்திலிருந்து அது முத்தமிழ் என்றெல்லாம் போற்றப்பட்டு வந்திருக்கிறது. அதிலே நாடகத் தமிழ் மிகவும் பிரசித்திப் பெற்றுள்ளது என்று இங்குள்ள மந்திரிகளுக்கும் நன்கு தெரியும். இந்த நாடகக்கலை சர்வ ஜனங்களிடையே முற்போக்கு கருத்துக்களைப் பரப்புவதற்கு மிகவும் பயன்பட்டு வருகின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. மற்ற எல்லாக் கலைகளைக் காட்டிலும் இக்கலைக்கு ஒரு தனிச் சிறப்புண்டு. இந்த நாடகக்

[Sri C. Kandasamy] [7th December 1954

கலையானது கிராமப் புறங்களிலே பார்த்தால், தெருக்கூத்து உருவமாக யாதொரு செலவுமின்றி மக்கள் பல மணி நேரம் ஆனந்தமாக ரசித்து மகிழ்ச்சியடையக்கூடிய நிலையில் இன்றும் உள்ளது. அப்படி இருந்து கொண்டிருக்கும்படியான இந்நாடகக் கலையை தடை செய்யும் அதிகாரத்தை அரசாங்கத்தார் திடீரென்று தங்கள் கையில் வைத்துக் கொள்ளும்படியான நிலைமை என்ன நாட்டில் ஏற்பட்டுவிட்டது? தாங்கள் இஷ்டப்பட்டால், தங்கள் இஷ்டப்படி நடிக்க வேண்டுமென்ற வகையிலே இந்த நாடகக்கலையை தாங்கள் வைத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புவது ஏன் என்று தெரியவில்லை.

"1876-ம் வருஷத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தை இப்போது திருத்துவதற்கு முன் வந்தாலாவது பரவாயில்லை. அதுபோன்று இன்னும் பலவித சட்டங்கள் திருத்துவதற்கு இருக்கின்றன. அவைகளையெல்லாம் திருத்துவதற்கு இதுவரை முன்வரவில்லை. பல சட்டங்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் இருந்ததுபடியே இன்னும் அமுல் நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் இந்த நாடகத் துறையில் மட்டும் ஏழு வருஷ காலத்துக்குப்பிறகு, அதுவும் கடந்த இரண்டு மாதங்களுக்குள்ளாக இந்தச் சட்டம் கொண்டுவரப்படுவதின் அவசியமென்ன? திருத்துவது முற்போக்காக இருந்தாலும் பரவாயில்லை, பிற்போக்காக அல்லவா இருக்கிறது. அதுவும் கலையை எங்கள் இஷ்டப்படி வைத்துக்கொள்வோம் என்று சொன்னால், அது என்ன அரசாங்கம் என்றுதான் நினைக்கவேண்டியிருக்கிறது. கலைஞர்கள் இதை ஒருநாளும் சகித்துக்கொண்டிருக்கமாட்டார்கள். இதுபற்றி தமிழகத்திலே ஒரு போராட்டம் நடக்கப் போவதை இந்த அரசாங்கம் பார்க்கப்போகின்றார்கள் என்பதை குறிப்பிட விரும்புகின்றேன்.

"கலைமிகவும் புனிதமானது. அது எல்லா மக்களாலும் வரவேற்கப்படுவது. அது சமுதாயத்திலே ஒரு சிறந்த கருத்தை பரப்பும் கருவியாக விளங்குவது. கலையை கொலை செய்யும் காலம் மலையேறிவிட்டது. இன்றுள்ள மக்களுக்கு தேவையானது கருத்துள்ள காவியங்கள். அது தியாகராஜ கீர்த்தனையாக இருந்தாலும் சரி, பரத நாட்டியமாக இருந்தாலும் சரி, குறவைக் கூத்தாக இருந்தாலும் சரி, எதுவும் இன்றிருக்கக்கூடிய மக்களின் சூழ்நிலைக்கேற்றவாறு, அந்த வாழ்வின் அடிப்படையையொட்டிய கருத்தாக இருக்கவேண்டுமே யொழிய, இன்றையதினம் அதிலே கலை இருக்கிறது. ஆகவே ஆனந்தப்படுங்கள், ரசியுங்கள் என்று கூறும்படியான காலம் மலையேறிவிட்டது என்பதைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். இப்போது ஒரு வகையில் இந்தக் கலையையும் எங்கள் அதிகாரத்தின்கீழ் வைத்துக்கொள்ளுகிறோம் என்பது ஏன் என்று தெரியவில்லை. இன்று வரை சமூகத்தில் எந்தக் கிளர்ச்சியை இந் நாடகம் உண்டுபண்ணிற்று என்று இவர்களால் சொல்லமுடியுமா? இந்த ஏழு வருஷகாலமாக தடை செய்யாமல், அப்போது எல்லாம் இந்த வகுப்புவாதத்தை அடக்காமல், இன்று ஏதோ ஒரு சில பணக்காரர்களின் நன்மைக்காக, கலைஞர்களால் கூறப்படும் கருத்தை அவர்களால் சகிக்கமுடியாமல் இருப்பதற்காக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுவதைப்போல் இருக்கும். இந்த மசோதாவை இந்தச் சபைக்கு கொண்டுவரலாமா? இதற்கு அரசாங்கம் ஆதரவு அளிப்பது குற்றமல்லவா? நண்பர் கே. டி. ராஜூ அவர்கள் குறிப்பிட்டதுபோல் மக்கள் இந்த நாடகங்களைத்தான் நடிக்கலாம் என்று ஒரு லிஸ்ட் தயாரித்துவிடலாமே? அப்போது இம்மாதிரியான கருத்துள்ள நாடகங்களே இல்லாமல் போய்விடுமே. இன்று கலையை எப்படி மதிப்பிடுகின்றார்களென்றால், எங்களுக்குப் பிடிக்காத நாடகங்களை தடை செய்வோம், நீங்கள் வேண்டுமானால் கோர்ட்டில் வாதாடி இரண்டு மாதங்களுக்குப்பின் நடைமுறைக்குக் கொண்டுவாருங்கள், அப்பொழுதும் நாங்கள் மீண்டும் தடை செய்வோம் என்ற விதத்தில் இருக்கிறது. இது எப்படி இருக்கிறது என்றால் ஹிட்லர் அவர்கள் கலையால்தான் நாட்டில் மக்களிடையே புரட்சிப் பரவுகிறது என்பதற்காக, பேசவும் எழுதவும் உரிமை வழங்குவது தன்னிஷ்டப்படி கையாண்டதுபோல் இருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் ஜனநாயக ஆட்சியில் அது சரியல்ல.

7th December 1954] [Sri C. Kandasamy]

"எந்த அரசாங்கம் கலையை தன் கையில் வைத்துக்கொள்ள விரும்புமென்றால், மிகவும் பலஹீனமான நிலையில் தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ளமுடியாத நிலையில் இருக்கும் அரசாங்கமேயாகும். இம்மாதிரி கலையைத் தன் கையில் வைத்திருக்க விரும்பும் அரசாங்கத்தை சரித்திரத்திலேயே பார்க்க முடியாது. அம்மாதிரியான நிலைமை என்ன ஏற்பட்டுவிட்டது? இப்போது இந்தப் பக்கத்தில் இருப்பவர்கள்கூட, இப்பொழுது காமராஜர் தலைமையிலே ஸ்திரமான சர்க்கார் அமைந்திருக்கிறது, இந்த சர்க்காரானது ஒழுங்காக, ஒருவித இடையூறுமின்றி நடக்கின்றது என்று சரமாரியாக கூறியுள்ளார்களே. அப்படியிருக்கும்போது அப்படி என்ன குடி முழுகிப்போகின்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது? அப்படியிருந்தும் மோசமான கலை வளருகின்றது என்று சொன்னால் ஏன் அவர்கள் இது மக்களின் திரண்ட கருத்துக்கு எதிராக அமைந்திருக்கிறது என்று கூறி நிறுத்தியிருக்கக்கூடாது? இவைகளையெல்லாம் ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்றபோது, இப்பொழுதுள்ள சட்டத்தினால் கொட்டகை தருவோர், திரை இழுப்போன் முதலியவர்கள்கூட இதனால் பாதிக்கப்படுகின்றார்கள். இவைகளைப் பார்க்கும்போது, இனிமேல் நாடகங்களே நடைபெறக்கூடாது என்ற எண்ணத்தோடுதான் இந்தச் மசோதா கொண்டுவரப்படுகின்றது என்று கூறினாலும் மிகையாகாது.

"வைதீக நாடகங்களிலும் ஆபாசங்கள் இருக்கின்றன. மற்ற நாடகங்களிலும் ஆபாசங்கள் இருக்கின்றன. இரண்டையும் மக்கள் பார்க்கிறார்கள், புரிந்தும் கொள்கிறார்கள். ஆகவே அரசாங்கம் அவர்களுடைய அபிப்பிராயங்களுக்கு ஏற்றாற்போல் திருத்தங்கள் செய்வதில் உதவி செய்ய வேண்டுமே தவிர, அவர்கள் வக்கீல் வைத்து வாதாடும்படியான நிலைமைக்கு கலைஞர்களின் உரிமைகளை தங்கள் கையில் வைத்துக்கொள்ளக் கூடாது. ஆகவே இந்த மசோதாவினுடைய நோக்கம் தவறு என்பதை குறிப்பிட விரும்புகிறேன். எது ஆபாசமோ, எது வகுப்புவாதத்தை கிளப்பக்கூடியதாக இருக்குமோ அவைகளைத் தவிர்க்க வழி செய்யவேண்டுமே ஒழிய, ஏதாவது ஒரு சாக்கு வைத்துக்கொண்டு, இன்றையதினம் வளர்ந்து வரும்படியான கலையையும், கலைஞர்களையும், வளர்ந்து வரும்படியான கருத்துள்ள நாடகங்களையும் வளராதிருப்பதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்கு ஒரு லகானாக இந்த சட்டம் அமைகிறது என்று நினைக்க வேண்டியிருக்கிறது. இது சட்டமாக மாறுமானால் இது சம்பந்தமாக தமிழ்நாட்டில் நாடகக் கலைக்கே புத்துயிர் அளிக்கக்கூடிய வகையில் ஒரு பெரும் போராட்டம் உண்டாகுமென்று நினைக்கிறேன். இது அரசாங்கத்தை பயமுறுத்துவதற்காக கூறப்படுவதாக நினைக்கக்கூடாது. இது அமுலாகுமானால், இடம் கொடுக்காமல் போனாலும், தடை விதிக்கப்பட்டாலும், இவைகளை மீறியே ஒவ்வொரு பொது இடங்களிலும் கலைஞர்கள் பல நாடகங்களை நடத்திக் காண்பிப்பார்கள் என்று உறுதியாகக் கூறுவேன். கலையில் கை வைத்தால் வாழ்வே ஸ்தம்பித்துவிடும். ஏழை ஜனங்கள் 8 மணி நேரம், 10 மணி நேரம் வேலை செய்துவிட்டு, தங்களுக்கு கிடைக்கும் ஓய்வு நேரத்தில் நிம்மதியாக நாடகங்கள் பார்க்கவேண்டும், சினிமா பார்க்கவேண்டுமென்று நினைத்துக்கொண்டிருப்பவர்கள் என்ன செய்வார்கள்? எனவே அம் மக்களிடையே என்ன நிலைமை ஏற்படும் என்று நிச்சயமாக நாம் கூறமுடியாது.

"இன்னும் பல விஷயங்கள் இருக்கின்றன. இன்றைய நாடகங்களில் மத உணர்ச்சிப் புகுத்தப்படுவதாகக் கூறப்படுகின்றது. புண்படுத்துவதாகவும் கூறப்படுகிறது. ஆனால் அதுபற்றி நாங்கள் கவலைப்படுவதும் இல்லை. ஆனால் காலத்திற்குத் தகுந்தவாறு நிலைமையை மாற்றிக்கொள்ளவேண்டுமென்பதற்காகச் சொல்லுகிறேன். சென்ற காலங்களிலே பரத நாட்டியம் பதம் பிடித்து ஆடும்போது பாடும் அப்பதங்களினுடைய பாட்டையே இப்போது பாடச்சொல்லி பதம் பிடித்து ஆடச்சொன்னால் அதனுடைய அர்த்தம் இன்றைக்கு மிகவும் கீழ்த்தரமாகவே காணப்படும். ஆனால் அது அந்தக் காலத்திற்கு உயர்ந்ததாக கருதப்பட்டுவந்திருக்கிறது. ஆனால் இப்பொழுது ஆடும் பரத நாட்டியங்கள் இன்றைய நிலைமைக்கு, இன்றைய வழக்கத்திற்கு உகுந்த மாதிரி

[Sri C. Kandasamy] [7th December 1954

யான முறையிலே புதிய பதங்கள் அமைக்கப்பெற்று ஆடப்படுகின்றது. அன்றைய முறையை அப்படியே காப்பியடித்து ஆடுவதில்லை. ஆகவே இந்த நிலைமையில் காலத்திற்கு தகுந்தவாறு மாற்றிக்கொள்ளவேண்டுமே தவிர, இம்மாதிரியான தடைகள் விதிப்பது நல்லதல்ல. அப்படியே தடைகள் விதித்தாலும் அதைத் தடுக்கமுடியாது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தமாதிரியான விஷயங்களிலே, அரசாங்கம் தலையிட்டுக்கொண்டிருந்தால், அதை ' Totalitarian State " என்றுதான் கூறமுடியும். ஜனநாயக முறைப்படி நடக்கும் சர்க்கார் என்று கூறமுடியாது. ஆகவே இந்த மசோதா கூடாது என்று கேட்டுக்கொண்டு, நியாயமாக இந்தச் மசோதாவை வாபஸ் பெற்றுக் கொள்வதுதான் அழகு, நேர்மை என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்."

MR. SPEAKER :—" The hon. Member Sri M. P. Subramaniam will now speak. After him, the hon. Member Dr. Menon will speak and to-day's debate will then come to a close."

5–35 p.m. * SRI M. P. SUBRAMANIAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ராஜ்யத்தில் நடக்கும் நாடகங்களை கட்டுப்படுத்துவதற்காக ஒரு சட்டம் கொண்டுவர சர்க்கார் இன்று காலையில் ஒரு மசோதாவை இந்த சபையில் விவாதத்திற்கு வைத்திருக்கிறார்கள். இந்த மசோதாவைப்பற்றி அபிப்ராயங்கள் தெரிவிக்கும்படியும், இது செலக்ட் கமிட்டிக்கு விடப்போவதாகவும், நிதி மந்திரியவர்கள் சொன்னார்கள். இந்த மசோதாவை நம் ராஜ்யத்தில் இந்தத் தருணத்தில் கொண்டுவந்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது. எதிர்க் கட்சித் தலைவரும், மற்றும் பல அங்கத்தினர்களும் இம்மாதிரி நாடகத்தைக் கட்டுப்படுத்துவது, மனிதனுடைய உரிமையைப் பாதிக்கக்கூடியது, என்று பல கோணங்களிலிருந்து எடுத்துக் கூறினார்கள். இந்த மசோதா தேவையற்றது என்றார்கள். இந்த மசோதாவினால் நாட்டிலே நடக்கும் நாடகங்கள் அனைத்தையும் தடை செய்யக்கூடிய அளவுக்கு இதிலே ஷரத்துக்களை தயாரித்திருக்கிறார்கள். இப்படியாக மனிதனுடைய உரிமையை பாதிக்கக்கூடிய அளவுக்கு இருக்கும் ஒரு மசோதாவை அவசர அவசரமாக கொண்டுவருவதற்கு என்ன அவசியமிருக்கிறது என்று எனக்கு புரியவில்லை. 10 நாட்களுக்கு முன்தான் இந்த மசோதாவை சென்னை சர்க்கார் கெஜட்டில் வெளியாக்கி இன்று சட்டசபையில் வைத்து மூன்று நாட்களுக்குள் செலக்ட் கமிட்டி அதனுடைய ரிப்போர்ட்டை இந்தச் சபைக்கு சமர்ப்பித்து இந்தக் கூட்டம் கலைவதற்குள் இது சட்டமாக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். என்ன அவ்வளவு அவசரம் ஏற்பட்டது என்று எனக்குப் புரியவில்லை. நாடு சுதந்திரம் அடைந்து ஜனநாயகம் தழைத்தோங்குகின்றது என்று சொல்லப்படும் இந்தக் காலத்தில் இம்மாதிரி நாடகங்களை கட்டுப்படுத்துகின்ற ஒரு மசோதாவைக்கொண்டுவந்து இருப்பதன் நோக்கம் எனக்குப் புரியவில்லை. அதுவும் 80 வருஷங்களுக்குமேல் இயற்றிய ஒரு சட்டத்தை 1954-ம் வருஷத்தில் மக்களின் உரிமைகளை பாதிக்கக்கூடிய வகையில் திருத்துவது மிகவும் விசனிக்கத்தக்கதாயிருக்கிறது. இந்த மசோதாவினால் மக்களுடைய பண்பும் கலாசாரமும் எவ்வாறு வளர்ந்தோங்க முடியும் என்பதை யோசித்துப்பார்க்கவேண்டும். நம் நாட்டில் செய்யப்படும் சட்டங்கள் யாவும் சரிவர நடக்காமல் இருக்கும்போது, இம்மாதிரி ஒரு மசோதாவைக் கொண்டுவந்து மக்களுடைய முற்போக்கு கருத்துக்களையும், எண்ணங்களையும் வளர்ந்தோங்கவிடாமல் தடுப்பது சர்க்கார் செய்யக்கூடிய காரியமல்ல. சர்க்கார் தரப்பார் இம்மாதிரி மசோதாவைக் கொண்டுவந்தால்தான் நாடகங்களின் மூலமாக மக்களுடைய கருத்துக்களை மாற்றுவதை தடை செய்துவிடலாம் என்று நினைத்தார்கள்போலும். இது மிகவும் தவறான எண்ணம். இந்த மசோதா இல்லாமலே சர்க்கார் நாடகத்தைக் கட்டுப்படுத்த பழைய சட்டங்கள் இருக்கின்றன. அப்படியிருக்கும்போது, 10 நாட்களுக்குமுன் பிரசுரிக்கப்பட்ட இந்த மசோதாவுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதுவும் முன்னதாக சர்க்காருக்கு வருமானம் வரக்கூடிய **Betterment Tax** மசோதாவைக் கொண்டுவராமல் இருப்பது எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால்

7th December 1954] [Sri M. P. Subramaniam]

ஒன்றும்ட்டும் புரிந்துவிட்டது. அதாவது இந்த மசோதா மூலமாக முற்போக்கான நாடகங்களை நடிக்கவிடாமல் தடை செய்து மக்களின் பிற்போக்கான கருத்துக்களை அவர்கள் மனதிலிருந்து அகற்ற வழி செய்யாமல் இருப்பதுதான் சர்க்காருடைய நோக்கம். எவ்வளவோ பிரச்னைகளைத் தீர்க்கவேண்டிய இந்த சர்க்கார், இப்போது நாடகங்களை மட்டும் கட்டுப்படுத்த ஒரு மசோதாவைக் கொண்டுவந்திருப்பது என் என்பது எனக்குப் புரியவில்லை. சேலத்தில் நடந்த ஒரு நாடகத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு இந்த நாட்டிலே வேறு எந்த நாடகமும் நடக்காதவாறு ஒரு மசோதாவைக்கொண்டுவந்து தடுக்கப் பார்க்கிறார்கள்."

SRI P. G. KARUTHIRUMAN :—" I rise on a point of order, Sir. இந்தச் சபையில் அங்கத்தினர்கள் வெற்றிலைப்போட்டு மெல்லலாமா ? "

MR. SPEAKER :—" Nobody seems to be chewing."

SRI K. T. RAJU :—" கனம் சபாநாயகர் அவர்களே, வெளியில் போட்டுக்கொண்டு வந்துகூட இங்கே மெல்லக்கூடாதா ? "

MR. SPEAKER :—" நீங்கள் பேசாமலேயே இருந்துவிட்டால் பரவாயில்லை, நீங்களே சொல்லிவிட்டதால் தயவு செய்து நீங்கள் வெளியே போய் உமிழ்ந்துவிட்டு வந்துவிடுங்கள். I cannot allow chewing by any hon. Member in the House. It is not proper."

(Sri K. T. Raju who was chewing left the House.)

* SRI M. P. SUBRAMANIAM :—" கனம் மந்திரி அவர்கள் இந்த மசோதாவை பிரேரேபித்த காலத்தில், சேலத்தில் சமீபத்தில் நடந்த அந்த நாடகம் மக்களின் உணர்ச்சிகளை தூண்டுவதாக இருந்ததால் அந்த நாடகம் நடத்தக்கூடாது என்று உத்திரவு பிரப்பிக்கப்பட்டது; ஆனால் அந்த உத்திரவு செல்லுபடியாகாது என்று கோர்ட்டில் தீர்ப்பு அளித்ததினால் அதைக் கடைசியில் தடை செய்யமுடியவில்லை; அதனால்தான் சர்க்கார் இந்த மசோதாவைக் கொண்டுவரும்படியாயிற்று என்று சொன்னார். அதுமாதிரி அந்த நாடகம் எப்படி மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிற்று என்று எனக்குப் புரியவில்லை. அது எப்படியிருந்தாலும், இந்த மசோதாவில் இவ்வளவு கடினமான ஷரத்துக்கள் என் சேர்க்கப்பட்டது. நாம் இந்தச் சட்டத்தில் கொண்டுவந்திருக்கக்கூடிய ஷரத்துக்களைப் பார்க்கும்போது, நாடகங்கள் அனைத்தையும் இந்தச் சட்டத்தின்மூலமாக தடை செய்ய முடியும். இந்த சட்டத்தை அமுலாக்கும் சர்க்கார் இந்த நாடகங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரிகளுக்கு அவ்வளவு அதிகாரம் கொடுத்திருக்கிறது. பொதுவாக இந்த நாடகத்தில் சொல்லப்படும் கருத்துக்கள் நாட்டிலுள்ள மக்களின் கருத்துக்களைச் சீர்திருத்தும் வகையில்தான் இருக்கின்றன. மக்களின் மனதில் வேரூன்றிக் கிடக்கும் பிற்போக்கான கருத்துக்களை அகற்றி, தூய்மையான வழியில் செலுத்துவதுதான் நாடகத்தின் முக்கியமான நோக்கம். அம்மாதிரி முற்போக்கு கருத்துக்களை நாடகங்களின் மூலமாக எடுத்துரைக்கும்போது அது பல பிற்போக்கான மனிதர்களின் மனதைப் புண்படுத்தலாம். உதாரணமாக ஒரு திருடனைப்பார்த்து 'நீ இனிமேல் திருடக்கூடாது,' என்று சொன்னால் அவனுக்கு கஷ்டமாகத்தான் இருக்கும். இருந்தாலும் அந்தத் திருடனை நல்ல வழிக்குக் கொண்டுவருவது நமது கடமை. மக்களின் தீய பழக்க வழக்கங்களை அகற்றுவதும் எல்லோருடைய கடமை. மக்களிடம் மேடைமீது பிரசாரம் செய்தும், நாடகங்களின் மூலமாகவும் எடுத்துக் காட்டப்படுகிறது. பத்திரிகைகளின் மூலமாகவும் சினிமா மூலமாகவும் கூட இப்பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. அவையெல்லாம் தடை செய்வதற்கு அவசியம் ஏற்படாதபோது நாடகங்களை மட்டும் கட்டுப்படுத்துவது என் என்று எனக்குப் புரியவில்லை. நாடகமும் மற்றப் பிரசார யந்திரத்தைப்போல மக்களை நல்ல பாதையில் கொண்டு செல்வதற்குச் கருவியாகயிருக்கிறது.

" பிரான்சிலும் ரஷ்யாவிலும், நாடகத்தின் மீது எவ்வளவோ தடை விதித்தார்கள். ஆனால் மக்களின் சக்தி வளர்ந்தோங்கி, அந்தத் தடைகள் எல்லாம் உடைபட்டன. ரஷ்யாவில் ஜார் ஆண்ட காலத்தில்

[Sri M. P. Subramaniam] [7th December 1954

நாடகங்களின்மீதும் நாடக ஆசிரியர்கள் மீதும் தடை விதிக்கப்பட்டது. பிரான்சில் விக்டர் ஹியுகோவின் நாடகங்களுக்கு ஏகாதிபத்தியவாதிகள் தடை விதித்தார்கள். ஆனால் அந்தத் தடைகளையெல்லாம் மீறி மக்கள் முன்னேறிக்கொண்டே போனார்கள். ஆதலால் நான் நம்முடைய சர்க்காருக்கு தெரிவிப்பது என்னவென்றால் எவ்வளவு தடைகள் விதித்தாலும், அவைகள் அவர்களைக் கட்டுப்படுத்தாது; அவர்கள் முன்னேறிக் கொண்டுதான் போவார்கள். சாதாரணமாக நாடகங்களின் மூலமாகத்தான் சமுதாய முன்னேற்றம் ஏற்படும். இவைகளின் மூலமாகத்தான் சமுதாயத்தில் ஒரு மாறுதல் அல்லது புரட்சி ஏற்படும். ஆகையால் நாடகங்களை தடை செய்து கட்டுப்படுத்தாமல் இருப்பதோடு இவ்விஷயத்தில் அக்கரை கொண்டு இந்நாடகக்கலை மேலும் மேலும் வளர்ந்தோங்க அரசாங்கம் உதவிசெய்து ஊக்குவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆதலால் இந்த மசோதாவை வாபஸ் பெற்றுக்கொண்டு அப்படி அவசியம் ஏற்பட்டால் சர்க்கார் இப்போது அமுலில் இருக்கும் சட்டத்தையே திருத்தி அமைக்காலம். அதுவும் முடியாவிட்டால் செலக்ட் கமிட்டி கூட்டத்திலாவது, நாடகங்களை பாதிக்கக்கூடாத அளவுக்கு இந்த மசோதாவுக்கு திருத்தங்கள் கொண்டுவருவார்கள் என்று நம்புகிறேன்."

5–45 p.m. * DR. K. B. MENON :—" Mr. Speaker, Sir, I do not wish to tire an already weary House. I shall be very brief in my remarks. Sir, I was not very much impressed or convinced by what the Hon. the Finance Minister said, in introducing the Bill, about either the urgency or the necessity for this Bill. I was, therefore, very mucv interested in hearing the opinions of various hon. Members of the House, and I must say that I have missed the expression of opinion of the right wing of this House. Whether it was an accidental omission or whether it was a self-imposed silence I do not know."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" It is with a view to allow the Opposition Parties to have the entire time."

* DR. K. B. MENON :—" I cannot but maintain that the Bill is very restrictive and, to some extent, repressive. This is evident from the provisions of clause 3 of the Bill. Every sub-clause of that clause progressively restricts freedom in a very sweeping way. I was listening to our lawyer colleagues who spoke on the Bill and who cited the relevant sections in the Indian Penal Code which fulfil all the needs that this Bill is intended to satisfy. I believe that the Indian Penal Code is very comprehensive and complete and covers almost all the criminal perversities that human beings are capable of committing. It is bound to be so because it was framed by a foreign Government which was struggling for its existence in a hostile country. To supplement that Indian Penal Code at a time when we are free and when we are working out our own destiny, I think, is not very necessary. In a democratic country like the one that we are living in, the restrictive provisions of the Indian Penal Code are so comprehensive that it makes one feel that one enjoys freedom more as a matter of sufferance of the Executive than as a right of the individual. To add to this, I think, would be tragic. Freedom has brought a new life to us. The whole country throbs with a new life. There is a renaissance or a revival in almost every walk of life, and it is only right and

7th December 1954] [Dr. K. B. Menon]

reasonable and also sensible on the part of any progressive Government to encourage this revival and allow the change. This new thought-movement that is sweeping the country is shaking the very foundations of all our feudal institutions and feudal ways and habits of thinking. We have a big lag in our culture, a lag of a couple of centuries, brought about by a long period of foreign rule, and unless we encourage this change or this attitude to change that is now visible in this country, it will not be possible for us to skip over this lag and catch up with the rest of the world. How this Government can encourage it is our primary question. I believe that the Government can encourage it not by legislation but by other means. Legislation, I feel, should only support and stabilize a *de facto* situation. Legislation is not the correct method to effect a social change. The healthy, correct and planned way in which a progressive democracy can encourage this change is to encourage the self-expression of the nation and this is done not through legislation but through the deliberate encouragement of the civil liberties of the people. I do accept there may be lapses on the part of the people and often times there may be lapses on the part of the Executive. If we believe in democracy this kind of encouragement, I mean full encouragement of the civil liberties, 5-50 p.m. on the part of the Government will not be a wrong approach even if there be those lapses. As long as we believe in democracy, we must be in a position to encourage and allow people a certain amount of freedom. After the First World War, the German people buttressed the Weimar Constitution with safeguards and it ended in Hitler's rule. In Hyde Park in England, we know that the greatest amount of freedom is allowed. Even then, we have not heard of much misbehaviour there. I am quite sure that it will not be a mistake to allow some amount of freedom of expression to the people even though there may be certain lapses. The only thing that the Government are to do is to prevent obscenity. There are ample provisions in the Indian Penal Code and in the rules and regulations that we have to-day to prevent obscenities. Even the 1876 Act contains ample provision in this regard. So, I do not think there is any necessity at all to have a new repressive Act brought into our legislative armoury."

MR. SPEAKER :—" Tomorrow, after question-time, the Hon. Minister will reply to the debate. The House will now adjourn and meet again at 11 a.m. to-morrow."

The House then adjourned.

APPENDIX.

[Vide answer to starred question No. 88 asked by Sri K. C. Gopalan Unni at the meeting of the Legislative Assembly held on 7th December 1954, page 290 supra.]

As far as the Madras State is concerned, the Malnad tracts lie in South Kanara, Malabar and the Nilgiris districts. The Malnad tracts in South Kanara district is confined to the eastern portions of Coondapur, Karkal, Puttur and Kasaragod taluks. The total number of villages in this area is 256 with an extent of 1,437,416·60 acres. In Malabar district, the Malnad area lies in the hilly and forest lands in the taluks of Kurumbranad, Ernad, Walluvanad, Palghat, Wynaad, Chirakkal and Kottayam taluks with an extent of 1,167,100 acres. In the Nilgiris, the Malnad lies mostly in Gudalur taluk. The area of the taluk is 178,451 acres. Thus the total extent of the Malnad area in this State is 2,782,967·60 acres. The details regarding the names of the villages, area and population of each village are furnished below :—

Area according to firkas—

South Kanara district.

Firka.	Area.	Population 1941 Census.
Sullia firka	137,086·79	32,461
Uppinangadi	77 054·38	18,336
Kokkada	236,589·22	19,110
Belthangadi	157,469 57	26,851
Puttur	14,373·28	5,994
Venur	71,243·72	20,653
Mudabidri	12,377·48	5,099
Karkal	46 673·80	15,668
Ajekar	141,741·96	27,771
Vandse	117,153·68	27,169
Coondapur	56,886·78	8,865
Baindur	98,888·34	7,682
Kota	22,665·20	10,972
Brahmavar	35,777·47	15,993
Kumbla	5,142·34	2,476
Kasaragod	62,253·82	23,341
Hosdrug	95,438·32	17,446
Nileshwar	48,600·45	5,882
	1,437,416·60	291,769

[7th December 1954]

Malabar district.

Villages.	Area.	Population 1941 Census.
Kurumbranad taluk, Kavilampara, Kayakkodi Narippatta and Velliyode.	8,000	33,517
Pillapperuvana, Melavaram, Kayanna amsom and Changroth desom.	12,000	6,445
Kumarannallur	10,000	7,000
Thiruvambadi	15,000	10,000
Vellathupala and Melavaram.	8,400	7,500
Cheriya Meenangad Mala, Padinhara Vetiyora, Mulakullakandi Kunnu, Kattilpara Mala, Moothakuttikkal and Thotumala.	2,000	8,500
	55,400	72,962
Ernad and Walluvanad taluk and Attapady.	320,000	(Not given.)
Nilambur	115,000	(Not given.)
	435,000	
Palaghat taluk, Walayar and Varalpadi.	3,200	30
Wynaad taluk	525,000	101,425
	525,000	101,425
Chirakkal taluk, Vayakkara, Peringome, Thatikadavu, Kuttur, Naduvil, Nediyanga, Eruvassi, Kallivad and Padiyur.	140,000	24,000
	140,000	24,000
Kottayam taluk, Kuthuparamba, Manthana, Vekkalam, Tholambra, Kannavatu, Kolavad, Chittariparamba and Payilur.	8,000	..
	8,000	..

[7th December 1954

Malabar district—cont.

Villages.	Area.	Population 1941 Census.
Mattanur firka, Arlam, Payam, Thillankuri, Sivapuram, Muzhakunna and Kizhur.	300 to 500	..
	300 to 500 (500)	..
	1,167,100	198,387

Nilgiris district.

Villages.	Area.	Population 1941 Census.
Gudalur taluk	178,451	34,246
	2,782,967·60	524,402

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS